# இளவேனில்



## கேசி தமிழ் மன்றம்

இதழ் 17 - தை 2020

*Illavenil – Casey Tamil Manram Inc*

*ISSN 2200-789X*




# Looking for Finance?

## Ask the Expert

## Rakesh Gupta

**0433 511 655**

# We Simplify the Loan Process for You

**Home Loan** **Personal Loan** **Car Loan** **Commercial Loan**

Call **1300 511 655**

ARG FINANCE

Unit 10/202-220 Ferntree Gully Road, Notting Hill, VIC 3168, Australia

**M:** 0433 511 655 **T:** 03 9866 5500 **F:** 03 8678 1313

**W:** www.argfinance.com.au **Australian credit licence : 389087**

## பார்வைக்கு


| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | இளவேனில் -17 |
| வெளியீடு | : | 19 தை 2020 |
| வெளியிடுவோர் | : | கேசி தமிழ் மன்றம் |
| ஆசிரியர் குழு | : | சத்தியா & சத்தியன் |
| வடிவமைப்பு | : | சத்தியன் |
| அட்டைப்படம் | : | தீபன் விபூஷனா |
| தொடர்புகட்கு | : | கேசி தமிழ் மன்றம்<br>PO Box 2516<br>Fountain Gate, Vic 3806 |
| மின்னஞ்சல் | : | editor@caseytamilmanram.org.au |


## பொருளடக்கம்


- ஆசிரியரின் உள்ளத்திலிருந்து 1
- தலைவர் உள்ளத்திலிருந்து 2
- பழந்தமிழரின் நீர் மேலாண்மை 3
- ஏன் எல்லோரும் விளையாட்டில் பங்கேற்க வேண்டும் 5
- முதுமையின் பாதையில் 6
- ICC கிரிக்கட் தரவரிசை 8
- தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் – தமிழ்த் தொண்டு 9
- கவிஞர் பாரதியார் 10
- மெல்பேர்னில் எமது குடும்ப பயணம் 10
- கடிகாரம் 10
- விருந்தோம்பல், மகாத்மா காந்தி 11
- அகவை பத்தில்……. இளவேனில் 11
- மனிதன் 12
- மனம் ஒன்று இசைக்கிறது 12
- பாரதியார், பொங்கல்ப் பானை அதிசயம் 13
- தமிழ் 14
- தெள்ளுதமிழில் இளவேனில் மலர்க!! 14
- ஒரு மனம் எரிகின்றது 15
- தைப்பொங்கல் 15
- நாயும் குருவியும் 16
- அவுஸ்திரேலிய தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பண்பாடுகளையும் கலாச்சாரத்தையும் பின்பற்றவேண்டும் 17
- சுத்தம் சுகம் தரும் 17
- கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையின் நன்மைகளும் தீமைகளும், உறவு 18
- அப்பா 19
- தமிழ் மொழி 20
- தமிழ் வளர்ப்போம் 20
- நல்லது செய்தால் நல்லதே நடக்கும். 21
- நான் பார்த்து உணர்ந்த தமிழ்தேசிய நிகழ்வு 22
- நோய்களில் இருந்து பாதுகாப்பு 22
- நிஜமா? 23
- என் கவித்தோழி 23
- கஞ்சப்பிரபு 24
- வணங்குகிறேன் தாயே... 25
- காட்டுச் சுற்றுலா 25
- காட்டுத் தீ 26
- உறவு 26
- குருதிக்கொடை-இரத்த தானம் 27
- சுத்தம் சுகம் தரும், உளவாளி 28
- ஆனந்தம் அகநிறைவு அமைய பொங்கல் அமையட்டும்! 29
- கொப்பரையும் கொம்மாவையும் விட்டு கோதை நீ ஓடி வாடி 30
- எனது நண்பன், எனது வீடு 31
- இணைய புத்தகங்களும் அச்சடித்த புத்தகங்களும், எனது குடும்பம், குதிரை 32
- இளைஞர்களுக்கு ஓர் அறிவுப்பு, உழவர் திருநாள், நல்ல பழக்கவழக்கங்கள் 33
- உலகத்திலேயே மூத்த மொழி தமிழ்! மூத்த குடி தமிழன்!!! அயல்கிரக வாசிகளின் ஆதாரம் 34
- செம்மொழியான தமிழ் மொழி இன்றும் அழியாமல் இருப்பதற்கான காரணங்கள் 37
- ஏன் எல்லா நாட்களும் சமையல் செய்ய வேண்டும் 38
- பயம் காட்டும் பதினாறு 39
- பொங்கல் 41
- வாழ்க்கை ஒரு பெரும் கதை 42
- நான் ஏன் தமிழை விரும்புகிறேன், எனது நாடு இலங்கை, அட்டைப்பட விளக்கம் 45
- குறுக்கெழுத்துப் புதிர் – விடை 46

# ஆசிரியரின் உள்ளத்திலிருந்து....

கேசி தமிழ் மன்றத்தின் வெளியீடான இளவேனில் சஞ்சிகையின் பதினேழாவது மலர், உங்கள் கைகளில் தவழ்கின்றது. கேசித் தமிழ் மன்றத்தின் அகவை பத்தில் வெளிவரும் முதலாவது இதழ் எனும் சிறப்பையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது.

இன்று உலகம் முழுவதும் மொழி பற்றிய ஆய்வுகள் இடம்பெற்றாலும் தமிழ் மொழி பற்றிய ஆய்வுகளும் தமிழர்கள் பற்றிய ஆய்வுகளும் மும்முரமாக இடம்பெறுகின்றது. இந்த ஆய்வுகள் எல்லாம் தமிழ் மொழியை வாழவைக்கவும் எவ்வாறு அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லலாம் என்றும் நடைபெறுகின்றன. எழுத்துத் திறமையுள்ளவர்கள் அவர்களது ஆக்கத்திறமையை வெளிக்கொணர வேண்டும் என்ற ஆவலுடன் நாம் உழைக்கின்றோம். அவர்களுக்காக இளவேனில் களம் அமைத்துக் கொடுக்கின்றது. இதில் அனைவரும் தங்களது ஆக்கங்களை எழுதி தங்களையும் ஒரு தமிழ் எழுத்தாளராக இந்த புலம் பெயர்ந்த நாட்டில் நிலை நிறுத்தவேண்டும்.

இளவேனிலுக்கு ஆதரவு தருவோர், எழுதுவோர் மிகச் சிறிய வட்டத்திற்குள் நின்றது. ஆனால் இந்நிலை மாறி வருகின்றது. இதழுக்கான ஆங்கங்கள் பல இடங்களில் இருந்து வருகின்றது. இதுவே இந்த இதழுக்கான வெற்றியாக இருக்கின்றது. இவ் வெற்றி தொடரவேண்டும் உங்களது ஊக்கம் எமக்கு தொடர்ந்து கிடைக்க வேண்டும். தமிழும் தமிழரும் தம்மை தொடர்ந்து அடையாளப்படுத்த இது போன்ற சஞ்சிகைகள் தொடரும்.

மேலும் ஒவ்வொரு வருடமும் இவ்விதழுக்கான ஆக்கங்களைப் பெற்று வருவதில் பல சிரமங்களை எதிர் நோக்கியுள்ளோம். அதிலும் பிரதானமாது குறிப்பிட்ட நேரத்திற்குள் அவ்வாக்கங்கள் எம்மைச் சேரமையாகும். இதனால் எப்பொழுதும் இவிதழின் வெளியீட்டிற்கான வேலைகள் இறுதி நொடி வரை நிகழ்ந்திருக்கிறது. ஆனால் இம்முறை, இவ்விதழுக்கான அனைத்து ஆக்கங்களும், வெகு முன்னராகவே, எழுத்தாளர்களால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதற்காக எமது பாராட்டுக்களையும், நன்றியையும் பகிர்ந்து கொள்கிறோம். அரை ஆண்டுக்கு ஒன்று என்று வெளிவரும் சஞ்சிகையை காலாண்டுக்கு ஒன்று என்று வெளியீடும் நிலைக்கு கொண்டு வரவேண்டியது இளவேனில் சஞ்சிகையை வாசிக்கும் வாசகர்களாகிய உங்களிடம் விட்டு விடுகிறோம், இந்த தார்மீகப் பொறுப்பு இலகுவானதல்ல! இந்தச் சுமையை ஒவ்வொருவரும் சுமப்போமானால் இளவேனில் சஞ்சிகை சிறப்பான வெளியீடாக வெளிவரும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் கிடையாது. ''தமிழ் எங்கள் மொழி! உரக்கச் சொல்வோம். தமிழ் எங்கள் அடையாளம்! நிலைக்கச் செய்வோம்''

ஆசிரியர் குழு.

# தலைவரின் உள்ளத்திலிருந்து ......

கேசித்தமிழ் மன்றமானது 10 ஆவது அகவையில் காலடி எடுத்துவைக்கின்ற இத்தருணத்தில் நடைபெறும் இத்தமிழர் திருநாள் மிகவும் சிறப்பானதொன்றாக அமைகின்றது. இம்முறை விசேடமாக விக்டோரிய மூத்த பிரசைகள் தோழமைக் கழகம், ஆஸ்திரேலிய தமிழர் கலையகம், ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலை சங்கம், யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம் - விக்டோரியா, ஹாட்லி கல்லூரி பழைய மாணவர் சங்கம் - விக்டோரியா, தமிழ் மூத்த பிரசைகள் காருண்யக் கழகம்-விக்டோரியா, Tamil Picture Books, மற்றும் பாடும் மீன் பழைய மாணவர் சங்கம் - விக்டோரியா முதலான எட்டு அமைப்புக்கள் எங்களுடன் இணைந்துள்ளன.

தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தின் செழிமையினை எங்களுடைய அடுத்த தலைமுறையினருக்கும் பல்லின கலாச்சார மக்களுக்கும் எடுத்துச் செல்லும் வகையில் தமிழர் திருநாளானது பல்வேறு கலை நிகழ்வுகளையும் தமிழர் பாரம்பரிய விளையாட்டுநிகழ்வுகளையும் எமது பானையில் தமிழர் மரபுப்படி பொங்கும் நிகழ்வும் கொண்டு சிறப்பாக இடம்பெறுகின்றது.

இவ்வேளையில் தமிழ் எழுத்தாற்றலினை எம் இளம் சிறார்களிடம் வளர்க்கும் பொருட்டு வருடந்தோறும் வெளிவரும் இளவேனில் சஞ்சிகையானது இம்முறையும் பல சின்னஞ்சிறு எழுத்தாளர்களின் கருத்தினை தாங்கி நிற்கிறது. இளவேனில் இனிவரும் காலங்களிலும் தொடர்ந்து பல படைப்பாளிகளை உருவாக்க காத்திருக்கிறது.அதற்கு உங்கள் அனைவரது ஆதரவும் , ஒத்துழைப்பும் இன்று போல் என்றும் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் தொடர்ந்துவரும் காலங்களிலும் எல்லோரும் இணைந்து விகடோரியா மாநிலத்தில் ஒற்றுமையாக ஒருமித்த சக்தியாக சிறப்பான வகையில் தமிழர் திருநாளை கொண்டாட உங்கள் எல்லோரையயும் அன்புடன் அழைக்கின்றேன்.

தேமதுரத் தோழோசை உலகமெல்லாம் பரவட்டும்

பொ.பிரபாகரன்
தலைவர்
கேசி தமிழ் மன்றம்

# பழந்தமிழரின் நீர் மேலாண்மை

**-விஷ்ணுப்பிரியன் கோவிந்தசாமி**

*முற்காலத்தில் உணவு, நீர் மட்டுமே முக்கிய தேவையாக இருந்த மனிதனுக்கு தற்போது பல்வேறு பொருட்களின் மேல் ஆசை வந்துள்ளது. பணம், நகை, நிலம் போன்றவற்றின் மேல் வைத்திருந்த ஆசை அதிகரிக்க, நாம் இயற்கையை மறந்துவிட்டோம். இன்றைய நிலையில் நீருக்கான தேவையும் பஞ்சமும் அளவில்லாது உயர்ந்துள்ளது. இதை பற்றி நாம் அடிக்கடி செய்தியில் பார்க்கின்றோம். படிக்கின்றோம். ஆனால் பெரும்பாலான மக்கள் இதற்கு எந்த முடிவும் எடுப்பதில்லை.*

*ஆண்டு 2018ல், தென் ஆபிரிக்காவில் உள்ள கேப்டவுன் (Cape Town) நகரத்தில் வாழும் மக்கள் அவர்களுக்கு தேவையான அளவு தண்ணீர் பயன்படுத்த முடியாத கட்டத்தை கடந்து வந்துள்ளார்கள். இதே நிலை இந்தியாவில் பல பகுதிகளில் உள்ளது. ஆனால் இவர்களின் போராட்டம் நிலத்திற்கடியில் இருக்கிறது. சுமார் 80% இந்தியர்கள் நிலத்தடி நீரைத் தான் நம்பி வாழ்கிறார்கள். முன்பு 8 அடியில் கிடைத்த நீர் இன்று 500-1000 அடிக்கு சென்றுள்ளது. இருப்பினும் இந்த நீர் நமக்கு சொந்தம் இல்லை. ஆற்றிலும், ஏரியிலும் கிடைக்கும் நீரை மட்டுமே மனிதர்கள் பயன்படுத்தலாம். நிலத்தடி நீர் தாவரங்களுக்கு சொந்தமானவை.*

*2015 தென்னிந்தியாவிலும், 2018-2019 கேரளாவிலும் வெள்ளம் வந்தது. அப்பொழுது கூட நீரை சரியான முறையில் கட்டுப்படுத்த முடியாமல் மக்கள் தவித்தார்கள். பல உயிர்களையும் நாம் இழந்தோம். மேலும், கோடை காலங்களில் மக்கள் குடிநீருக்காக சண்டை போடுவது ஒரு அவலமான விடயமாக காணப்படுகிறது.*

*நாம் நீரை சரியான முறையில் சேமித்து வைத்திருந்தாலோ, பயன்படுத்தியிருந்தாலோ, இந்த கடினமான சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. நம் தவறான செயல்களும், முடிவுகளும் நம்மை மட்டும் பாதிக்காமல், சுற்றுச் சூழலையும் பாதிக்கிறது.*

*பழந்தமிழர்கள் நீரின் மேல் வைத்திருந்த முக்கியத்துவத்தை நாம் சங்க கால இலக்கியங்களிலும் பாட்டுகளிலும் காணலாம். நம் அய்யன் திருவள்ளுவர்,*

*''நீர் இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*

*வான் இன்றி அமையாது ஒழுக்கு''*

*என்று கூறியுள்ளார். அதாவது நீர் இல்லை என்றால் இந்த உலகமே இல்லை என்று கூறுகின்ற ஒரு குறள்.*

*இதை போலவே சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவடிகள், கடவுளை போற்றி பாடாமல் இயற்கையை வணங்கி,*

*''மாமலை போற்றுதும் மாமழை போற்றுதும்''*

*என்று எழுதியுள்ளார் ஔவையார்,*

*''வரப்புயர நீர் உயரும்<br>நீர் உயர நெல் உயரும்<br>நெல் உயர குடி உயரும்<br>குடி உயர கோல் உயரும்<br>கோல் உயர கோன் உயர்வான்''*

*என்று பாடியுள்ளார்.*

*அதாவது நீரை சேமித்தால் அது ஒரு அரசாங்கத்தின் வளர்ச்சிக்கே காரணமாக இருக்கும் என்று கூறுகிறது.*

*இவற்றைப் போலவே பல பாடல்களும், புத்தகங்களும் உள்ளன. எல்லாம் நீரின் முக்கியத்துவத்தையும் நீர் சேமிப்பின் முக்கியத்துவத்தையும் பற்றி விளக்குகின்றன.*

*உலகில் உள்ள அத்தனை நீரையும் எடையிட்டு பார்த்தால், அதில் 97.5% உப்பு நீராகவும், மற்றும் 0.3% குடிநீராகவும் உள்ளது. அந்த குடிநீரை சிறந்த முறையிலும், பயனுள்ள முறையிலும் முழுமையாக பயன்படுத்துவதே நீர் மேலாண்மை ஆகும். இதில் நம் பழந்தமிழர்கள் மிகச் சிறந்தவர்களாக இருந்துள்ளார்கள். அதற்கான ஆதாரங்கள் இன்றைய வரையிலும் காணப்படுகிறது.*

*தமிழர்கள் மழை நீர் சேகரிப்பில் சிறந்தவர்களாக இருந்தார்கள். குறிப்பாக ஆற்றில் ஓடக்கூடிய நீரை, ஒரு கால்வாய் வழியே ஏரியில் சேமித்தார்கள். ஏரி நிரம்பியவுடன், அங்கிருந்து வரக்கூடிய உபரி நீரை ஒரு கால்வாய் வழியே எடுத்துச் சென்று கண்மாயில் சேமித்தார்கள். அது நிரம்பியவுடன், அந்த உபரி நீரை கரணையில் சேமித்தார்கள். அதை போலவே படிப்படியாக தாங்கள், ஏந்தல், ஊரணி, குளம் மற்றும் குட்டை போன்ற தடாகங்களில் ஆற்று நீரை சேகரித்தார்கள்.*

*மூன்று மாதங்கள் பெய்யக்கூடிய மழை நீரை படிப்படியாக சேமித்து, அதை வருடம் முழுவதும் பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்தினார்கள் நம் முன்னோர். உதாரணத்திற்கு, ஊரணியில் சேமித்து வைத்த நீரை வீட்டுத் தேவைகளுக்காக பயன்படுத்தினார்கள். மேலும் பல ஊர்களில் உள்ள ஏரிகளை சேர்த்த ஒரு சங்கிலி அமைப்பு உருவாக்கினார்கள். இதனால் சுற்றில் உள்ள விவசாயிகள் நன்மை அடைந்தார்கள்.*

*அது மட்டும் அல்லாமல், ஊரில் உள்ள பெரிய கோவில்களில், குளங்களை அமைத்தார்கள் தமிழர்கள். சேமிக்கும் போது அருகாமையில் உள்ள கிணறுகளில் தானாகவே நீர் ஊற்றெடுக்கும். அதனால் தான் கிணறுகளில் எப்போதுமே தண்ணீர் வற்றி போகாது என்று கூறுவார்கள்.*

*பாலைவனங்களில் வாழ்ந்த தமிழர்களுக்கு அதிகம் மழை கிடைக்காது. அதனாலே மழை பெய்யும் போது ஒரு குழியை வெட்டி அதில் நீரை சேமித்தார்கள். அந்த நீரை நேரடியாக பயன்படுத்தாமல் தேற்றாங் கொட்டை என்ற ஒரு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி மண்படிந்த நீரை சுத்தமாக்கினார்கள்.*

*வீட்டுக் கூரையில் பெய்யக் கூடிய மழை நீரை ஒரு தொட்டியில் சேமித்து அதை நீர் இல்லாத வரட்சிக் காலங்களில் பயன்படுத்தினார்கள். மழை நீர் சேமிப்பு தொட்டி நிரம்பியவுடன் அதன் உபரி நீரை நிலத்தடியில் சேகரித்தார்கள். எனவே தமிழர்கள் நிலத்தடி நீர் மட்டத்தைக் கூட கவனிப்பில் எடுத்துக் கொண்டார்கள்.*

*சரி, இவ்வளவு சிறப்பான நீர் மேலாண்மையை நாம் எப்படி இழந்தோம்? முதலில் ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்தில் தான் மிகப் பெரிய மாற்றமே நடந்தது. அவர்கள் நம் முறைகளை புரிந்து கொள்ளாமல் பல நீர் நிலைகளை அழித்தார்கள். காலம் செல்ல, செல்ல ஆங்கிலேயர்களும் நம் மண்ணை விட்டுச் சென்றார்கள். அதன் பின்னர் தான் ஆற்று மணலுக்காக மிகப் பெரிய போட்டி ஆரம்பித்தது. மக்கள் ஆற்று மணலை அள்ள அள்ள ஆற்றின் நீர் மட்டம் குறைந்தது.*

*எனவே பொதுமான அளவு நீர் ஏரியில் சேமிப்பாகவில்லை. இதனால் படிப்படியாக மற்ற நீர் நிலைகளும், அதை நம்பியிருந்த மக்களையும் பாத்தித்தது. ஏரியில் தண்ணீர் இல்லாத போது அதை சமப்படுத்தி அதன் மேல் கட்டிடங்கள் கட்ட ஆரம்பித்தார்கள். இதனால் முழுமையாக நீரை சேமிக்க முடியாமல் போய்விட்டது.*

*கூடுதலாக வனம் அழிப்பதும் இதற்கு ஒரு காரணமாக உள்ளது. மரங்களை வெட்டுவது நேரடியாக மழை பெய்வதை பாதிக்கின்றது. அதை போலவே, நிலத்தடியிலிருந்து நீர் எடுப்பது மரங்கள் மற்றும் தாவரங்களின் வளர்ச்சியை பாதிக்கின்றது.*

*இதற்கு என்ன தான் தீர்ப்பு? முதலில் நாம் மழை நீர் சேமிப்பை ஒரு கடமையாக நினைத்து அதை பின்பற்ற வேண்டும். வீட்டு ஓடுகளில் பெய்யக்கூடிய மழை நீரை ஒரு தொட்டியில் சேமித்து அதை வீட்டில் உள்ள செடி கொடிகளுக்கு பாய்ச்சலாம். மேலும் நாம் அன்றாட வாழ்க்கையில் செலவிடும் நீர் அளவை குறைக்க வேண்டும். இதை பின்பற்றினால் நம் சுற்றுச் சூழல் முன்னேறும்.*

*நம் மூதாதையர்கள் கூறிய கருத்துக்களையும் நவீன கருவிகளையும் இணைத்தால் நமக்கு ஒரு புதிய தொழில்நுட்பம் கிடைக்கும். அதை நம் முன்னேற்றத்திற்கு பயன்படுத்தலாம். ஆனால் இது ஒவ்வொரு தனி மனிதனின் முயற்சியால் மட்டுமே சாத்தியமாகும்.*

*நீரை சேமிப்போம், நம் எதிர்காலத்தை காப்பாற்றுவோம்...*

## ஏன் எல்லோரும் விளையாட்டில் பங்கேற்க வேண்டும்?

*-ஹரிணி சிவசுதன், பாரதி பள்ளி*

*பலர் தங்கள் உடலை பலவீனமாக வைத்திருக்கிறார்கள். இதற்கு அவர்கள் விளையாட்டில் முக்கியம் செலுத்தாததும் ஒரு காரணமாகும். இது மாற வேண்டும்*

*பல ஆஸ்திரேலிய சிறுவர்கள் விளையாட்டில் விரும்பி பங்குபற்றுகிறார்கள், நீங்களும் பங்கு பற்றுகிறீர்களா?*

*விளையாட்டு என்றால் என்ன? விளையாட்டு என்பது ஒரு உடல் சுவாரஸ்யமான கல்வி நடவடிக்கை. விளையாடுவதால் பல நன்மைகள், உங்கள் உடலை, உள்ளத்தை ஆரோக்கியமாக வைத்திருக்கவும், குழுப்பணியை வளர்க்கவும், புதிய நண்பர்களை உருவாக்கவும், நேரத்தை உபயோகமாக பாவிக்கவும், மற்றும் மூளை சக்தியை அதிகரிக்கவும் இது உதவும்.*

*உடலின் உடற்திறன் மற்றும் ஆரோக்கியம் எந்தவொரு நபருக்கும் முக்கியமானது. அதை பராமரிப்பது அவ்வளவு எளிதான விடையம் அல்ல. விளையாட்டுகளில் பங்கேற்பது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கவும், வியாதிகளில் இருந்து பாதுகாக்கவும் உதவும். நாங்கள் விளையாட்டுக்களைச் செய்யும்போது வியர்க்க முனைகிறோம், இந்த வியர்வை உடம்பின் உள்ளே உள்ள நச்சுத்தன்மையான கழிவுகளை வெளியேற்றி உடலை தூய்மையாக வைத்திருக்க உதவுகிறது. விளையாட்டுகளில் பங்கேற்பது, தசை முன்னேற்றம், ஒருங்கிணைப்பு, இருதய நல்வாழ்வு மற்றும் பல நன்மைகளை அளிக்கிறது. மேலும் உடற்பயிற்சி மூளைக்கு நல்லது, ஏனென்றால் அது மூளைக்குள் ஆக்ஸிஜன் ஓட்டத்தை அதிகரிக்கிறது.*

*நீங்கள் விளையாட்டில் ஈடுபடும்போது, பயனுள்ள மற்றும் புத்திசாலித்தனமான குழுப்பணி, கூட்டுறவு திறன்களை வளர்க்க இது உதவுகிறது. இது உங்களுக்கு ஒரு நல்ல உதவியாக இருக்கும், ஏனென்றால் வாழ்க்கையில் முன்னேற, ஒரு நல்ல குழு பணியாளர், சக கூட்டுறவு, வகுப்பு தோழர்கள், பணிப்பெண்கள் மற்றும் விளையாட்டு வீரராக இருப்பது பெரிதும் உதவி செய்யும்.*

*விளையாட்டில் பங்கேற்பது, தகவல்தொடர்பு திறமைகளை வளர்த்து, சமூகத்தின் உணர்வுகளை அறிந்து, மற்றும் பிறரை மதிக்க கற்றுக்கொடுக்கிறது. மேலும், பொறுப்பான மற்றும் நம்பகமானவற்றின் முக்கியத்துவத்தை கற்றுக்கொள்ள உதவுகிறது. எனவே விளையாட்டில் வென்றாலும் தோல்வியடைந்தாலும், மற்றவர்களை ஆதரிக்கவும், ஒத்துழைக்கவும், மற்றும் ஒற்றுமையாகவும் இருக்கவும் கற்றுக்கொடுத்து அவர்களை சிறந்த மனிதர்களாக உருவாக்குகிறது.*

*உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு உங்களுக்கு ஒரு விடயத்தில் கவனம் செலுத்தவும், படிக்கவும் உதவுகிறது, ஏனெனால் இது சிறப்பாக சிந்திக்கவும், எங்கள் கவனத்தை மேம்படுத்தவும் உதவுகிறது. இப்போது பெரியவர்களையும் மற்றும் சிறுவர்களையும் தினமும் ஒரு மணித்தியாலம் விளையாடும் படி விஞ்ஞானிகள் பரிந்துரைக்கிறார்கள். அவ்வாறு தொடர்ந்து செய்தால் இது பல நன்மைகளை அளிக்கும் என்பது அவர்களது கருத்து.*

*ஒட்டுமொத்தமாக விளையாட்டு என்பது உடல் ஆரோக்கியத்துடன் இருக்கவும், சமூக திறன்களை வளர்க்கவும் உதவி, நல்ல குடிமக்களை உருவாக்க உதவும். தமிழ் சமூகம் விளையாட்டில் மேலும் அக்கறை செலுத்தினால், குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்தவர்களாகவும், ஆரோக்கியமானவர்களாகவும் மேலும் வளர்வார்கள்.*

# முதுமையின் பாதையில்……

*-சியாமளா யோகேஸ்வரன்*

*(2019 முதியோர் அவைக்காக)*
*அவசர அவசரமாய் எழும்பி…, அரக்கப் பறக்க ஓடி*
*அவனில(m.oven) வச்ச சாப்பாட்டை அந்தரத்தில திண்டதில*
*மனிசக் குணம் மனிசிக்கு மாயமா மறைஞ்சு போக*
*மனிசின்ர குணமறிஞ்சு சித்தனே சிவனே எண்டு*
*மல்லுக்கட்டாமல் சும்மா இருக்கிற மனிசனை*
*எங்கெங்கோ எதெதிலயோ வாற கோபத்துக்கு*
*எப்பப்ப நினைச்சாலும் கடிச்சு கடிச்சுக் வைச்சதில*
*தன்ர தலைவிதியை தனக்குள்ள நொந்து கொள்ள*
*தள தளவெண்டு உள்ளுக்குள்ள கொதிச்ச*
*கோபமெல்லாம் யாரில விடிஞ்சது தெரியுமே?*
*பத்து பொருத்தமும் பாரில காணாத அதிசயம்*
*பாருங்கோ எண்டு -கொமிசன் காசுக்காக கூசாமல்*
*பொய் சொன்ன சாத்திரக்காரனும் தரகனும்….*
*கையில மட்டும் கிடைச்சிருந்தா கதகளி ஆடியிருப்பார்*
*குலைக்கிற மனிசி கடிச்சுக் கிடிச்சு வைச்சிட்டா*
*குலைப்பன் காய்ச்சல்ல தான் போய் சேரோணும் எண்டு*
*விசர் நாய்க்கடி ஊசியை யாருக்கும் தெரியாம*
*சேப்டிக்கெட்டு போட்ட கதை -பாவம் அழகப்பாட*
*சொந்தக் கதை-- பெரும் சோகக்கதை*

*அந்தக்காலம் -அதுவொரு அழகிய கனாக்காலம்*
*எஞ்சினியர் பொடியன் எண்டு ஊர் முழுக்க மரியாதை*
*எதைச் சொன்னாலும் தலையாட்ட ஒரு கூட்டம்*
*எதிர்த்த வீட்டு துளசி கூட எதிர எதிர வந்து*
*கண்ணால கதை பேசி காதலைத்தான் சொன்னதில*
*தலைகால் புரியாத தலைக்கனம் ஒண்டைக் கொண்டு*
*தம்பி தலை தெறிக்கத் திரிஞ்சது- அந்தக் காலம்*
*தன்னால கர்வம் தலையில் வந்து தங்க*
*தலை நிமிர்ந்து தங்கக்கம்பி நிண்டகாலம்*
*தலைவி வந்ததோட முடிஞ்சு போச்சு*
*கட்டி வந்த ஆறாம் மாசம் கனிவு கொஞ்சம் கலைஞ்சு போக*
*கருணையற்றுக் கேட்டாளே கேள்வி ஒண்டு!*
*“என்னெண்டு இஞ்சினியர் பட்டம் எடுத்தனீங்கள்?”*

*“காசு கீசேதும் குடுத்துத் தான் தந்தவங்களோ?”*
*மனிசி மனசில அவ்வளவு நம்பிக்கையோட*
*மாமாண்ட கீறல் விழுந்த ரெக்கார்ட் போல*
*திரும்பி திரும்பி சொன்னதில -எறும்பூரக் தேஞ்ச கதையாய்*
*மனிசனுக்கும் டவுட்டு வந்து, மாடாய்ப் படிச்சு வாங்கின பட்டம்*
*காத்தில காத்தாடியா காலாவதியாய்ப் பறந்து போச்சு.*
*பத்தாம் வகுப்பையே படி வைச்சும் தாண்டாத பாவி மனிசி*
*படிக்காத மேதை போல மருத்துவம் எல்லாம் பேசுது*
*பத்து மணிக்கு மேல பார்த்திருந்து கோல் எடுத்தா*
*மாறாத வருத்தத்துக்கு மருந்து கூடப் போனில சொல்லுது*
*தனக்குத்தானே வக்கீலாகி தன்ர பாட்டில வெளுத்து வாங்குது*
*தப்பாமல் பார்ட்டி வழிய அரசியலும் அலசித்தள்ளுது*
*கனக்கப் படிச்சுத்தான் என்ன பயன்? காதையெல்லாம் மூடிக்கொண்டு*
*-மாடு போல தலையை ஆட்டி மௌனமாய் வாழ்றதுக்கு*
*எஞ்சினியர் பட்டம் என்ன-- கட்டாயம் தேவைதானோ?*

*கவலையீனத் தனத்தால கத்தி கொஞ்சம் வெட்டித்தள்ளக்*
*கடுகளவு ரத்தம் கையில கசியத் தொடங்க*
*கடுப்பான மனிசி கச்சிதமாய் குற்றமன்றத்தைக் கூட்டும்*
*குளிரெடுத்த மனிசனை கூண்டில தான் ஏத்தி வைச்சு*
*குறுக்க மறுக்கக் கேள்வி கேட்டு குப்பையெல்லாம் குடையத் தொடங்கும்.*
*பழைய பட்டறைக் கதையெல்லாம் பஞ்சாயத்துக்கு வந்து சேரும்.*
*“எதுக்கப்பா கத்தியை இப்பிடி வைச்சு தீட்டினீங்கள்?*
*என்ர கையை அறுத்துப் போட எத்தனை நாளையப் ப்ளான்?”*
*பார்த்திருந்த மனிசனுக்கு பயத்தில கொஞ்சம் கண்ணைக் கட்டும்*
*கத்தி மொட்டை எண்டாலும் கத்தும் எண்டு தெரிஞ்சதால*
*கச்சிதமாய் தீட்டி வைக்க-- கதை கொஞ்சம் மாறிப்போச்சு.*
*நரி-, இடம் போனால் என்ன வலம் போனால் என்ன?*
*குறுக்க பாய்ஞ்சு குதறாம விடாது எண்டு*
*குறுக்க எதுவும் பேசாமல் குறுகிப் போய் நிற்பார் அழகப்பா*
*குற்றம் ஒன்றும் செய்யாட்டாலும் குற்றவாளி அவர்தானே*
*பேய்க்கென்று வாழ்க்கைப்பட்டா புளிய மரம் ஏறோணும்*
*புரிஞ்சதால - இறங்கி இறங்கி இயல்பாவே ஆகிப் போச்சு*
*பல்லைக் கடிச்சு வாழ்ந்ததில பாதிக்காலம் ஓடிப் போச்சு.*
*வீதிக்கொரு மரம் போல- பொண்டாட்டியின்ர ஸ்ரெஸ்சைத் தணிக்க*
*வீட்டுக்கொரு புருசன் வேணும் – எண்டிருந்த நிலைமையது*
*பொடியள் வளர்ந்து போன பின்னர் மாறித்தான் போச்சுது*

*மிச்சமென வீட்டில மீந்து நின்ற மனுசன்*

*நொந்து போன நூலா கண்ணில பட்டதால*

*வள்ளுவனின் வாசுகியாய் மாறிப்போனா அன்னம்மா*

*முப்பது வருசமா கூடவே வாழ்ந்து குப்பை*

*கொட்டின மனுசனைக் கொஞ்சமா நிமிர்ந்து பார்க்க*

*முன்னால தொப்பை தள்ளி பின்னால மொட்டை விழுந்து*

*முதுமையின் பிடி வந்து முனைப்போட நிற்குது அங்கே*

## ICC **கிரிக்கட் தரவரிசை**

*- சாய்ச்சரண் பார்த்திபன் (பாரதி பள்ளி)*

*கடந்த 6 மாதங்களாக ASHES தொடர் அடங்கலாக பல கிரிக்கெட் போட்டிகள் இடம் பெற்றன. அப்போட்டிகளால் டெஸ்ட் தரவரிசையில் இடம் பெற்ற மாற்றங்களை இன்று பார்ப்போம்.*

*துடுப்பாட்டம்*

*மிக சிறப்பாக ஆடி வரும் இந்திய அணியின் தலைவர் விராத் கோலி 928 புள்ளிகளுடன் முதலாம் இடத்தில் இருந்து வருகிறார். தென் ஆப்ரிக்காவிற்கு எதிராக வியக்க வைத்த அவரின் 254 ஓட்டங்கள், ஸ்டீவென் ஸ்மித்தை பின் தள்ளி முதல் இடத்துக்கு அவரை வர வைத்துள்ளது.*

*அவுஸ்திரேலியா அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவென் ஸ்மித் அண்மைய 3 போட்டிகளில் பிரகாசிக்க தவறியதால் தனது முதல் இடத்தை இழந்து 911 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தை பிடித்துள்ளார்.*

*நியூசிலாந்து அணியின் கென் வில்லியம்சன் 864 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தில் உள்ளார். இந்த இடத்தை தக்க வைக்க இங்கிலாந்துக்கு எதிரான சதம் அவரிற்கு பெரிதும் உதவி உள்ளது.*

*முறையே நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களில் இந்தியாவின் புஜரவும் (791 புள்ளிகள்) ஆஸ்திரேலியாவின் லபுச்ச்சக்னேவும் (786 புள்ளிகள்) இருக்கிறார்கள்.*

*பந்து வீச்சாளர்கள்*

*ஆசி அணியின் நம்பிக்கைக்குரிய பந்து வீச்சாளராக திகழும் பட் கம்மின்ஸ் ASHES தொடரில் பெற்ற 29 விக்கெட்களுடன் 898 புள்ளிகளுடன் தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளார்.*

*கிச்கோ ராபட (தென் ஆப்ரிக்கா) 839 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தில் உள்ளார். இவர் இங்கிலாந்துக்கு எதிராக இடம் பெற உள்ள நான்கு போட்டிகள் கொண்ட தொடருடன் முதலாம் இடத்தை நெருங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது*

*அவுஸ்திரேலியாவிற்க்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் பெற்ற 7 விக்கெட்களுடன் நியூசிலாந்து அணியின் நியில் வாக்னர் மூன்றாம் இடத்தை கைப்பற்றி கொண்டுள்ளார். வரும் காலத்தில் மேலும் முன் நிலைக்கு வருவார் என எதிர்பார்க்கபடுகிறது.*

*முறையே நான்காம் ஐந்தாம் இடங்களில் மேற்கு இந்திய வீரர் ஜேசன் ஹோல்டரும் அவுஸ்திரேலியாவின் மிட்செல் ஸ்டார்க்கும் இடம்பிடித்துள்ளனர்*

*தற்போது தரவரிசை பட்டியலில் ஐந்தாம் இடத்தில் உள்ள அவுஸ்திரேலியா எதிர்வரும் நியூசிலாந்து போட்டியுடன் முதல் இடத்திற்க்கு வரும் என எதிர்பார்க்கபடுகிறது.*

*மூலம் : https://www.espncricinfo.com/, https://www.icc-cricket.com/*

# தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர்- தமிழ்த் தொண்டு

*- ஜெயராம் அண்ணாதுரை*
*-பாரதி பள்ளி முன்னாள் மாணவர் (VCE 2018)*

*2015ம் ஆண்டில் உலகின் தலைசிறந்த பல்கலை கழகமான ஹார்வேர்டில் தமிழுக்கு இருக்கை அமைக்கப்பட்டது. அது நம் தமிழ் மொழி ஏறக்குறைய 2000ம் வருடங்கள் பழமையாக இருந்து, இன்றும் வழக்கில் இருப்பதாலேயே சாத்தியமானது. பழமை என்பதற்கு சான்றாக இருந்த பெரும்பாலான நூல்களின் மூலம் ஓலைசுவட்டில் எழுதப்பட்டவை.*

*அவ்வாறு ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட பழம்பெரும் அரிய தமிழ் பெருங்காப்பியங்கள் புத்தக வடிவம் பெறுவதற்கு பல தமிழ் அறிஞ்சரகளின் உழைப்பும் விடாமுயற்சிம் தான் காரணம ஆகும். அவற்றில் முதன்மையானவர் தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத ஐயர். தமிழை கற்க அவர் எடுத்து கொண்ட முயற்சியும் கடின உழைப்பும் அதன் பிறகு அயராமல் பழம்பெரும் ஓலைச்சுவடிகளை தேட மேற்கொண்ட தடைகள் நிறைந்த பயணங்களும் என்றும் ஒரு முன்னுதாரணமாக திகழ்கின்றது. தமிழ்தாய்க்கு அணி சேர்த்தவர்கள் அணியில் உ.வே.சா என்ற தமிழ்த்தாத்தாவுக்கு நிலையான இடம் உண்டு. அவரது அரும் முயற்சி இல்லாதிருந்தால் பல தமிழ்க் கருவூலங்களை காலம் கரைத்திருக்கும் என்பது மறுக்கமுடியாத உண்மை.*

*அக்காலத்தில் பல தமிழ் இலக்கியங்கள் ஓலைச்சுவடி வடிவில்தான் இருந்தன. அவற்றை படியெடுப்பது சிரமம் என்பதால் ஒவ்வொரு இலக்கியத்திலும் ஒரு படிதான் இருக்கும். பல ஓலைச் சுவடிகள் செல்லரித்துப் போயிருந்தன. அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து அச்சாக வெளியிட்டாலொழிய அவற்றை தமிழுலகம் இழந்து விடும் என்று ஆதங்கத்துடன் தனது சுயசரிதையான 'என் சரித்திரம்' என்னும் நூலில் குறிப்பிடுகிறார் தமிழ் தாத்தா. கும்பகோணம் கல்லுரியில் தமிழ் ஆசிரியாக பணிபுரிந்த அவர் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் சிதறிக் கிடந்த பழங்கால இலக்கண, இலக்கிய நூல்களைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றை முறைப்படுத்தி பதிப்பிக்கும் அரிய பணியை தம் தலையாய பணியாக மேற்கொள்ள திட்டமிட்டார். இவ்வாறு தமிழ் தாத்தா உ.வே.சாமிநாத அய்யர் அழிந்து மறைந்து போகும் நிலையில் இருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடித் தேடி அச்சிட்டு, பதிப்பித்தார். அவர் பதிப்பித்த ஏராளமான நூல்களில் ஐம்பெரும் காப்பியங்களான சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை மற்றும் பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை என்பவை அடங்கும்.*

*தமிழ் தாத்தா ஏட்டுச்சுவடிகளைப் பார்த்து அவற்றை அப்படியே பதிப்பித்தல் செய்யவில்லை. சிதைந்து மறைந்து விட்ட அடிகளையும் சொற்களையும் கண்டு முழுப்பொருள் விளங்கும் படி செய்தார். ஆசிரியர் குறிப்பு, நூற்குறிப்பு போன்ற செய்திகளையும் தொகுத்து வழங்கி, இந்த நூல்களை குறித்த முழு புரிதலுக்கும் வழி வகுத்தார்.*

*சங்க இலக்கியங்களைப் பற்றி இன்று நம்மால் நன்கறிந்து வைத்திருக்க முடிகிறது என்றால் அதற்கு உ.வே.சா காரணமாவார். இதன் மூலம் சங்ககால மக்களின் வாழ்க்கை, பண்பாடு போன்றவற்றைப் பற்றி இன்று நமக்குத் துல்லியமாகத் தெரிகிறது. இவ்விலக்கியங்கள் இல்லாத தமிழையும் தமிழிலக்கியத்தையும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாது என்பது உறுதி. இதன் மூலம் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் உலகறியச் செய்தார் தமிழ் தாத்தா. தமிழ் மொழிக்கு செம்மொழி தகுதி பெற உதவிய நூல்களில் ஏறக்குறைய பாதி நூல்கள் உ.வே .சாவால் பதிப்பிக்கப்பட்டவை என்பது குறிப்பிடதக்கது. இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற ரவீந்திர நாத தாகூர் உ.வே.சாவின் இந்த தமிழ் பணியை பாராட்டிய போது, தமிழ் தாத்தா அதற்கு , "எல்லாம் என் ஆசிரியர் ஆசிரியர் இட்ட பிச்சை" என்று பணிவன்போடு ஆசிரியரை நினைவுக்குறி பதில் அளித்தார்.*

*அக்காலத்தில் உ.வே.சா குடும்பம் ஒரு ஊரில் நிலையாகத் தங்குவதற்கு வசதியில்லாமல் ஊர் ஊராகச் இடம் பெயர்ந்து வாய்ப்புகளைத் தேடியலைந்துள்ள போதிலும், மனம் தளராமல், இவ்வளவு கடினமான சூழ்நிலையில் தமிழை விடாமுயற்சியுடன் கற்றுக் கொண்டுள்ளார். இவர் பிற்காலத்தில் அடைந்த இமாலய வெற்றிக்கு இவர் கற்ற கல்வியும், குடும்பத்தின் தியாகமும், விடாமுயற்சியும்*

பெரும் அடித்தளமாக அமைந்தது 'என் சரித்திரம்' என்ற நூலில் தனது வாழ்க்கை வரலாறை விரிவாக எழுதிய தமிழ் தாத்தா, தமிழாசிரியர் எங்கு கிடைப்பாரோ என்று தேடித் தேடி அதன் தொடர்ச்சியாக குடும்பம் முழுவதும் தமிழாசிரியர் இருக்கும் இடத்திற்கு குடி பெயர்ந்து விடும் சம்பவங்களை குறிப்பிடுகிறார். மேலும் படித்த புலவர்கள் யாரைப் பார்த்தாலும் இவரிடம் தமிழ் கற்றுக் கொள்ள முடியுமா என்றுதான் தம் உள்ளம் ஏங்கியதாக கூறுகிறார்.

இவ்வாறு தமது கடின உழைப்பாலும் மொழி ஆற்றலாலும் உ.வ.சா பனையோலை தமிழை புத்தக தமிழாக மாற்றினார், அது எளிதாய் புத்தக தமிழை இணைய தமிழாய் தமிழ் கூறும் நல்லுலகம் இளைய தலைமுறைக்கு கொண்டு சென்று தமிழை கற்று வளர்க்க உதவ வேண்டும்.

-----------------

## கவிஞர் பாரதியார்

-கனிகா, பாரதி பள்ளி

சுப்பிரமணிய பாரதியார் ஒரு புலமை பெற்ற தமிழ் கவிஞர் ஆவார். பாரதியாருடைய கவிதை எழுதும் திறமையினால் அவரை கவிதைகளின் தகப்பன் என்றும் அழைப்பார்கள். அவருடைய கவிதைகள் மனித வாக்கக்கு அத்தியாவசியமான அனைத்து விடையங்களையும் தெளிவுபடக் கூறுவதாக அமையப் பெற்றதனால் சிறியவர் தொடக்கம் பெரியவர் வரைக்கும் ஆர்வத்துடன் படித்து பின்பற்றியும் நடப்பார்கள். இதனால் அவருடைய கவிதைகள் தமிழர்களால் விலைமதிப்பற்ற பொக்கிசங்களாகப் போற்றிப் பாதுகாக்கப் படுகிறது.

பாரதியார் மறைந்த பின்னும் தமிழர்களின் மனங்களில் கவிதை வடிவமாக இன்றும் வாழ்கிறார்.

## மெல்பேர்னில் எமது குடும்ப பயணம்

நாங்கள் எமது பள்ளி விடுமுறையை இனிமையாக கழிப்பதற்கு மெல்பன் வந்தோம். இங்கு இயற்கையாக உள்ள பல பெரிய மரங்களையும் பல வண்ண பூக்களையும் பார்த்து ரசித்தோம்.

நாங்கள் பிலிப் தீவுக்கு செல்லும் வழியில் ஒரு சிறிய விலங்கியல் தோட்டத்திற்கு சென்றோம். அங்கு பெரிய தோகை உள்ள மயில்களைப் பார்த்தோம் அதில் ஒன்று தோகையை விரித்து ஆடியது அது மிகவும் அழகாக இருந்தது.

நாங்கள் கோலா தூங்கும் விதத்தை பார்த்து ஆச்சரியப்பட்டோம். அங்குள்ள கங்காருகளுக்கு உணவு கொடுத்து தடவிப்பார்த்தோம்.

அடுத்ததாக நாங்கள் சாக்லேட் தொழிற்சாலைக்கு சென்றோம். அங்கு சாக்லேட் செய்வதை பார்வையிட்டோம் சாக்லேட் சாப்பிட்டோம். அங்கிருந்து பிலிப் தீவுக்கு செல்லும் போது ஒரு குட்டி கங்காரு எமது வாகனத்தின் மீது பாயப் பார்த்தது நாங்கள் பயந்து போனோம். பிலிப் தீவில் நாங்கள் பென்குயின் வருகைக்காக காத்திருந்தோம். இரவு 9 மணியளவில் பெண்குயின் கரைக்கு வந்தனர். அவர்களின் அணிவகுப்பு மிகவும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது. எமது இந்த பள்ளி விடுமுறை ஒரு மறக்க முடியாத அனுபவமாகும்.

-----------------

## கடிகாரம்

-ரிஷாரினி. P

கடிகாரமாம் கடிகாரம்
கலகலப்பான கடிகாரம்
அழகான கடிகாரம்
அலாரம் அடிக்கும் கடிகாரம்

காலைப் பொழுது விடிந்ததும்
கானம் பாடி எழுப்பி விடும்
கண்டிப்பான கடிகாரம்
கவர்ச்சி மிக்க கடிகாரம்.

## விருந்தோம்பல்

-ஷரணி

தமிழர் பண்பாட்டில் விருந்தோம்பல் ஓர் சிறந்த கொள்கை. அதுபோல் தன்னைப்போல் பிறரை நேசித்தல், ஈகை, ஒழுக்கம், மானத்தை உயிரை கொடுத்தும் காப்பாற்றுதல் போன்றவையும் சில.

முற்காலத்திலிருந்து இன்று வரை, இல்லற வாழ்வில் விருந்தோம்பல் ஒரு சிறந்த பண்பாகக் கருதப்படுகின்றது. விருந்தோம்பலின் சிறப்பை ''மருந்தோடாயினும் விருந்தோடுண்'' என்னும் பழமொழி உணர்த்துகின்றது. வள்ளுவர் தமது திருக்குறளில் விருந்தோம்பலைப் பற்றி ஒரு அதிகாரமே எழுதியுள்ளார். அதில் நாம், விருந்தோம்பலின் பெருமை பற்றி நன்கு அறியலாம்.

அதில் அவர் இல்லறத்திலிருந்து வாழ்வதே விருந்தினர் உபசரித்து வாழ்வதெற்கென்று கூறுகிறார். வந்த விருந்தினரை புறத்தே இருத்தி தான் மட்டும் உண்பது அமிர்தமேயானாலும் விரும்பத்தக்கது அன்று. வந்த விருந்தினரை அகமும் முகமும் மலர அன்போடு உபசரிப்பவனுடைய வீட்டில் இலட்சுமி மகிழ்ந்து தங்குவாள். விருந்தினருக்கு உணவளித்து மிகுதியை உண்பவனுக்கு ஒரு நாளும் விளைச்சல் குறையாது. விருந்தினரின் மனம் கோணாதபடி நடப்பது விருந்துபச்சாரத்தில் மிகவும் முக்கியம். ஏனெனில் ஒரு சிறு தவறான சொல்லும் அவர்களின் முகத்தை வாடச்செய்து விடும்.


தமிழர்களிடையே மட்டுமன்றி மற்ற இனத்தவர் இடையேயும் விருந்தோம்பல் மிகவும் சிறப்பு பெற்றது. ஒவ்வொரு இனத்தின் விருந்துபசார முறைகளும் வேறுபட்டு இருக்கும். அடிப்படையில் விருந்தினர் முகம் கோணாது வழி அனுப்பி வைத்தல் முக்கிய இடம் வகிக்கிறது. விருந்தோம்பலில் பலன் அளவிடற்கரியது அதன் பலன் விருந்தாளரின் தகுதிக்கு ஏற்றால் போல் இருக்கும். பொருள் இருந்தும் விருந்தோம்பும் பண்பு இல்லாதவர் செல்வத்துள்ளும் வறுமையுற்றவராவர்.

ஆதலால், நாமும் நம் வாழ்நாளில் விருந்தோம்பி வாழ்ந்து நாமும் மகிழ்ந்து விருந்தினரையும் மகிழ்வித்து வாழ்வோம்

## மகாத்மா காந்தி

-ம.அபிஷயா

மகாத்மா காந்தி இந்தியாவில் வாழ்ந்தார். அவர் எப்பொழுதும் உண்மையே பேசுவார். அவர் இந்திய விடுதலைக்காக அகிம்சை வழியில் போராடினார். அவருடைய இயற்பெயர் கரம் சந்திரமோகன் காந்தி. அவர் தென் ஆபிரிக்காவில் சட்டக் கல்வி படித்துப் பட்டம் பெற்றார். அவர் எப்பொழுதும் கதர் ஆடை அணிவார்.



## அகவை பத்தில்.......... இளவேனில்

-பூ.வினோத்

இளமை தளராத செந்தமிழில்

என்றும் வழமை போல ஆண்டுக்கு

இரு தடவை உலா வரும் உன்

அளப்பெரிய சேவைக்கு – இன்று

அகவை பத்தில் அடி எடுத்து வைக்கும்

உனக்கு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

## மனிதன்

-மெர்சி விக்டர் பாபு

ஒரு திட்டப்பணியில் எழுபதுக்கும் மேற்பட்ட விஞ்ஞானிகள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். எல்லா விஞ்ஞானிகளும் வேலைகளை தங்கள் முதலாளிக்கு ஏற்றவாறு செய்து முடிப்பது வழக்கம். ஒருநாள் ஒரு விஞ்ஞானி தனது முதவாளியிடம் தன்னுடைய குழந்தைகளை கண்காட்சிக்கு அழைத்துச் செல்வதாக வாக்குறுதி கொடுத்ததால் தான் அலுவலகத்தை விட்டு 5.30 மணிக்கு போக அனுமதி வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவருடைய முதலாளி சம்மதித்தார். வழக்கமான வேலையைத் தொடங்கி ஆராய்ச்சியில் மூழ்கி விட்டார் விஞ்ஞானி. தன் வேலை நிறைவுபெறும்போது கடிகாரத்தைப் பார்த்தார். மணி 8.30 ஆகிவிட்டது. தனது குழந்தைகளுக்கு கொடுத்த வாக்குறுதி அவருக்கு நினைவு வந்தது. தனது முதலாளியைத் தேடினார். ஆனால் அவர் எங்குமில்லை. காலையில் தெரிவித்ததால் அவர் வீடு திரும்பினார். தனது பிள்ளைகளை ஏமாற்றியதற்கு குற்றவாளியாக உணர்ந்தார். வீட்டை அடைந்ததும் வீட்டில் தனது மனைவி தனியாக இருப்பதை அறிந்தார்.

அவருடைய மனைவி அவருக்கு உணவு பரிமாற வந்தார். விஞ்ஞானி பிள்ளைகள் எங்கே என்று வினவினார். அவருடைய மனைவி அவருடைய முதலாளி குழந்தைகளை கண்காட்சிக்கு 5.15 அழைத்துச் சென்றதாக கூறினார். நடந்தது என்னவென்றால் முதலாளி, விஞ்ஞானி தீவிரமாக வேலை செய்வதைக் கவனித்து இருக்கிறார். நிச்சயம் விஞ்ஞானி வேலையை நிறுத்தமாட்டார் என அறிந்த முதலாளி தானே அவருடைய குழந்தைகளை கண்காட்சிக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். முதலாளியின் நல்ல குணத்தாலேயே விஞ்ஞானிகள் வேலையில் அழுத்தம் இருந்தாலும் வேலையை செய்ய மறுப்பதில்லை. இந்த உயர்ந்த முதலாளி யார் தெரியுமா? வேறு யாருமில்லை. டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாம் அவர்களே!

## மனம் ஒன்று இசைக்கிறது

-தாமரை மதியழகன்

தனிமையில் ஒரு நாள் என்
மனதை புரட்டிப் பார்த்தேன்
பெரியவர்கள் என்ற பெருமிதமும்
இலட்சியங்கள் நிறைந்த இதயமாய்
நாங்கள் தொடங்கிய கல்லூரி வாழ்க்கை
ஓ அது எங்களின் இன்னொரு கதை தான்.

பாடசாலை சென்றுவிட்டால்
படக்கதைகள் கதைத்துவிட்டு
வகுப்பறையின் பின்னிருந்து
விளையாடி முடித்துவிட்டு
சண்டையிட்டு சாப்பிட்டு
சந்தோஷமாய் வீடு செல்வோம்
ரியூட்டரிக்கு போவதாக
ரோட்டெல்லாம் அளந்துவிட்டு
காளையருக்கு கண்ணடித்து
குறும்புபல செய்துவிட்டு
பட்டங்கள் சூட்டியே
பகிடிகள் செய்திடுவோம்
“இத்தனையும் முடிந்தபின்னால்
இன்னொரு வருடம் கழிந்த பின்னால்”
கற்பனை செய்தேன்
கலங்கியது நெஞ்சம்



தித்திக்கும் வாழ்க்கை பாதை
திசை மாறி போயிருக்கும்
பாடசாலை வாழ்க்கை அப்போ
பரண்மேல் ஏறியிருக்கும்
மேலே கற்பனையை தொடர்ந்திட
மனதிற்கும் சம்மதமில்லை
அதனால் இன்றைய மகிழ்ச்சி தென்றல்
திசைமாறி விடாதொன்ற
நம்பிக்கையுடன் நானும்
மனஏட்டை பூட்டுகிறேன்

# பாரதியார்

- ஷஹானி

பாரதியார் தமிழ்நாட்டில் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக பிறந்தார். தமது ஐந்தாவது வயதில் தாயாரை இழந்தர். அதன்பின் தந்தை அவருக்கு தமிழ் கற்பித்தர். பாரதியாரின் முதல் ஆசிரியர் அவரது தந்தையார் ஆவார்.

பாரதியாருக்கு திருக்குறள், ராமாயணம் போன்ற நூல்களையும் கற்பித்தார். பாரதியார் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளையும் கற்றார். தந்தையிடம் கற்ற தமிழ் அறிவு அவருக்கு கவிதை ஆர்வத்தை வளர்த்தது.



பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் ஒப்பற்ற புலவர். இவரது "ஓடி விளையாடு பாப்பா" போன்ற பாப்பா பாடல்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இவரது கண்ணன் பாட்டு, குயில் பாட்டு போன்றவை சிறுவர்களுக்கான பாடல்கள். இவர் இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டி பாடிய பாடல்கள் மிகவும் உணர்ச்சி மிக்கவை. விண்ணில் ஒளிச்சுடர் ஆக இருந்த சூரியன் தமது 39 ஆவது வயதில் உலகை விட்டு மறைந்தது. பாரதியார் மறைந்தாலும் அவரின் பாடல்கள் என்றும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

# பொங்கல்ப் பானை அதிசயம்

-மெரின் விக்டர் பாபு

பொங்கல் அன்று அதிகாலை ஒரு பிரச்சனையோடு தொடங்கியது. தாத்தாவும் பாட்டியும் காலையிலேயே எங்கள் வீட்டிற்கு வந்து விறகு இருக்கிறதா என்று கேட்டார்கள். ஏனென்றால் அவர்களுடைய வீட்டில் உள்ள விறகுகளை யாரோ திருடியிருக்கிறார்கள். எங்களுக்கும் இல்லை என்று சொல்ல மனது வரவில்லை. அதனால் அம்மா எல்லா விறகுகளையும் அவர்களிடம் கொrhடுத்து விட்டார்.

பிறகு அப்பாவும் நானும் பக்கத்தில் உள்ள காட்டிற்குச் சென்றோம். வழியில் செல்லும்போது ஒரு மாமரத்தின் பின்னால் ஒரு அழகான பானை இருந்தது. புது மஞ்சளைக் கட்டிய புதுப்பானையின் வெளிப்புறம் விதவிதமான வர்ணங்களைக் கொண்ட படங்கள் வரையப்பட்டிருந்தன. அதன் பக்கத்தில் காகிதத்தில் ஏதோ எழுதியிருந்தது. அப்பாவும் நானும் அதை எடுத்துப் படித்தோம். அந்த காகிதத்தில் யார் இந்தப்பானையை முதலில் பார்க்கிறார்களோ பானையை எடுத்துக் கொள்ளலாம் என்று எழுதியிருந்தது. நாங்கள் அந்தப் பானையின் உட்புறத்தை பார்க்காமலே எடுத்து வீட்டிற்குத் திரும்பிச் செல்லத் தொடங்கினோம். திரும்பும் வழியில் சில விறகுகளை எடுத்துக் கொண்டு சென்றோம்.

வீட்டை அடைந்ததும் நான் அம்மாவிடம் நடந்தது அனைத்தையும் கூறினேன். அம்மா அந்தப் பானையை திறந்தார். என்ன அதிசயம்! பானைக்குள் நிறைய தங்க நாணயங்கள் குவிந்து இருந்தன. இதை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று மூவரும் திடுக்கிட்டு நின்றோம். அப்பொழுது அம்மா ஒரு நல்ல யோசனை சொன்னார். அம்மா தானத்தில் சிறந்த தானம் அன்ன தானம் என்பதால் நாம் இன்று பொங்கல் கொண்டாட முடியாத ஏழை மக்களுக்கு பொங்கல் வாங்கிக் கொடுப்போம் என்று சொன்னார். நாங்களும் அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு மதிய அளவில் எல்லா ஏழை மக்களுக்கும் ஒரு தட்டு நிறைய பொங்கல் கொடுத்தோம். எல்லோரும் எங்களை வாழ்த்தி சந்தோசமாகப் போனார்கள்.

இன்னும் கொஞ்சம் தங்க காசுகள் இருந்தன. நாங்கள் அதை வைத்து பக்கத்தில் உள்ள ஏழை மக்களுக்கு துணிக்கடையில் புத்தாடை வாங்கிக் கொடுத்தோம். அவர்கள் எங்களுக்க நன்றி செலுத்தி முகத்தில் மலரந்த சிரிப்பை வைத்துக் கொண்டு மகிழ்ச்சியாக அவர்களது வீடுகளுக்குத் திரும்பினார்கள். என் பெற்றோருக்கும் எனக்கும் மிக மகிழ்ச்சியாக இருந்தது.

வீடு திரும்பியதும் அன்று பொங்கல் பொங்கவில்லை என்று உணர்ந்தோம். பாட்டியும் தாத்தாவும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அவர்கள் தங்கள் பொங்கலைக் கொண்டுவந்து எங்களுக்குக் கொடுத்தார்கள். இரவில் நாங்கள் எங்களின் குடும்பத்தினரோடு பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடினோம். அந்த நாள் மிக மகிழ்ச்சியாகவும் இருந்தது. மிக களைப்பாகவும் இருந்தது.

-----------------

## தமிழ்

-ஜெயராணி கமலேஷ்வரன்

*சிப்பிக்குள் முத்துப் போல் பிறந்தவள் நான்*

*உன் தாய் தந்தையர் யார்? எனக் கேட்டால்*

*எனக்கே தெரியவில்லை*

*நான் பிறந்த காலம் மறந்துவிட்டேன்*

*என்னை வளர்த்தவர்கள் - நீ*

*பிறந்தது இரண்டாயிரம் மூவாயிரம் வருடங்கள்*

*எனக் கூறுகிறார்கள் - ஆனால்*

*நான் இன்றும் இளையவளாய் இனியவளய்*

*மூன்று தமிழ் என்ற பெயரோடு வாழ்கின்றேன் (இயல் இசை நாடகம்)*

*இன்று நான் உங்களிடம் கேட்பது*

*இன்னும் பல்லாயிரம் வருடங்கள் என்னை இளையவளாய் இனியவளய் வாழவிப்பீர்களா?*

*அன்போடு கேட்கிறேன்*

## தெள்ளுதமிழில் இளவேனில் மலர்க!!

*முழுவானில் நீந்தும் ஆதவனும்*
*என்றும் அவ்வானுக்கு அழகாம்*
*இளவேனில் என மலரும் இதழும்*
*கேசி தமிழ் மன்றத்திற்கழகாம்*

*தமிழில் குழந்தைகள் படைப்பும்*
*படைப்பு உலகுக்கு ஓர் அழகாம்*
*அவர் தம் பெற்றோர் படைப்பும்*
*அங்கு கூறிமகிழ கூடுதல் அழகு*

*ஆண்டுக்கு ஒருமுறை மலரும்*
*மலர்களும் இயற்கையில் உண்டு*
*ஆண்டில் இருமுறை மலர்ந்திட*
*இளவேனிலும் இங்கே உண்டு*

*மலரில் கண்ணைக் கவர்ந்திடும்*
*அழகிய பல இதழ்களும் உண்டு*
*கேசி தமிழ் மன்றத்தில் மலரும்*
*மலர்களிலும் அவ்விதழ்களுண்டு*

*தை பிறக்க மகிழும் தமிழர் மனம்*
*பொங்கலில் மலரும் இளவேனில்*
*பொங்கல் சுவையில் வாயினிக்க*
*இளவேனில் சுவை மனமினிக்கும்*

*ஆடி மகிழ தைப்பொங்கல் எனில்*
*கூடி வாசிக்க இளவேனிலுண்டு*
*நாவில் சுவை பொங்கல் இனிப்பு*
*சிறார் படைப்பு மலராய் இனிப்பு*

*நெல்லின் நீர் புல்லுக்கும் உண்டு*
*இளவேனில் எல்லோர்க்குமுண்டு*
*பிள்ளைகள் பெற்றோரென எழுத*
*தெள்ளுதமிழ் சிறந்து விளங்கும்!*

-சங்கர சுப்பிரமணியன்.

# ஒரு மனம் எரிகின்றது

-ஆரணன் மதியழகன்

வானம் கறுத்தது. புகை மேலே ஏறியது. ஐந்து நிமிடத்தில், நட்சத்திரங்கள் காணாமல் போனது. காட்டுக்குள் நெருப்பு எரிந்தது. விசாகன் கடற்கரையிலிருந்து பார்த்தார். ஒரு சிகரெட் காட்டின் நிலத்தில் எரிந்தது. பச்சை நிற காடு, செம்மஞ்சள் நிறத்திற்கு மாறியது. நெருப்பு நகரத்திற்கு கிட்ட வந்தது. இரவு நேரமாய் இருந்ததால் மக்களுக்கு வரும் ஆபத்தை பற்றி தெரியவில்லை. காட்டுத்தீ நகரத்தை சேர்ந்தது.

விசாகனால் எதிலும் கவனம் செலுத்த முடியவில்லை. அவரின் தலை முழு நாளும் சுத்திக் கொண்டிருந்தது. அவரின் நண்பர்களும், பெற்றோர்களும் ஒரு ஆதரவும் கொடுக்கவில்லை. பல மாதமாய் ஒரு விடயம் அவரை பாதித்தது. ஒரே வருத்தமாக இருந்தது. மனம் சரியான நிலையில் இருக்கவில்லை. ஒருவரும் இந்த பிரச்சினையை கவனிக்கவில்லை. மாதக் கணக்காக விசாகன் வருத்தப்பட்டார். பள்ளிகூடத்தில் விசாகன் தனியாக வகுப்பறையின் பின்பக்கத்திலிருந்து படிப்பார். இடைவேளையில், விசாகன் தனியாயிருந்து அவரின் அழுத்தப்பட்ட வாழ்க்கையை பற்றி நினைப்பார். இதனால், அவர் சிலநேரம் தற்கொலையை பற்றியே நினைத்தார். வீட்டிலே, இதை விட மோசமாக இருந்தது. விசாகனின் அப்பா, சின்ன வயதில் வீட்டை விட்டு போய்விட்டார். அவரின் அம்மா எப்போதும் குடித்து, புகை பிடித்து, பணத்தை சூதாட்டத்தில் செலவழித்தார். விசாகனை எப்பவும் அடித்து சித்திரவதை செய்தார். விசாகனை அவரின் மகனாக பார்க்கவில்லை, ஒரு மனிதனாக பார்க்கவில்லை. ஒரு நாள், விசாகனால் இதை தாங்க முடியவில்லை. அவர் கோபத்தில் கத்தினார். வீட்டு பொருட்களை வீசி உடைத்தார். உள்ளே வந்த அம்மா, விசாகனின் காட்சியை கண்டு, அதிர்ச்சி அடைந்தார். கோபத்தில், விசாகனை விட்டிலிருந்து வெளியேற்றினார்.

ஒரு மாதத்திற்கு, விசாகன் பள்ளிக்கூடத்திற்கு போகாமல், தெருவில் வாழ்ந்தார். ஒருவரும் அவரை தேடி வரவில்லை. அவரின் நண்பர்கள் அவரை பற்றி கவலைப்படவில்லை. அவரின் பெத்த அம்மா, அவரை தேடி வரவில்லை. கொஞ்சம் கொஞ்சமாய் வாழ்க்கை மேல் அவரிற்கு வெறுப்பு கூடியது. ஒரு நாள், விசாகனால் அவரின் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முடியவில்லை. விசாகன் விரக்தி அடைந்தார். சேமித்த பணத்தில் எல்லாம் சிகரெட் பெட்டியும், தீப்பெட்டியும் வாங்கினார். இதை வாங்கி விசாகன் ஓட தொடங்கினார்.. நிற்காமல் ஓடினார். அரை மணித்தியாலத்தில் காட்டுக்குள் ஓடினார். காட்டின் நடுவில் ஓடி நின்றார். எப்படி உள்ளே வந்தார் என்று தெரியாமல் நின்றார். தீக்குச்சியை எடுத்து சிகரெட்டை பற்ற வைத்தார். அவரின் மனம் சரியாக இருக்கவில்லை. கத்தி குளறினார். கோபத்திலும், விரக்தி அடைந்ததாலும், விசாகன் சிகரெட்டை மரத்தில் வீசி கடற்கரைக்கு ஓடினார். சிகரெட் மரத்தில் பட்டு நிலத்திலிருக்கும் இலைகளை எரித்தது. விசாகன் இந்த சம்பவத்தைக் கவனிக்கவில்லை. நெருப்பினால் மரங்கள் எரிந்து, மோசமானது. காட்டுத்தீயாய் மாறி, நகரத்தை அடைந்தது. நகரம் முழுவதும் எரிந்து மக்களும் எரிந்தனர். இறுதியில், காட்டின் நடுவில் விசாகன் மட்டுமே அந்த ஊரின் கடைசி மனிதனாக உயிரோடிருந்தான்.

# தைப்பொங்கல்

-ஹரிஷ் வினோதரன்


உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாக கருதப்படும் சூரியனுக்கும் மற்ற உயிர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் நாளே தைப்பொங்கல் திருநாள் ஆகும்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும்.

அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின்
புத்தரிசி, சர்க்கரை, பால், நெய் சேர்த்துப்
புதுப்பானையில் பொங்கலாக்கி சூரியனுக்கு
படைத்து நாமும் உண்டு மகிழும் தமிழர்
பண்டிகையே பொங்கல் விழாவாகும்.

# நாயும் குருவியும்

**-சுவாதி தர்மசீலன்**



*ஒரு ஊரில், ஒரு நாயும், ஒரு குருவியும் இருந்தன. ஒரு நாள் நாயும் குருவியும் சாப்பாடு தேடிப்போயின. தேடித் தேடி, சாப்பாடு கிடைக்கவில்லை. குருவியும் நாயும் மரத்தில் ஒரு பழத்தை பார்த்தன. குருவி மரத்திற்கு பறந்து, பழத்தை சாப்பிட்டது. நாய்க்கு கோபம் வந்தது. "ஏன் குருவி எனக்கு பழம் கொடுக்கவில்லை?", என்று நாய் கேட்டது. குருவிக்கு கேட்கவில்லை. பிறகு குருவிக்கு தெரியாமல் நாய் வீட்டுக்கு ஓடியது. மூன்று நாட்களுக்கு பிறகு, குருவிக்கு பயம் வந்தது. "நாய் எங்கே போய்விட்டது?", என்று குருவி நினைத்தது. சில நிமிடங்கள் போக மழை பெய்தது. குருவிக்கு இன்னும் பயம் வந்தது.*

*"சரியான மழை! நாய் எங்கே போய்விட்டது?!", என்று குருவி பயத்தோடு நினைத்தது. பின்னர் மழை* ***நின்றுவிட்டது****, ஆனால், சலசல என்று நீர் ஓடியதில், வெள்ளம் வந்தது.*

*குருவி பயத்தில் வெள்ளதிற்குள் விழுந்தது. "என்னை காப்பாற்றுங்கோ!" குருவி கத்தியது. அப்போது வெள்ளதிற்குள் ஒரு நரியும் இருந்தது. நரிக்கு கப கப என்று பசி இருந்தது. குருவியைப் பார்த்து, "அற்புதம்! குருவி எனது அடுத்த உணவாக இருக்கும்." என்று நினைத்தது. நரி பசுத்தோல் போர்த்திய புலி போல என்று மற்ற மிருகங்களுக்குத் தெரியும், ஆனால் குருவிக்கு நரி பற்றி தெரியாது.*



*"குருவி! குருவி! எப்படி நீ வெள்ளத்தில் விழுந்தாய்?!", என்று நரி கேட்டது.*



*"என்னை காப்பாற்றுங்கோ!", குருவி சத்தமிட்டது. "சரி, சரி. அமைதியாக இரு. உனது சிறகு ஒன்றை தா, நான் உன்னைக் இழுத்து காப்பாற்றுவேன்.", என்று நரி குருவிக்கு சொன்னது. குருவி தனது சிறகை கொடுத்தது. நரி குருவியை இழுத்து சாப்பிடப்போனது. "ஆ! யாராவது என்னை காப்பாற்றுங்கோ!", குருவி கத்தியது.*

*நாய் குருவியின் சத்தத்தைக் கேட்டது. ஓடிவந்து நாய் குருவியையும் நரியையும் பார்த்தது. நாய் நரியை வள்வள் என்று வெருட்டித் தள்ளி விட்டு குருவியை வாயில் எடுத்துக்கொண்டு ஓடியது. குருவிக்கு சந்தோசம்.*

*"என்னை மன்னித்துவிடு நண்பனே, நான் உனக்கு பழம் கொடுக்கவில்லை. என் தப்பு தான்." , என்று குருவி சொன்னது.*

*"பரவாயில்லை குருவி, நீயும் என்னை மன்னித்துவிடு. நான் உன்னை விட்டு வீட்டுக்கு போயிருக்கக் கூடாது." , என்று சொன்னது.*

*நாங்கள் எப்போதும் போல நல்ல நண்பர்களாக இருப்போம். ஆபத்து வரும்போது உதவுபவன் தானே உண்மையான நண்பன் என்று நாய் சொன்னது.*

# அவுஸ்திரேலிய தமிழ் இளைஞர்கள் தமிழ்ப் பண்பாடுகளையும் கலாச்சாரத்தையும் பின்பற்றவேண்டும்

*-ராகுல் ஸ்ரீதரன்*

*இன்றைய நவீன தொழில்நுட்ப உலகத்தில், ஆஸ்திரேலியாவில் வாழும் பல தமிழ் இளைஞர்கள் அவர்களின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் மறந்து விடுகிறார்கள். ராஜ ராஜ சோழனும், சேர வம்சம் போன்ற உலக புகழ் பெற்ற மன்னர்களும் சத்ரியர்களும் தமிழ் வரலாற்றில் தான் இருக்கிறார்கள். இப்படி இருந்து அடுத்த தலைமுறையின் இளைஞர்கள் தமிழை மறக்கலாமா?*

*தமிழ் தான் உலகத்தில் முதன்மையான மொழி. ஆயிரக் கணக்கான வருடங்களின் கலாச்சாரம், பண்பாடு மற்றும் வரலாற்றை எப்படி மறக்க விடலாம்? தமிழை வளர்த்த மூன்று சங்கங்களை இன்றைக்கும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். திருவள்ளுவரின் திருக்குறளின் மகிமையை பற்றி வேறு மொழி நபர்கள் படித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இப்படி இருந்தும் ஏன் ஆஸ்திரேலியா தமிழ் இளைஞர்கள் தமிழை விரும்பவில்லை? தமிழன் என்று சொல்ல அவர்களுக்கு தான் பெருமையாக இருக்க வேண்டும். "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று மகாகவி பாரதியாரே கூறி இருக்கின்றார்.*

*மேலும் தமிழ் கலாச்சாரத்தில் தான் பல சுவையான கதைகளும் பாட்டுகளும் இருக்கிறது. ராமாயணம், மஹாபாரதம் போன்ற மாபெரும் கதைகள் தமிழில் தான் இருக்கிறது. இன்றைய உலகத்தில் பல வேறு நாட்டு மக்கள் இது போன்ற கதைகளை வாசித்து மகிழ்கிறார்கள். தமிழ் மொழியை ஆராய ஆராய அதன் மகிமையை கண்டு பலர் வியக்கிறார்கள். பல மொழிகளை படித்த மகாகவி பாரதியாரே கூறி இருக்கின்றார் "யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்." அதுமட்டுமில்லை, தமிழ் கலாச்சாரத்தில் மட்டும் தான் அறுசுவை நிறைந்த உணவும் உடம்பிற்கு ஆரோக்கியமான சாப்பாடும் கிடைக்கும். மேலைத்தேய உணவு*

*வகைகளில் சுவை மட்டும் தான் இருக்கிறது. தேவையான சத்துக்களோ உடம்பின் எதிர்ப்பு சக்தியை கூட்டும் மருத்துவ பொருட்களோ இல்லை. இருக்கிற அத்தனை வியாதிகளை*

*மேலைத்தேய உணவுகள் வரவழைக்கும். ஒவ்வொரு நாளும் மேலைத்தையே உணவுகளை சாப்பிட்டால் உடல் பருமனிலிருந்து இதய நோய் போன்ற அதனை வியாதிகளும் வரும். உடம்பின் எதிர்ப்பு சக்தியை கூட்டுவதற்காக இரசம் மற்றும் கசாயம் போன்ற நற்குணங்கள் நிறைந்த உணவுகள் தமிழ் கலாச்சாரத்தில் மட்டும் தான் இருக்கிறது. "கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய" தமிழே உலகில் சிறந்தது.*

*கடைசியாக இதை வாசித்த அனைத்து தமிழ் இளைஞர்களுக்கும் தமிழ் மீது ஒரு தனி மரியாதையும் அதை படிப்பதற்கு ஒரு ஆசையும் வந்திருக்கும் என்று நம்புகிறேன். தமிழ் பாடசாலையிலும், ஆலயத்திலும் கலைவிழாக்களிலும் அதிக தமிழ் இளைஞர்களை பார்க்க விரும்புகிறேன். தமிழ் வாழ்க! தமிழ் மொழி வளர்க!*

# சுத்தம் சுகம் தரும்

*-சரன்ராம். கி*

*"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"*

*நாம் நமது வீட்டையும் சுற்றுப்புற சூழலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் இல்லாவிடில் நோய்கள் நம்மை பாதிக்கும்.*

*குப்பைகளை உரிய இடத்தில் போடுதல் வேண்டும் வீட்டை சுற்றி நீர் தேங்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தனிமனித சுகாதாரம் முக்கியமானது உடலை சுத்தமாக பேணுதல் சத்துள்ள உணவுகளை உண்ணுதல் சுகாதாரமான நீரைப் பருகுதல் போதிய அளவு உடற்பயிற்சி செய்தல் தடுப்பு மருந்துகள் எடுத்தல் என்பனவாகும்*

*"சுவரிருந்தால்தான் சித்திரம் வரையலாம்"*

# கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையின் நன்மைகளும் தீமைகளும்.

*-வைஷ்ணவி சிவஞானசுந்தரம்*

*தொன்று தொட்டு, வாழையடி வாழையாகப் பேணி வந்த குடும்ப முறை இன்று பல காரணங்களினால் மாற்றம் கண்டுள்ளது. அதாவது கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு, போர்ச் சூழல் போன்ற காரணிகள் மக்களை தாய்நாட்டிலிருந்து புலம்பெயரவைத்துள்ளன. குடும்ப அமைப்பு கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப்படும். கூட்டுக்குடும்பம் என்பது பெற்றோர் பிள்ளைகளுடன் உறவுகளும் சேர்ந்த பெரிய குடும்பம் ஒரே வீட்டில் ஒன்றாக வாழ்வது. தனிக்குடும்பம் என்பது பெற்றோர்களும் பிள்ளைகளும் மட்டும் கொண்ட சிறிய குருவிக் கூடு போன்றது. இரு குடும்பங்களிலும் சகிப்புத் தன்மை, அன்பு, ஆதரவு, சுதந்திரம், பணச்செலவு, குடும்பப் பிணைப்பு போன்றவை மாறுபட்ட அளவுகளில் காணப்படும்.*

*கூட்டுக் குடும்பங்களை பொறுத்தவரையில், தாத்தா, பாட்டி, மாமாமார்கள் போன்ற பெரியவர்கள் இருப்பதனால், பிள்ளைகளுக்கு அன்பும் ஆதரவும் கிடைக்கின்றன. ஆனால் தனிக்குடும்பத்தில் ஆதரவும் அன்பும் குறைவான அளவில் பார்க்கமுடியும் ஏன் என்றால் தனிக்குடும்பங்களில் நிறைய பெரியவர்கள் வீட்டில் இருக்கமாட்டார்கள். ஆனால் தனிக்குடும்பங்களில் வாழ்வதனால் வீட்டில் சுதந்திரம் இருக்கும். தனிக்குடும்பத்தில் வாழ்ந்தால் தனிமை இருக்கும். எமக்கு செய்யவேண்டிய வேலையை எமக்கு வேண்டிய நேரத்திலையே செய்யலாம். கூட்டுக்குடும்பங்களில் நிறைய ஆட்கள் இருப்பதால் தனிமை இருக்காது.*

*கூட்டுக் குடும்பங்களில் இருக்கும்போது, ஒருவருக்கு உதவி தேவைப்படும்போது, அவருக்கு உதவி கொடுக்க வீட்டில் நிறைய குடும்ப உறுப்பினர்கள் இருப்பார்கள். தனிக்குடும்பங்களில் பெற்றோர்களும் பிள்ளைகளும் மட்டும் வீட்டில் வாழ்வதால் மற்றவர்களிடம் உதவி கேட்க கடினமாக இருக்கும். ஆனால் இப்போது தொலைபேசி போன்ற தொடர்பு தொழில்நுட்பம் இருப்பதால், ஒரு பெரிய குடும்பம் ஒரே வீட்டில் வாழ தேவையில்லை. இரண்டு தனி வீடுகளில் வாழ்ந்தாலும் ஒருவர் மற்ற வீட்டில் இருப்பவருக்கு தொலைபேசியால் இல்லாவிடில் மற்றவரின் வீட்டிற்கு போய் உதவி கேட்கலாம்.*

*கூட்டுக்குடும்பத்தில் வாழ்வதால் குடும்பத்திக்கிடையே பிணைப்பு இருக்கும் ஏன் என்றால் கூட்டுக்குடும்பத்தில் வாழ்வதால் அனைத்து வேலைகளையும் நடவடிக்கைகளையும் குடும்பமாக செய்து முடிக்கப்படும். கூட்டுக்குடும்பத்தில் வாழும்போது, சகிப்புத் தன்மை மற்றும் பிணைப்பை தூண்டுகிறது. தனிக்குடும்பங்களாக வாழும்போது, வேறு வீடுகளில் இருக்கிறபடியால் இந்த அளவிற்கு பிணைப்பு இருக்கமாட்டாது. ஆனால், அந்த குடும்பங்கள் எவ்வளவு நெருக்கமாக இருக்கின்றன என்பதைப் பொறுத்து, அவர்கள் ஒன்றாக சுற்றுலாக்களுக்கும் பயணங்களுக்கு போய் மற்றும் நிகழ்வுகளை (உதாரணமாக பிறந்தநாள்கள்) கொண்டாடி பிணைப்பை உண்டுபடுத்துவார்கள்.*

*கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பம் என்பவற்றில் பொருளாதாரம், தனிப்பட்ட விருப்பம், வீட்டு வேலை, பிணைப்பு போன்றவை வேறுபட்ட அளவில் இருந்தாலும் இன்றும் கிராமங்களில் கூட்டுக் குடும்பமுறை நிலைத்திருக்கிறது என்பது மறுக்கமுடியாது. அதே வேளையில் நகரங்களிலும் மேற்கத்திய நாடுகளிலும் தனிக்குடும்பமுறை மேற்கூறப்பட்ட காரணங்களால் மேலோங்கிக் காணப்படும். இவ்விரு குடும்ப வாழ்க்கைமுறை நன்மை தீமைகள் பல்வேறு வகையாக காணப்படுகின்றன.*

# உறவு

*தாயின் அன்பு....*

*அது வானம் வரை!!!*

*தந்தையின் அன்பு...*

*அது கடல் வரை!!!*

*நட்பின் அன்பு...*

*அது உயிருள்ள வரை!!!*

# அப்பா

-யுவர்ணிகா – ரமேஷ்

அன்பு என்ற சொல்லுக்கு அர்த்தம் அப்பா

தூய இதயம் கொண்டு தாயானவர் அப்பா

வலிமையில் சிறந்தவர் அப்பா
வாழ்வை அர்ப்பணித்தவர் அப்பா

என் மூச்சு
என் சிரிப்பு
என் மகிழ்ச்சி
என் உலகம்
என் வாழ்க்கை - அப்பா

உலகின் விடியல் ஆதவனில்
உயிரின் விடியல் அப்பாவில்

அன்னை கருவில் பத்து மாதம்
அப்பா அணைப்பில் அனுதினமும்

தோற்று மகிழ்வார் குழந்தையாய்
இருக்கையில்
தோள் கொடுப்பார் தோழனாய்
வாழ்க்கையில் அப்பா

உலகையே கண்முன்னே நிறுத்துவார்
உலகமாய் எனக்குள்ளே இருப்பார் அப்பா

தன் அழகை பாராமல் தன் பிள்ளைகளின்
அழகைப் பார்த்து ரசிப்பவர் அப்பா

தன் அறிவை கண்டு வியக்காமல் தன்
பிள்ளைகளின் அறிவை கண்டு வியப்பவர்
அப்பா

தன் உணவை உண்ணாமல் தன்
பிள்ளைகளுக்கு ஊட்டி விடுவார் அப்பா

தான் உறங்காமல்
தன் பிள்ளைகளை உறங்க வைப்பவர் அப்பா

தான் பெற்ற இன்பங்களை விட தன்
பிள்ளைகள் அதிகம் பெற உழைப்பவர்
அப்பா

தான் பெற்ற துன்பங்களை தனக்கெனக்
கொண்டு
வாழும் ஒரே ஜீவன் அப்பா

நீங்கள் ஒருபோதும் புகழைத்
தேடுவதில்லை

நீங்கள் ஒருபோதும் பெருமை
பேசுவதில்லை

சுயநலம் தவிர்த்து
சுமையானாலும் சுகமென
சுமக்கும் சுகந்தமே அப்பா

நீங்கள் எப்போதும் எனக்காக
இருந்திருக்கிறீர்கள்
மிகவும் பிரகாசமான புன்னகையுடன் அப்பா

உங்கள் புன்னகை என் உந்து சக்தி அப்பா

கடவுளிடமிருந்து கிடைத்த ஒரு
அருமையான
பரிசாக நான் உங்களைப் பார்க்கிறேன்
அப்பா

காகிதத்தில் எழுதப்பட்ட வார்த்தைகளால்
உங்களிடமிருந்து நான் உணரும் அன்பை
ஆழமாக வெளிப்படுத்த முடியாது அப்பா

உங்கள் வலுவான அகலமான கைகளில்
நீங்கள் என்னைத்தூக்கி இறுக்கமாக
அரவணைப்பீர்
இன்னல்கள் என்னை சூழ்ந்த போதெல்லாம்
நான் எப்போதும் தஞ்சமடையக் கூடிய
மனிதர்

எனது முதற்படி எடுத்து வைத்த நாளில்
இருந்து
நீங்கள் என் பக்கத்தில் இருப்பவர் அப்பா

நான் விழும்போதெல்லாம் எழுவதற்காய்
என்ன
செய்ய வேண்டுமென எனக்குத்
தெரியாதபோது
நீங்கள் எனக்கு வழிகாட்டினீர்கள் அப்பா

நாளும் உங்கள் பணி என்னை
புன்னகைக்கச் செய்வதே

பள்ளிப் படிப்பு முடித்து தினம் கண்களில்
கண்ணீருடன்
நான் வீட்டிற்கு வரும் பல நாட்கள் அங்கே
உட்கார்ந்து
தேவைப்படும் வரை
என்னை ஆறுதல் படுத்துவீர்கள் அப்பா

கன்னத்தில் வழியும் கண்ணீரைத் துடைத்து
அது சரியாகி விடும் என்று தேற்றுபவர்
அப்பா

என் வாழ் நாள் முழுவதும் எனக்கு
மிகப் பெரிய தூணாக இருக்கிறார் அப்பா

நீங்கள் தவறுகளில் இருந்து சரியை
எனக்கு கற்றுக் கொடுத்தீர்கள் அப்பா

என்னை அச்சங்களை எதிர் கொள்ள நீங்களே
எனக்கு கற்றுக் கொடுத்தீர்கள் அப்பா

ஒவ்வொரு நாளும் வரும்போது எடுத்துக்
கொள்ளுங்கள்
என்று எனக்குச் சொல்லுவீர்கள் அப்பா

தாழ்மையுடன் இருப்பது எப்படி என்று
நீங்கள் எனக்கு கற்றுக் கொடுத்தீர்கள் அப்பா

அன்பான அப்பா வேண்டாத வரமே அப்பா

தங்கத்தின் இதயம்கொண்டவர்
தரணியில் எங்கள் அப்பா.

# தமிழ் மொழி

தமிழ் மொழி உலகில் தொன்மையான ஒரு மொழி. இன்றைய நவீன உலகில் தமிழ் மொழி பல நாடுகளில் பூர்வீக மக்களாலும் புலம் பெயர்ந்த மக்களாலும் பரவலாகப் பேசப்படுகிறது. நமது தலைமுறை தமிழ் மொழியை நன்கு கற்று அறிவதால் கலை கலாச்சாரம் உறவாடல் மட்டுமன்றி பல தொழில் தொழில் வாய்ப்புக்களையும் வருங்காலத்தில் பெறலாம். இருப்பினும் இரண்டாவது மொழியாக புலம் பெயர்ந்த நாடுகளில் தமிழ் கற்பதற்கு பல சவால்களைக் கடக்கவேண்டும்.

நாம் தமிழ் கற்பதற்கு தமிழ் மொழிப் பாடசாலைக்கு வார இறுதியில் தவறாது செல்வோம். வீட்டில் மற்றவர்களுடன் தமிழ் மொழியில் கலந்துரையாடுவோம், தமிழ் மொழி நாடகங்கள், நல்ல பாட்டுக்கள், மற்றும் சிறுகதை , நாவல்களை ஆர்வத்துடன் பார்த்து, கேட்டு, வாசித்து மகிழ்வோம். ஒழுங்காக தமிழ் புத்தகங்களைப் படிப்போம்.

இந்த முயற்சியால் நாம் இன்று மேற்கத்தைய நாடுகளிலும் தமிழில் பேசுகிறோம், தமிழ் கலை, கலாச்சாரம், நல்ல பண்புகளைப் பேணி வருகிறோம். தமிழில் இணையத்திலும் தொடர்பாடுகின்றோம். தொன்மை வாய்ந்த தமிழ் மொழியை இன்னும் அழியாது போணுகின்றோம். இது இன்றைய தலைமுறையான நமது கடமையாகும்.


# தமிழ் வளர்ப்போம் !

-திருமதி சுஜீத்தா நேசகுமார்.

தொன்மையும் தனித்தன்மையும்
தென்பொதிகையில் தோற்றமும்
தேன்பாய்ச்சும் தினம் தினமும்
தெவிட்டாத நம்செந்தமிழ் மொழி

தத்துவங்கள் நிறைந்த மொழி
சந்தங்கள் பல பேசும் மொழி
வித்தகர்கள் தோன்றிய மொழி
வீறுநடை போடும் மொழி

இத்தனை சிறப்புகள்
இம்மொழிக்கு இருந்தாலும்
இனிவரும் காலங்களில் நாம்
இருளில் மூழ்க விடலாமா




சின்னஞ்சிறு சிட்டுகள் வாயில்
சித்திரத் தமிழதனை சிரத்தையுடன்
சிங்காரக் கதைகள் கூறி
சிறிதளவேனும் ஊட்டி விடுங்கள்

ஆங்கிலம் பேசும் போது
அழகாக இரசித்த நீங்கள்
தமிழ் பேச மட்டும் ஏன்
தட்டிக் கொடுக்க தயங்குவதேன்

இந்த ஊரில் தமிழ் படித்து
இனியென்ன இலாபமென்று
இகழ்ச்சியுடன் இருந்துவிட்டால்
இளந்தலைமிறை வஞ்சிக்கும்
எதிர்காலத்தில் எம் இனத்தை

தமிழ்மொழி கற்றுத்தர
தாய்மாரே நீர் விரும்பின்
தயவுசெய்து தமிழ்ப்பள்ளி
தயங்காமல் நீர் செல்வீர்

தமிழ்மொழியை தரமாக
தம்பிள்ளை பேச வேண்டின்
தாய் தந்தை உம் பொறுப்பு
தமிழில் மட்டும் வீட்டில் பேச வேண்டும் !

# நல்லது செய்தால் நல்லதே நடக்கும்.

*-அபிதாரணி – சந்திரன்*

*என்றும் போல் இன்றும் நான் காலையில் எழுந்தவுடன் எனது சுவற்றில் பெருமையுடன் தொங்கும் உயர்ந்த மனிதன் பரிசைப் பார்த்து கௌரவத்துடனும் பெருமையுடனும் புன்னகைத்தேன். நான் ஒரு மருத்துவராகப் பணியாற்றி வருகின்றேன். எனது மருத்துவமனைக்கு பிணியுடன் வரும் நோயாளிகளுக்கு மருத்துவம் செய்து பணம் பெறுவது என்னை வாழ வைத்துள்ளது. ஆனால் அது மனத் திருப்தியுடனும் சந்தோசதுடனும் அல்ல.*

*விடுமுறைக் காலத்தில் நான் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இலங்கைக்குச் சென்றேன். ஈழ மண் வாசனை இருகரங்களைக் கொண்டு என்னை வரவேற்றது. வீட்டுக்குச் சென்றுவிட்டு ஊரைச் சுற்றிப் பார்த்தோம். அப்போது பல குழந்தைகள் தெருவில் பிச்சை எடுத்துக் கொண்டு இருந்தார்கள். அவர்களை நோக்கிச் சென்றேன். '' அக்கா சாப்பிட்டு நான்கு நாட்களாகிவிட்டது. ஏதாவது தர்மம் செய்யுங்கள். எமக்கு மிகவும் பசிக்கின்றது.'' என்றார்கள். 'உங்கள் பெற்றோர்கள் எங்கே?'' எனக் கேட்டேன்*

*'' நாங்கள் இருந்த இடத்தை இராணுவம் குண்டு வைத்துத்து தகர்த்து விட்டது. நாம் அனைவரும் பாடசாலையில் இடம் பெயர்ந்து இருந்த பொழுது இது நடந்தது.'' என்றார்கள், பரிதாபபட்டு நானும் அவர்களுக்குப் பணம் கொடுத்தேன்.*

*நான் எங்கு சென்றாலும் என் கண்களுக்கு போர் அனர்த்தங்களினால் காயப்பட்டு வீதியில் பிச்சை எடுக்கும் குழந்தைகளே அதிகமாகக் காணப்பட்டனர். இது எனது மனதை மிகவும் காயப்படுத்தியது. இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று எனது மனதில் உறுதி கொண்டேன்.*

*'' வறியவர்க் - கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்*
*குறியெதிர்ப்பை நீர் துடைத்து''*

*என்ற குறளை மனதில் நினைத்துக் கொண்டேன்.*

*இருப்பினும் என்னைச் சுற்றியிருப்பவர்கள் '' ஆழமறியாமல் காலை விடாதே'' என்றார்கள். நான் செய்ய இருக்கும் விடையத்தை எப்படி செய்வதென ஆரய்ந்து, திட்டமிட்டு செயற்படத் தொடங்கினேன்.*

*யாரிடமும் உதவி கேட்காமல் எனது செலவில் ஒரு கட்டடத்தைக் கட்டினேன். ஊரில் காணப்பட்ட அனாதைக் குழந்தைகளுக்கு ஆசிரமத்தைக் கட்டி அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தேன். எனது ஆசிரமத்தில் காணப்பட்ட முப்பத்தி ஐந்து குழந்தைகளுக்கும் இலவச மருத்துவம் கொடுத்தேன். ஒரு கட்டத்தில் எனக்கு பண நெருக்கடி ஏற்பட்டது. யாரிடம் உதவி கேட்பது என்று தெரியாமல் திக்குத் தடுமாறிப் போனேன். அச் சமயம் பார்த்து*

*''உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கே*
*இடுக்கண் களைவதாம் நட்பு''*



*என்ற குறளுக்கு அமைய எனது நண்பி எனக்கு பணம் தந்து உதவினாள். உணவுக்கான செலவுகளையும் கல்விக்கான செலவுகளையும் எனது நண்பி தேவி பார்த்துக் கொண்டாள். நான் ஆசிரமத்திற்குத் தேவையான உபகரணங்களையும் வசதிகளையும் கவனித்தேன்.*

*'' முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்''*

*என்பதற்கமைய எமது ஆசிரமம் பெரிதாகி பல அனாதைக் குழந்தைகளுக்கு அதுவே வீடாகியது.*

*பலர் நாம் செய்த சேவையைப் பாராட்டினார்கள். நாம் செய்த விடையத்தை உலகம் முழுதும் பரவச் செய்தார்கள். எனது சேவையைப் பாராட்டி எனக்கு ''உயந்த மனிதன் 2019'' என்ற விருதை வழங்கினார்கள்.*

# நான் பார்த்து உணர்ந்த தமிழ்தேசிய நிகழ்வு

*- ஜனனன் ரமேஷ்*

*என் பெற்றோர் 30 வருட போரினால் பெரிதும் பாதிப்புற்ற இலங்கையின் தமிழ் பகுதியிலிருந்து இந்த அவுஸ்ரேலியா நாட்டிற்கு குடிபெயர்ந்தவர்கள். நாங்கள் மூவரும் இங்கு பிறந்தவர்கள். நாம் இங்கு வளர்ந்து வந்தாலும், எம் பெற்றோர் எமது பூர்வீகம், இனம், மொழி, சமயம், கலாச்சாரம், இலங்கை நாட்டில் நடந்த போர் பற்றியும், அங்கு நடந்த அழிவுகளையும் பற்றி எமக்குக் கூறுவவார்கள். நாங்களும் அதைப்பற்றி அடிக்கடி கேள்வி கேட்போம். அதன் காரணமாக கடந்த 2 முறை இலங்கை, இந்தியாவின் தமிழ்நாடு சென்றபோது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும், ஆலயங்களையும், போரினாலும், சுனாமியினாலும் பாதிப்புற்ற இடங்களிற்கும் கொண்டு சென்று காட்டினார்கள். இதனால் பாதிப்புற்ற மக்கள் தங்கியிருந்த இடங்களிற்கும் கொண்டு சென்று காட்டும்போது, நம்முடைய தமிழ் மக்கள் இன்னமும் அங்கு கஷ்டப்படுவதைப் பார்க்க எங்களுக்கு மிகவும் வேதனையாகவும், கஷ்டமாகவும் இருந்தது. எமது பெற்றோரும் இங்கு இடம்பெயராவிட்டால், நாமும் இப்படித்தான் கஷ்டப்பட்டிருப்போம் என்று உணர்ந்தோம்.*

*எமது அப்பா, அம்மாவுடன் நாமும் சில உதவிகளைச் செய்தோம். அப்படி எமக்கு ஏற்பட்ட ஆர்வமும், அக்கறையும் இங்கு எம் பெற்றோர் மெல்பேனில் நடக்கும் தமிழ் விழாக்கள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் தமிழ் தேசிய நிகழ்வுகளிற்கு கொண்டு செல்லும்போது இன்னமும் ஆர்வத்தைத் தூண்டியது. எமது தாய்மொழி தமிழ் மூலம் பல விபரங்களை அறிந்துகொண்டோம். அவ்வாறு நாம் சிறு குழந்தை மூலம் தவறாது சமூகமளிக்கும் நிகழ்வு மாவீரர்நாள். அந்த நிகழ்வில் எமது தமிழ் இனத்துக்காக இறந்த பல மக்களுக்கு, இங்கு எமது குடும்பம் உட்பட பலர் விளக்கேற்றி, மலர்தூவி அஞ்சலி செய்வார்கள். இப்பொழுது எம் அம்மா, அப்பாவின் உறவினர்கள் ஈழப் போரில் இறந்துவிட்டார்கள். முன்பு அம்மா, அப்பா, பூட்டி விளக்கேற்றிய படங்களுக்கு யார் முதலில் விளக்கேற்றுவது என்று என் அண்ணா, தம்பிக்கிடையே எப்போதும் போட்டி தான். அவர்களின் இறந்த உடல்கள் புதைத்த கல்லறைகள் எல்லாம், இப்பொழுது இலங்கையில் அழிக்கப்பட்டு, மரங்கள் வளர்ந்திருப்பதை நாம் நேரடியாகப் பார்த்துள்ளோம்.*

*எமது அம்மம்மா, அப்பப்பா, பாட்டா, பூட்டி, சித்தப்பாவிற்கு நாம் வீட்டில் ஒவ்வொரு ஆண்டும், திவசம் செய்வது போன்று இந்த அண்ணா, அக்காமார்களிற்கு திவசம் செய்ய குடும்பம், உறவினர் இருப்பார்களோ தெரியாது. எனவே நாம் தான் அவர்களிற்கு ஒவ்வொரு ஆண்டும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தவேண்டும். அதைச் செய்வது எப்படி என்றும், எமது வரலாறுகள் பற்றியும் எம் பெற்றோர்கள் சொல்லித் தந்து இருக்கின்றார்கள். அவர்களுக்கு எமது பூர்வீகம் பற்றிய உண்மையைக் கற்றுத் தந்ததிற்கு நன்றி கூறி, எமது நண்பர்களையும் அவர்களின் பெற்றோரிடம் இருந்து கற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.*

# நோய்களில் இருந்து பாதுகாப்பு

*-நமீஷ்*

*எமது உடலில் பலவிதமான நோய்கள் வருகின்றன. இதனால் நாம் பாடசாலைக்கு செல்ல முடியாது. அப்பாவும் அம்மாவும் வேலைக்கு செல்ல முடியாது. தடிமன். காய்ச்சல் இருமல் மற்றும் வயிற்றுவலி ஆகிய நோய்கள் எமக்கு வருகின்றன. எமது உடலை பாதுகாக்க சில வழிகள் உள்ளன*

1) *உடலை நாம் சுத்தமாக வைத்தல் வேண்டும். தினமும் குளித்தல் வேண்டும். பற்களை விளக்க வேண்டும். கைகளை சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.*

2) *சத்துள்ள உணவுகள் உண்ணுதல் வேண்டும். முட்டை பால் இறைச்சி பழங்கள் மற்றும் தானியங்கள் போன்ற உணவுகள் உண்ணுதல் வேண்டும்.*
3) *சுத்தமான நீரை பருக வேண்டும்.*

4) *உடற்பயிற்சி செய்ய வேண்டும். நாங்கள் கால் பந்து விளையாட வேண்டும்.*

# நிஜமா?

*- சுவேதா விக்னேஷ், பாரதி பள்ளி*

*காற்று ஆவேசமாக வீசியது;*
*மரங்கள் நர்த்தனம் ஆடுவதைப் போல்,*
*சுழன்று ஆடின.*
*ஆனால்,*
*இந்த நடனம்,*
*கோரத் தாண்டவம் போல் தெரிந்தது.*
*என்னைச் சுற்றி,*
*இருள் சூழ்ந்தது.*

*பால் நிற வெண்ணிலாவொளி,*
*மரங்களிடையே வீசியது.*
*பயத்தினால், நான் நடுநடுங்கினேன்.*
*எங்கே நான்?*
*இது ஒரு கனவா?*
*இல்லை*
*... நிஜமா?*

*திடீரென,*
*பேரோசை ஒன்று கேட்டது;*
*எனது மெய் சிலிர்த்தது.*
*நான் எல்லாக் கட்டுப்பாட்டையும்*
*இழந்தேன்.*

*என் மனதைக் கட்டுப்படுத்த முடியாமல்,*
*எனது கால்கள் தானாகவே,*
*வேகமாக ஓட ஆரம்பித்தன.*
*நான் காற்றில் மிதப்பது போல் உணர்ந்தேன்.*
*நான் பேயால் பிடிக்கப் பட்டேனா?*

*திடீரென்று,*
*என் கால்கள் நின்றன.*
*மரங்கள், தென்றலை வீசின.*
*அதே பால்நிலவு,*
*அமைதியாக ஒளி பாய்ச்சியது.*
*மரங்கள் மெதுவாக,*
*இரகசியமாய் உரையாடின.*


*" கண் திறவுங்கள்!*
*உங்கள் எண்ணங்களே*
*வாழ்வில் நிஜங்களாகின்றன ! "*

# என் கவித்தோழி

*-தர்மதா (நித்யா தர்மசீலன்)*

*காற்றொடு கலந்திடும் கவி என் சோதரி!*
*நேற்றும் இன்றும் நாளையும் தோழி!*
*போற்றுவார்! நாளை தூற்றுவார் சிலபேர்!*
*ஆற்றுவாள் தோழி! தேற்றுவாள் என்னை!*

*விழிநீர் நிறுத்திடும் வினை அவள்*
*கொண்டாள்!*
*விடையறியாத வினாவிலும் நின்றாள்!*
*சினம் தணிப்பதிலும் சிறந்தே நிற்பாள்!*
*இனம் தனை நினைக்கையில் என்னுடன்*
*வந்தாள்!*



*துள்ளிடும் வேளையில் என் செல்லிடம்*
*அவளே!*
*துயர் வரும் போதினில் தோழியும் அவளே!*
*மெல்லிசை தன்னின் பிறப்பிடம் அவளே!*
*மீட்டிடும் நினைவின் தரிப்பிடம் அவளே!*

*என் நிலை அறியும் இன்னுயிர்த்தோழி!*
*இரவோ பகலோ இணை பிரியாதவள்!*
*விண் தொடும் கனவை விதைப்பவள்*
*அவளே!*
*விரிந்திடும் சிறகின் வீரியம் அவளே!*

*கற்பனைக்குழவியின் கருவறை அவளே!*
*காற்றிடைவெளியின் தரிசனம் அவளே!*
*வேற்றுமை காட்டா வெண்ணிலவானாள்!*
*தோற்றிடும் போதிலும் துணை வரத்*
*தவறாள்!*

*காற்றொடு கலந்திடும் கவி என் சோதரி!*
*நேற்றும் இன்றும் நாளையும் தோழி!*
*போற்றுவார்! நாளை தூற்றுவார் சிலபேர்!*
*ஆற்றுவாள் தோழி! தேற்றுவாள் என்னை!*

# கஞ்சப்பிரபு

-வைணவம்

ஒரு ஊரிலே ஒரு பெரிய தனவந்தர் இருந்தார். அவர் பெரிய பணக்காரராக இருந்து என்ன பயன். யாருக்குமே அவர் எவ்வளவு நெருங்கிய உறவினராக இருந்தாலும்கூட அவரிடமிருந்து ஒரு சதமேனும் பெயராது. அதனால் அவர் பெயர் மறக்கப்பட்டு எல்லோராலும் கஞ்சப்பிரபு என்றே அறியப்பட்டார். அவர் பெயர் யாருக்குமே தெரியாது போய்விட்டது. இந்த நிலையில் ஒரு சமயம் இளையோர்களால் நாட்டில் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக நிதி சேகரிக்கும் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, ஒரு பெரிய விழாவாக நடாத்தத் திட்டமிட்டார்கள்.

இதன்போது இளைஞர் குழாம் வீடு வீடாகச் சென்று நிதி திரட்டலில் ஈடுபட்டார்கள். பலர் அவரிடம் போவதனால் பயனில்லை எனத்தடுத்தபோதும், ஒரு குழுவினர் ஒரு தடவை சென்று பார்ப்போம் என அவநம்பிக்கையுடன் கஞ்சப்பிரபுவின் வீட்டுக்கும் நிதி சேகரிக்கும் முனைப்புடன் நுழைந்தனர். வீட்டின் முன் விறாந்தையில் வீற்றிருந்த கஞ்சப்பிரபுவும் இளைஞர்கள் கேற் திறந்து உள் நுழைவதை , வெகு காலமாக யாருமே அவர் வீட்டைத்தேடி வராத காரணத்தால், ஆச்சரியத்துடன் நோக்கினார்.

அவர் அருகே வந்த இளைஞர்கள் மிகுந்த மரியாதையுடன் அவருக்கு வணக்கம் கூறி தாங்கள் வந்த காரணத்தை விலாவாரியாக அவருக்கு விளக்கிக் கூறினார்கள்.

அப்போது அவர்கள் செய்வது நல்ல விடயம்தான் எனக் கூறி அவர்களைப் பிறிதொருநாள் வரும்படி தட்டிக்கழிக்கும் விதமாக வேண்டினார். இவரையும் கேட்டுவைப்போமே என்ற அவ நம்பிக்கையுடன் புறப்பட்டு வந்த இளைஞர்களுள் ஒருவன் எதிர்பார்த்த பதிலினால் ஆத்திரப்பட்டு , ''ஐயா உங்கள் பெயரைப் போட்டு ரூபா. ஐம்பதினாயிரம் என எழுதிக் கொள்கிறோம், ஆனால் அதை நீங்கள் தர வேண்டாம். உங்கள் பெயரைக் கூறினால் போதும் எழுதிக் கொள்கிறோம் '' எனக் கூறியபோது. ''அட இதுவும் நல்ல யோசனைதான், என் பெயர் தெரியாமலா இங்கு வந்தநீங்கள், ஊரெல்லாம் என் பெயர் தெரியுமே, போடவேண்டியதுதானே'' என்றார். உடனே அந்தப்பையன் '' நல்லது ஐயா, உங்கள் பெயர் கஞ்சர்தானே, அவ்விதமாகத்தான் ஊரெல்லாம் உங்கள் பெயர் கூறுவார்கள். நாங்கள் அவ்விதமே உங்கள் பெயரிட்டு, உங்கள் தலைமையில் இவ்விழா நடைபெறுவதாக அறிவிக்கின்றோம் நீங்கள் வந்து தலைமையேற்று விழாவைச்சிறப்புற நடத்திவைக்கவேண்டும், இதனால் உங்கள் பெயரும் ஓங்கும்''. எனக் கேட்டுக் கொண்டான். இப்பதிலினால் சினமுற்றாலும், இந்தப் பையன்கள் இவ்விதம் செய்தாலும் செய்துவிடுவார்கள், தனக்குள்ள அவப்பெயரை இதன் மூலம் மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதாகச் சிந்தனை செய்து பதை பதைப்புடன்,'' தம்பியவை நான் ஐம்பதினாயிரம் தருகின்றேன்,

நானே வந்து நின்று தலைமை வகித்து மிகவும் சிறப்பாகச் செய்து கொள்வோம், என் பெயர் புண்ணியகோடி அவ்விதமே போட்டுக்கொள்ளுங்கள். எனக்கு வேண்டாதவங்கள் ஊருக்குள்ள என்ர பேரைக் கெடுத்துப் போட்டாங்கள்'' எனக்கூறி, இளைஞர்களை ஆசனமிட்டு அமரவைத்து அவர்களுக்குச் சிற்றுண்டிகளும் கொடுத்து உபசரித்து, போகும்போது ரூபா ஐம்பதினாயிரம் பணமாகக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

இளைஞர்களும் அவருக்கு மீண்டும் மீண்டும் வணக்கம் கூறி நன்றி தெரிவித்து விடை பெற்றுச் சென்றனர். ஊரவர்களும் இதைக் கேள்விப்பட்டு மிக மகிழ்ந்து கஞ்சப்பிரபுவை புண்ணியகோடியாக மாற்றிய இளைஞர்களைப் பாராட்டி விழாவுக்கு வருகை தந்து தலைமையேற்ற புண்ணியகோடியையும் அவருக்கு மாலை மரியாதை செய்து பெரிதும் பாராட்டிச் சிறப்பித்தார்கள். திருவாளர் புண்ணியகோடியும் மகிழ்ந்து போய்

''இப்படியும் ஒரு மகிழ்ச்சி இருக்கின்றதா? இதுவரை நான் அனுபவித்திராத மகிழ்ச்சியாக இருக்கின்றதே''

என்று ஆசைப்பட்டு , ஊருக்குள்ளேயே பெரிய கொடையாளராக மாறிப்போனாராம்.

# வணங்குகிறேன் தாயே...

- வேலணையூர் ரஜிந்தன்.

ஆயிரம் உறவுகள்
அவனியை நிறைக்க
அன்னையுன் அன்பினை
எவருண்டு நிகரப்ப!

தெய்வத்தை தேடினேன்
கோயில்கள் முழுக்க
ஓலைக் குடிசையில்
என்தெய்வம் இருக்க!

தூற்றுவார் போற்றுவார்
போற்றியும் தூற்றுவார்
ஏற்றிட வழிகாட்ட
உனையன்றி யாரிங்கு!



பாசத்தை வேடமாய்
அணிந்திட்ட பலருண்டு
பாசமே உருவமாய்
நீமட்டும் தானுண்டு!

குரலிலே உடல் நலம்
அறிகின்ற வைத்தியம்
வார்த்தையில் மனநிலை
உணர்கின்ற மகத்துவம்!

கண்டேனே வதனத்தில்
தியாகத்தின் ஒளிவட்டம்
தாயேயுன் அணைப்பிலே
அகன்றது துயர் மொத்தம்!

பாட்டுடைத் தலைவியை
பாடுவேன் என்சித்தம்
பாவாலே தினம் போற்றி
வணங்குவேன் உனை நித்தம்!

# காட்டுச் சுற்றுலா

அஸ்வின் சசிகரன். பாரதி பள்ளி

பாடசாலை விடுமுறையின்போது நண்பர்களான கண்ணன், நவீன், ஜனகன் எல்லோரும் சேர்ந்து காட்டைச்சுற்றிப் பார்க்கப் போனார்கள். ஜனகன் நண்பர்களைப் பார்த்து துடுப்பாட்டம் விளையாடுவோம் என்று கூறினார். விளையாடுவதற்கு உரிய இடத்தைத் தேடினார்கள். நண்பர்கள் தேடிப்பார்க்கையில் எல்லா இடத்திலேயும் மரங்களாகக் காணப்பட்டது. நண்பர்கள் சரியான இடத்தைக் கண்டுபிடித்து துடுப்பாட்டம் விளையாடத் தொடங்கினார்கள். யார் துடுப்பு அடிப்பதென்றும், யார் பந்து போடுவது என்றும் சண்டை பிடித்தார்கள். பின்பு சமாதானமாகி ஜனகன் துடுப்பு அடிப்பதென்றும், நவீன் பந்து எறிவதென்றும் விளையாடத் தொடங்கினார்கள்.

மூன்று நண்பர்களும் துடுப்பாட்டம் விளையாடும்போது, ஜனகன் பந்தை அடித்ததும், அந்தப் பந்து தொலை தூரம் போனது. கண்ணனும், நவீனும் அந்தப் பந்தைத் தேடியும் பந்து கிடைக்கவில்லை. இரவும் ஆகிவிட்டது, அதனால் நண்பர்கள் மூவரும் மறு நாள் திரும்பவும் வந்து பந்தைக் கண்டு பிடிப்போம் என வீட்டிற்குத் திரும்பினார்கள்.

மறுநாள் காலையில் மீண்டும் அந்த இடத்தில் போய்ப் பந்தைத் தேடினார்கள. ஆனால் அந்தப் பந்தைத் திரும்பவும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது நவீன் உயர்ந்த மரங்களைப்பார்த்துக் கொண்டு வரும்போது, மரக்கிளை ஒன்றில் பந்து தொங்கிக் கொண்டிருந்தது. நண்பர்கள் சந்தோசமடைந்து மரத்தில் ஏறி பந்தை எடுத்துக் கொண்டு வீடு திரும்பினார்கள்

## காட்டுத் தீ

-ஜாகுலன் ரமேஷ்

நாங்கள் வாழும் அவுஸ்திரேலியாவில் காலநிலை மாற்றத்தால் இப்பொழுது அடிக்கடி காட்டுத் தீ ஏற்படுகிறது. அதுவும் இந்த வருடம், கடந்த 3 மாதத்தில் மட்டும் கடுமையான காட்டுத் தீ அவுஸ்திரேலியாவின் 6 மாநிலங்களைப் பாதித்துள்ளது. அதிலும் குறிப்பாக நியூசவுத் வேல்ஸ் மாநிலத்திலும், எமது விக்டோரியா மாநிலத்திலும் அதிக பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. பல சொத்து இழப்புகளும், உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளது. எனது பெற்றோர் மூலமும், செய்திகள் மூலமும், கூகிள் மூலமும் பார்த்த செய்திகளின்படி இதுவரை 15 மில்லியன் ஏக்கர் காடுகள் எரிந்ததில், 1500க்கு மேற்பட்ட வீடுகளும், கட்டிடங்களும், சுமார் 50 கோடி விலங்குகளும், பறவைகளும் எரிந்து அழிந்துள்ளது. 3 தீயணைப்பு வீரர்கள் உட்பட, 19க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் சில இயற்கையான காட்டுத்தீயினாலும், சில திட்டமிட்டு ஆரம்பித்த தீயினாலும், இந்த இழப்பும், அழிவுகளும் ஏற்பட்டது என்று செய்திகளில் பார்த்தோம். இப்படி யாரும் தீ மூட்டும்போது பார்த்தால், காவல்துறையிடமோ, சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரிகளிடமோ ஆதாரத்துடன் முறையிடவேண்டும் என்று செய்தித்தாளிலும், தொலைக்காட்சிகளிலும் பார்க்கிறோம். இதை எல்லோரும் செய்து, நாம் வாழும் நாட்டையும், மக்களையும் பாதுகாக்க வேண்டும். இந்தக் காட்டுத்தீயினால் ஏற்பட்ட புகையினால் எமது பகுதிகளிலும், தலைநகரங்களிலும் நாம் சுவாசிக்க முடியாத அளவிற்கு பல கஷ்டங்களை ஏற்படுத்தியுள்ளது. இது எமது நாட்டிற்கு, உலக அளவில் நல்ல பெயரை ஏற்படுத்தாது. காட்டுத்தீயினால் பாதித்த மக்களுக்கு அவுஸ்திரேலியாவின் கூடுதலான மக்களும், அமைப்புகளும் உதவிவருகின்றன. எங்களது தமிழ் அமைப்புகளும் உதவி செய்ததாக என் பெற்றோர் கூறினார்கள்.

காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தவும், இழந்த மரங்களிற்கு பதிலாக நாம் எல்லோரும் அதிக மரங்களை நட வேண்டும். இதனால் அதிக மழைபெய்தால் காட்டுத் தீயின் பாதிப்பைக் குறைத்து, நாம் வாழும் நாட்டை மீண்டும் ஒரு வளமுள்ள நாடாகவும், உல்லாசப் பயணிகளை கவரும் நாடாகவும், நாம் மாற்ற வேண்டும். இப்பொழுது உள்ள காட்டுத்தீ, விரைவில் முடிய இறைவனை வேண்டுகிறேன்.

## உறவு

-லக்ஷிராம்.கி

பாசத்துக்காக உறவு
வேசத்துக்காக அல்ல
பரிவுக்காக உறவு
பந்தாவுக்காக அல்ல
உண்மைக்காக உறவு
பொய்க்காக அல்ல
சேர்வதற்காக உறவு
பிரிவதற்காக அல்ல
உதவுவதற்காக உறவு
உபத்திரப்படுத்துவதற்காக அல்ல
கை கொடுப்பதற்காக உறவு
காலை வாருவதற்காக அல்ல
அன்புக்காக உறவு
பணத்திற்காக அல்ல
உறவு அற்புதமானது
சுற்றமும் நட்பும் சூழ்ந்தது உறவு
மனிதா நீ வாழ்ந்து விடு வாழும் வரை
பாரினில் அர்த்தம் உள்ளதாய்

# குருதிக்கொடை-இரத்த தானம்

*தானங்களில் சிறந்த தானம் அன்னதானம் என்று கூறுவார்கள். ஆனால் அதைப்புறந்தள்ளி இன்று உலகம் முழுவதும் தானத்தில் சிறந்ததானம் இரத்ததானம் என்பதாகவே விளம்பரங்கள் பரவிக்கிடக்கின்றது. காரணம் அறுவைச்சிகிச்சையின்போதும், விபத்தின்போதும், ஏதாவது சண்டை சச்சரவுகளினாலும், ஒருவருக்கு ஏற்படும் இரத்த சேதத்தை ஈடு செய்து அவர் உயிரைக்காக்கும் பொருட்டு அவர்களுக்குச் செலுத்துவதற்கு இரத்தம் தேவைப்படுகின்றது. அது மாத்திரமல்லாது சிலவகையான தொற்று நோயினால் பாதிப்படைந்தவர்களுக்குச் செலுத்துவதற்காகவும் இரத்தம் தேவைப்படுகின்றது. ஒரு சில கர்ப்பிணிப் பெண்கள் மகப்பேற்றுக்காலங்களிலும் அவர்களுக்குச் செலுத்துவதற்காகவும் இரத்தம் தேவைப்படுகின்றது. அதனால் எல்லா நாடுகளிலும் மருத்துவத்துறையினருக்குக் கையிருப்பில் இரத்தம் வைத்திருக்க வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அதனால் வானொலி, தொலைக்காட்சி, நிகழ்ச்சிகளூடாகவும், தினசரி, வாராந்தரப்பத்திரிகை மூலமாகவும் பொதுமக்களிடையே விளம்பரம் செய்து அவர்களை ஊக்குவித்து இரத்தவங்கிகளில் இரத்தத்தைச் சேமித்து தேவையானபோது உபயோகிக்கும் விதமான ஒழுங்குகளைச் செய்து அங்கங்கே இரத்த வங்கி முகாம்களை அமைத்து இரத்தம்சேகரிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.*

*சிலர் தாமாகவே முன்வந்து இரத்ததானம் செய்கின்றார்கள், சிலர் ஒரு அமைப்பாகச் செயற்பட்டு குழுக்களாக வந்து இரத்ததானம் செய்கின்றார்கள். 18 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலருமே இரத்ததானம் செய்யலாம். ஆனால் இரத்ததானம் செய்பவர் தொற்று நோய்த்தாக்கம் இல்லாதவராகவும், இடைப்பட்ட காலத்துக்குள் தூரப்பிரயாணம் செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். இரத்ததானம் செய்வதன் மூலம் எந்தவிதமான பின்விளைவுகளும் ஏற்படமாட்டாது. மாறாக இரத்த உற்பத்தி நமது உடம்பில் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருப்பதனால் இழந்த இரத்தம் விரைவில் ஈடுகட்டப்படுகின்றது. அதனால் இரத்த அழுத்தம் குறைகின்றது, இரத்த அழுத்தம் சீராக இருப்பதற்கும் உதவியாகின்றது. பயமில்லாது தைரியமாக இரத்ததானம் செய்யலாம். இரத்ததானம் செய்தவுடன் அந்தநிலையத்தில் அவர்கள் சாப்பிடுவதற்கு சிற்றுண்டி வகைகளும், குடிப்பதற்கு தேனீர், காப்பி மற்றும் யூஸ் வகைகளும் வைத்துள்ளார்கள் நீங்கள் அவற்றில் ஆற்றுப்படுத்தி அரை மணித்தியாலங்களுக்கு மேலாக அங்கு அமர்ந்து சிரம பரிகாரம் செய்து அதன்பின்னர்தான் அங்கிருந்து புறப்பட வேண்டும். நீங்கள் பயந்தநிலையில் இரத்ததானம் செய்வீர்களாயின் உள ரீதியாக நீங்கள் பாதிப்படைந்து இரத்தம் எடுத்தவுடன் சிறிது தலைச்சுற்றல் போன்ற ஒரு நிலை ஏற்படும். பயப்படத் தேவையில்லை. உடனடியாக அங்கு கடமையிலிருப்பவர்களிடம் தெரியப்படுத்தினால் அவர்கள் தாமதியாது உடனடியாக உங்களைக் கவனித்து தேவையான சிகிச்சை முறைகளைச் செய்து உங்களை ஒரு அரை மணித்தியாலத்திற்கு மேலாக தங்கள் கண்காணிப்பில் வைத்திருந்து உங்களை அனுப்பிவைப்பார்கள்.*

*இரத்தம் எடுக்கும்போது மூன்று விதமான இரத்தத்துளிகளை எடுப்பார்கள். சிலரிடம் தனி இரத்தம் மாத்திரம் எடுப்பார்கள். சிலரிடம் மஞ்சள் நிறத்திலிருக்கும் பிளாஸ்மாவை மாத்திரம் பிரித்தெடுத்து சிவப்பு நிறத்திலிருக்கும் இரத்தத்தை திரும்பவும் எடுத்தவருக்கே செலுத்துவார்கள். இவை இரண்டும் ஒரே சமயத்தில் நடைபெறும் நிகழ்வுகளாகும். பிளாஸ்மா (Plasma ) என்பது காயங்கள், புண்கள் முதலியவற்றை நுண்ணுயிர்க் கிருமிகளின் பாதிப்பிலிருந்து பாதுகாப்பதற்கும், தீக்காயம் பட்டவர்களுக்கு பெரிதும் பயன்படும். இரத்தத்திலிருந்து பிரிக்கப்படும் திரவமாகும். சிலரிடம் இரத்தத் தட்டுகள் என ( Platelets) அழைக்கப்படும் திரவத்தை இரத்தத்திலிருந்து பிரித்தெடுப்பார்கள். இதுவும் மருத்துவத்துறையில் பெரிதும் உபயோகப்படும் திரவமாகும்.*
*எனவே இரத்ததானம் செய்யத்தகுதிவாய்ந்தவர்கள் தைரியமாக தானங்களில் சிறந்ததென இன்று போற்றப்படும் இரத்ததானத்தைச் செய்து உயிர் காப்போம்.*

*-தொகுத்தளித்தவர் அன்புடன் நவா.*

# சுத்தம் சுகம் தரும்

-கவின் கஜேந்திரகுமார்.

ஆரோக்கியமாக இருப்பதற்கு நிறைய காரணிகள் இருக்கின்றன இன்று உலகின் பெரும்பான்மையான நோய்கள் சுத்தத்தை அலட்சியப்படுத்துவதனாலேயே ஏற்படுகின்றன.



நான் எப்படி ஆரோக்கியத்தை பேணுவது?

கீழ் குறிப்பிட்ட வழிமுறைகளால் பேணலாம்.

1. நன்கு கொதித்து ஆறிய நீரை பருக வேண்டும்.
2. சமச்சீரான உணவு வகைகளைத் தெரிவு செய்ய வேண்டும்.
3. தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல் வேண்டும்.
4. பற்களை நன்கு துலக்க வேண்டும்.
5. வாழும் வீட்டையும் சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்தல் வேண்டும்
6. அத்துடன் காற்றோட்டமாகவும் இருத்தல் வேண்டும்

# உளவாளி

-சாருகா சிவசுதன்.

நாங்கள் ஓடி ஓடி ஒரு மாதிரியாக வங்கியின் முன் வந்தோம். நான் சுற்றி பார்த்தேன், ஆனால் அந்த இரண்டு பையன்களைக் காணவே இல்லை.

இன்று காலை நானும் எனது நண்பியும் நடக்கும்போது அந்த இரண்டு பையன்களைக் கண்டோம் அவர்கள் இந்த வங்கியை களவெடுப்பதைப் பற்றி கதைத்துக் கொண்டிருந்தார்கள். நாங்கள் உளவாளிகள் என்றபடியால் அவர்களை பின் தொடர முடிவு செய்தோம்.

எனது நெஞ்சு படபடவென அடித்துக் கொண்டே இருந்தது. திடீரென்று எனக்கு பக்கத்தில் இருந்த நண்பி எனது தோளைத் தட்டினார். அவள் காட்டும் இடத்தில் இரண்டு சூட்கேஸ்கள் இருந்தன. நாங்கள் கவனமாக போய் அந்த சூட்கேஸ்களை திறந்தோம். நிறைய கருவிகள் இருந்தன. திடீரென்று எனக்கு மெதுவான கால் சத்தம் கேட்டது. நாங்கள் விரைவாக போய் ஒளித்து இருந்தோம். எங்களுக்கு மிகவும் பயமாக இருந்தது.

நாங்கள் ஒழித்து இருக்கும்போது அந்த இரண்டு பையன்களும் வங்கிக்குள் இருந்து கைக்குள் காசைப் பிடித்துக்கொண்டு சூட்கேஸ்களை நோக்கி ஓடினார்கள்.
அதைப் பார்த்து நாங்கள் ஒழிந்த இடத்தில் இருந்து பாய்ந்து எழுப்பினோம். ஆனால் அவர்கள் அதைக் கேட்டு பயந்து கையிலிருந்த பொருளொன்றை விளுத்தினார்கள் அதிலிருந்து கறுப்பு புகை வெளியேறி அந்த இடம் முழுவதும் நிறைந்தது. இதனால் எங்களுக்கு ஒன்றையும் தெளிவாகப் பார்க்க முடியாமல் தட்டுத் தடுமாறிய படி அவர்களை தொடர்ந்தோம். ஒருமாதிரியாக வெளியே வந்தோம் ஆனால் அவர்களை எங்கும் காணவில்லை.

# ஆனந்தம் அகநிறைவு அமைய பொங்கல் அமையட்டும்!

*-மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா*

*பொங்கலென்று சொன்னாலே*
*பூரிப்பும் கூடவரும்*
*மங்கலங்கள் நிறையுமென்று*
*மனமதிலே தோன்றிவிடும்*
*சங்கடங்கள் போவதற்கும்*
*சந்தோசம் வருவதற்கும்*
*பொங்கலை நாம்வரவேற்று*
*புதுத்தெம்பு பெற்றிடுவோம்!*

*தைபிறந்தால் வழிபிறக்கும்*
*எனவெண்ணி மகிழுகிறோம்*
*கைகட்டி நின்றுவிடின்*
*வழியெமக்கு வந்திடுமா*
*தைபிறக்க முன்னாலே*
*தளர்வின்றி உழையுங்கள்*
*தைபிறக்கும் வேளையிலே*
*கைகொடுக்கும் தைமாதம்!*


*எதிர்காலம் மகிழ்வாக*
*அமையுமென எண்ணிடுவோம்*
*இறந்தகாலம் தனையெண்ணி*
*எமையிழக்கா திருந்திடுவோம்*
*நிகழ்கால நிலையினிலே*
*நிம்மதியை நாடிடுவோம்*
*வரும்பொங்கல் எங்களுக்கு*
*வளமாகும் எனநினைப்போம்!*

*புத்தரிசி வாங்கிடுவோம்*
*புதுப்பானை எடுத்துவைப்போம்*
*மொத்தமுள்ள உறவுகளை*
*முழுமனதாய் வாழ்த்திடுவோம்*
*பால்பொங்கி வருவதுபோல்*
*வாழ்வுவளம் பெருகவென*
*சர்க்கரையை சேர்த்தபடி*
*பொங்கியே மகிழ்ந்திடுவோம்!*

*பெற்றாரின் ஆசியினை*
*பெரும்பேறாய் எண்ணிடுவோம்*
*கற்பித்த ஆசானை*
*கால்தொட்டு வணங்கிடுவோம்*
*புத்தாடை எனுமெண்ணம்*
*புத்துணர்வை வழங்கட்டும்*
*பொங்கலென்றும் வாழ்வினிலே*
*புத்தொளியாய் மிளிரட்டும்!*

*சாந்தியொடு சமாதானம்*
*வரப்பொங்கல் அமையட்டும்*
*சன்மார்க்கம் மனமெல்லாம்*
*நிறையப் பொங்கலமையட்டும்*
*வேண்டியவர்க்கு வேண்டியன*
*கிடைக்கப் பொங்கலமையட்டும்*
*வீண்வம்பு வேதனைகள்*
*விலகப் பொங்கலமையட்டும்!*

*ஆனந்தம் அகநிறைவு*
*அமைய பொங்கலமையட்டும்*
*அறம்நீதி அத்தனையும்*
*நிலைக்கப் பொங்கலமையட்டும்*
*வேற்றுமைகள் வில்லங்கம்*
*விலகப் பொங்கலமையட்டும்*
*விரோதமனம் விட்டோட*
*பொங்கலெமக் கமையட்டும்!*


தமிழ்ப் புத்தாண்டு

தமிழ்ப் புத்தாண்டு ஏப்ரல் 14 திகதி உலகத் தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. தமிழ் ஆண்டின் முதல் நாளாகிய இன்னாளில் தமிழ் மக்கள் பாரம்பரிய ஆடை அணிந்து கோவில் செல்வர், முத்தோரிடம் ஆசீர்வாதம் பெறுவர். உற்றார் உறவினர்கள், நண்பர்களிடம் பகிர்ந்து உண்டு மகிழ்வர். இதன் ஓர் அங்கமாக கைவிசேடம் பரிமாறுதல் இடம் பெறும் இதன் போது தமது குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து பணம் பரிமாறுவர்.

# கொப்பரையும் கொம்மாவையும் விட்டு கோதை நீ ஓடி வாடி!! ( ஈழத்துப் பேச்சு வழக்கில் ஒரு கவிதை)

*-எழுத்துருவாக்கம்: கமலேஷ்*

*கனகரின் கோப்பிறேசன்*
*கால் போத்தல் சாராயம்*
*மப்பேறியதும் மனதில்*
*அளவற்ற மகிழ்ச்சியூட்ட*
*மச்சான்ர குறைச் சுருட்டு!*
*மாலையில் கனிவூட்டும்*
*வடிசாலை பனங் கள்ளு*
*இவை எல்லாம் இருந்தாலும்*
*இணையில்லா இன்பம் தரும்*
*இளஞ் சிரிப்பு குமுதினியை போல்*
*என் இளமைக்கு ஈடாகுமா?*

*அணைக்கின்ற போது*
*கால் நகத்தால் கோடு கீறி*
*கண்களினை மையலுறச் செய்யும்*
*கன்னியவள் இனிக்கும் அரியதரம் - செல்லமாய்*
*அடித்தாலும் அவளுடன் வாழ வேண்டும் என*
*மனமோ எண்ணிக் கொள்ளும் பல தரம்!*

*உதடு கடிக்கையில் உவர்ப்பும் கசப்பும் சேர்த்து தரும்*
*உயிர் மூச்சவளின் இதழ்களோ டிப்பிளிசன் மாம்பழம்!*
*அணைக்கையில் இணை பிரியா உயிராக என்னுடன்*
*ஒட்டிக் கொள்ளும் அவளோ நிறத்தில் பாலப் பழம்!*

*தாழ் போடா வீடு - மெதுவாக*
*காலாட்டி நீயோ எப்போது*
*உள்ளே வருவாய் என*
*என் மனமும் நாடும்!*
*ஆளில்லா நேரம் அச்சம் விட்டு விலகிட*
*அக்கராயன் குளக் கட்டும் பார்த்து சிரிக்கும்!*
*அடியே குமுதினி நீயும் சைக்கிளில்*
*குறுக்காலே போகையில் மனமோ உன்*
*குறு குறு கனிகளின் துள்ளல் பார்த்து ரசிக்கும்!*

*கலியாணம் கட்டிட கச்சேரிக்கு போவோம் என்றேன்*
*பலியாடு நானாகிட உனக்கும் ஆசையோ என்றாள்?*
*அறியாத வயது! ஆனாலும் நீயோ எனை அடிக்கடி*
*தவிக்க வைக்கும் அந்த மாதிரி அழகி என்றேன்!*
*வளையாத மூங்கில் போல நீ நிமிர்ந்து நிற்கின்றாய்*
*வரிசையிலே உனக்காக பெண்கள் பலர் காத்திருக்கின்றார்!*
*இது கூட தெரியாது ஏன் நீயும் எனை பார்த்து*
*ஏகாந்த இராகம் இசைக்கின்றாய் என்று கேட்டாள்-*
*எனை ஒரு மாதிரியாகப் பார்த்தாள்!*

*கொப்பரையும் விட்டு! கொம்மாவையும் விட்டு*
*கோதை நீ ஓடி வாடி என்று இரைஞ்சி கேட்டேன்!*
*மப்பினில் கவிதை பாடும் என் மன்னவா - உன் மனதில்*
*மங்கை என் மீதான ஆசை இன்னமும் தீரலையா?*
*தப்பது செய்த பின்னரும் என்னை*
*தாளையடி மீன் போல*
*தள்ளி வைக்க மாட்டியா கிறுக்கா?*
*இப்பவே வருகிறேன்! ஆனாலும் ஒரு கண்டிசன்!*
*இரணைமடுக் குளக்கட்டில் நாமிருவரும்*
*இரவிரவாய் நீந்தி மகிழனும் என்றாள் - அடியே*
*அது என்ன இடுப்பளவு தண்ணீர் உள்ள குளமா?*
*ஆழம் அதிகமுள்ள குளமடி என்றேன் -*
*அத்தான் உங்களுக்கு*
*அந்த மாதிரிக் கருத்தும் புரியலையே!*
*நீங்கள் ஒர் மொக்கு என்று கடிந்தாள் - என்*
*இதழை இறுக்கி கடித்தாள்!!*

**<u>அரும்பத விளக்கங்கள்/ சொல் விளக்கங்கள்:</u>**

*கோப்பிறேசன்/ கோப்பிரேசன்: Corporation - ஈழத்தில் கள்ளுத் தவறணை மற்றும் சாராய பாரினைச் செல்லமாக குறிக்கும் சொல்.*

*மப்பேறியதும்: போதை ஏறியதும்.*

*வடிசாலை: கள்ளு வடித்து விநியோகம் செய்யுமிடம்.*

*அரியதரம்: சீனிப் பணியாரம் அல்லது இனிப்பாக சிவப்பு அரிசி மாவில் செய்யப்படும் பணியாரம்/ பலகாரம்.*

*டிப்பிளிசன் மாம்பழம்/ மாங்காய்: கிளிச் சொண்டன் மாங்காய்.*

*பாலப் பழம்: வன்னியில் கிடைக்கும் இனிப்பு நிறைந்த மஞ்சள் நிற சிறிய அளவிலான பழம்.*

*அக்கராயன் குளக் கட்டு: கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அக்கராயன் குளத்தின் அணைக் கட்டு.*

*குறுக்காலே போதல்: ஒருவரைக் கடந்து போதல். அல்லது குழப்பம் விளை விக்கும் நோக்கில் குறுக்கே செல்லுதல்.*

*கச்சேரி: மாவட்டத் திணைக்களம். அல்லது அரசாங்க அலுவலகம். இங்கே கச்சேரி Register Office எனும் பொருளில் வந்துள்ளது.*

*அந்த மாதிரி அழகி: சும்மா ஜோரான பிகரு அல்லது சூப்பரான அழகி!*

*கொப்பர்: அப்பா. அப்பன், அல்லது தந்தை.*
*கொம்மா: அம்மா.*

*தாளையடி மீன்: ஈழத்தின் யாழ்ப்பாணத்தின் வடமராட்சிப் பகுதியில் உள்ள தாளையடியில் பிடிக்கப்படும் மீன். சில நேரங்களில் நல்ல சுவையாக இருக்கும். சில வேளை சுவையாக இருக்காது.*

*அந்த மாதிரிக் கருத்து: இங்கே அந்த மாதிரி என்பது அந்த மாதிரியான வார்த்தைப் பிரயோகத்தை சுட்டுகிறது.*
*மொக்கு: மக்கு.*





## எனது நண்பன்

*-ஹரிகேஷ்*

*எனது நண்பனின் பெயர் பாலா. நாம் இருவரும் ஒரே பாடசாலையில் கல்வி கற்கிறோம். நானும் பாலாவும் மூன்றாம் வகுப்பில் படிக்கிறோம். அவன் படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரன். நாங்கள் இருவரும் ஒன்றாகவே பாடசாலைக்குச் செல்வோம். அவனது பிரியமான விளையாட்டு கிறிக்கட் ஆகும். நானும் அவனும் மாலை நேரங்களில் பந்து அடித்து விளையாடுவோம். அவனது பொழுது போக்கு புத்தகம் வாசிப்பது ஆகும். அவனது செல்லப் பிராணி நாய் ஆகும். பாலாவுக்கு என்னில் நல்ல விருப்பம்.*

## எனது வீடு

*எனது வீட்டில் மூன்று மாடிகள் இருக்கும்*
*எனது வீட்டில் மரம் இருக்கும்*
*எனது வீட்டில் ஒரு பிஎம்டபிள்யூ கார் இருக்கும்*
*எனது வீட்டில் ஒரு சின்ன மரக்கறித் தோட்டம் இருக்கும்*
*என் வீட்டில் எனது அப்பா அம்மாவிற்கு தனித்தனியான அறை இருக்கும்*



# இணைய புத்தகங்களும் அச்சடித்த புத்தகங்களும்

-பிரேம்.

இன்றைய புத்தக கண்காட்சிக்கு வந்திருக்கும் எல்லோருக்கும் எனது இனிய வணக்கங்கள். இன்று உங்களுக்கு ஒரு சிறப்பான நாளாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். இன்று உங்களுக்காகவே அவுஸ்திரேலியாவில் உள்ள எல்லா விருது வென்ற எழுத்தாளர்களும் தங்களது சிறப்பாக விற்கும் நூல்களை கொண்டு வந்துள்ளனர். நீங்கள் இந்த புத்தகக் கண்காட்சியில் ஏதாவது புத்தகம் பிடித்திருந்தால் அந்தப் புத்தகத்தை வாங்குவதற்கு இந்த கண்காட்சியின் இறுதியில் நேரம் ஒதுக்கப்படும்.

இணைய நூல் என்பது கணனியிலுள்ள நூலாகும் அச்சுப்பதித்த நூல் என்பது காகிதத்தை வைத்து செய்யப்பட்ட ஒரு நூல் வகையாகும். இன்று அச்சுப்பதித்த நூல்கள்தான் பெரும்பான்மையாக விற்கப்படுகின்றன. இணைய நூல்கள் அச்சுப்பதித்த நூல்களைப் போல் பிரபலமாகவில்லை. இதற்கு காரணங்கள் அச்சுப்பதித்த நூல்களின், கவனத்தை சிதற விடாத தன்மையும், உடலுக்கு குறிப்பாக கண்களுக்கு சோர்வு கொடுக்காத தன்மையும் ஆக இருக்கலாம், இணைய புத்தகங்கள் அச்சுப்பதித்த நூல்களை விட மலிவான விலையில் கிடைக்கும். சுற்றுச்சூழலுக்கும் நன்மையாக இருக்கும் மற்றும் எளிதாக தூக்கிச் செல்லலாம்.

அச்சுப்பதித்த புத்தகங்கள் இணைய புத்தகங்களை விட கண்ணுக்கும் உடலுக்கும் நன்மையானது. இணைய புத்தகங்களால் கண்களுக்கு சோர்வு வந்து பாதிப்பு ஏற்படலாம். அச்சுப்பதித்த புத்தகங்களில் ஒளி வராமல் இருப்பதால் அவை இணைய புத்தகங்களை விட பாதுகாப்பானது எனலாம். அதோடு அச்சடித்த புத்தகங்கள் இணைய புத்தகங்களை போல் கவனத்தை திசை திருப்பாது. வீட்டிலும் பள்ளியிலும் இணைய நூல் படிக்கும் போது அவர்கள் படிப்பதை விட்டு இணய நூல்களை பார்க்கும் கணினியை வைத்து விளையாட்டுக்களை விளையாடுவது உண்டு. ஆனால் ஒரு அச்சுப்பதித்த புத்தகத்தை உபயோகிக்கும் போது கவனம் சிதறுவது இணைய நூல்களோடு ஒப்பிடும் போது மிகக் குறைவு.
இணைய புத்தகங்களை மலிவான விலையில் கண்டுபிடிக்க முடியும். சில எழுத்தாளர்கள் தங்களுடைய மின்னணு புத்தகங்களை இலவசமாக இணைய தளத்தில் கொடுப்பதும் உண்டு. ஆனால் அச்சடித்த புத்தகங்கள் பொதுவாக மிக விலை கூடத்தான் விற்கப்படுகிறது. ஏனெனில் ஒரு அச்சுப் புத்தகங்களில் அதிகளவான காகிதங்கள் உண்டு. இதுவும் மின்னணு புத்தகங்களில் ஒரு நன்மையாகும். ஒவ்வொரு காகிதத் தாளுக்கும் ஒரு மரத்தை வெட்ட வேண்டும் என்றும் பலர் சொல்வார்கள். இதனால் அச்சுப்பதித்தல் நமது சூழலுக்கு தீயது எனலாம். ஆனால் மின்னணு நூல்களுக்கு இந்த தீமை இல்லை.

நான் மின்னணு புத்தகங்களைத்தான் பொதுவாக விருப்பத்துடன் உபயோகிப்பேன். ஆனால் சில நேரங்களில் பல காரணங்களுக்காக அச்சடித்த புத்தகம் தான் உபயோகிப்பது விருப்பமாக இருக்கும். ஏனெனில் இந்த இரு வகையான புத்தகங்களும் வெவ்வேறு நன்மைகளும் தீமைகளும் உள்ளன. அச்சுப்பதித்த நூல்கள் நமது கண்களுக்கு நல்லது மற்றும் கவனம் சிதறாமல் இருக்கும் ஆனால் மின்னணு புத்தகங்கள் சுற்றுச்சூழலுக்கு நல்லது மற்றும் மலிவான விலையிலும் உண்டு.

# எனது குடும்பம்

-க.லோகிதன்

எனது குடும்பம் சிறியது. எனது குடும்பத்தில் ஆறு அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். எனது குடும்பத்தில் அம்மா, அப்பா, தம்பி, அம்மப்பா, அம்மம்மா உள்ளனர்.

எனது அப்பாவின் பெயர் கலைச்செல்வன். அம்மாவின் பெயர் துர்க்கா. தம்பியின் பெயர் கார்த்திகன். அம்மப்பாவின் பெயர் செந்தில்நாயகம். அம்மம்மாவின் பெயர் தயாநிதி. எனது குடும்பம் அன்பானது.
எனது குடும்பத்தை எனக்கு மிகவும் பிடிக்கும்.

# குதிரை

-ஸ்மித்திகா

எனக்குப் பிடித்த மிருகம் குதிரை. அது அழகாக இருக்கும். குதிரை புல் சாப்பிடும். குதிரை வேகமாக ஓடும் மிருகம். குதிரை பந்தயத்தில் பங்குபெறும். குதிரையின் வால் நீளமாக இருக்கும்.

# இளைஞர்களுக்கு ஓர் அறிவுப்பு

*-ஷாலினி*

*நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று நமது முன்னோர் கூறியது பொய்யா? தற்போதைய காலங்களில் நமது முன்னோர்கள் கூறியது போல் நமது உடல் ஆரோக்கியமும் மற்றும் உடல் நலப் பழக்கங்களை பின்பற்றுவது குறைந்து கொண்டே வருகிறது. குறிப்பாக இளைஞர்கள் அவர்களின் வாழ்க்கை முறையை திருத்த வேண்டும்.*

*ஏன் இளைஞர்களே நீங்கள் அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு இல்லையா? இதற்குச் சுலபமான ஓர் தீர்வு, நமது உடலை ஆரோக்கியமாக வைத்திருப்பது தான். பழங்கள் காய்கறி கொழுப்புக் குறைந்த இறைச்சி, மற்றும் தானியங்கள் போன்ற பல்வேறு நார்ச்சத்து நிறைந்த உணவுகளை உண்ணப் பழக வேண்டும்.*

*முடிந்த அளவில் சர்க்கரை மற்றும் கொழுப்பு நிறைந்த உணவுகளை தவிர்க்க வேண்டும். இப்படி பழகுவதால் எடை மற்றும் முகப் பருக்கள் குறைந்து அழகாக இருக்க முடியும். மேலும் உடற்பயிற்சி தினமும் செய்வதால் நமது உடலின் ஆரோக்கியத்திற்கு மிகவும் நலமானது.*

*மேலும் இந்தப் பழக்கங்களை பின்பற்றுவதால் உடல் மட்டுமே ஆரோக்கியமாக இருக்காது. நமது மனதும் ஆரோக்கியதுடன் இருக்கும். ஆரோக்கிமான மனதின் பயன்கள் படிப்பில் அதிக கவனம் , நல்ல சமூக வாழ்வு மற்றும் நல்ல மனநிலை. நமது மனமும் உடலும் உடற் பயிற்சி செய்வதால் மிகவும் அமைதியாக இருக்கும். இதனால் படிப்பில் அதிக கவனம் செலுத்த முடியும். மற்றும் நினைவிலும் இருக்கும் என ஆராய்ச்சி நிரூபிக்கிறது. மேலும் குறைந்தது முப்பது நிமிடங்கள் செய்வதால் சமூக வாழ்வும் மனநிலையும் மேம்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.*

*தற்போது இளைஞர்களுக்கு உடற் பருமன் மற்றும் நோய்கள் மிகச் சிறிய வயதிலிருந்தே வருகிறது. நாம் நோயற்ற வாழ்வை பெற ஒரு சுலபமான தீர்வு, நமது உடலின் ஆரோக்கியத்தை கவனத்துடன் பார்த்துக் கொள்வதுதான். முடிந்த அளவில் சத்துள்ள உணவு உண்டு மற்றும் உடற்பயிற்சி செய்வதால் நீண்டகாலம் ஆரோக்கியத்துடன் வாழமுடியும்.*

*முடிவில் என் கருத்துப்படி இளைஞர்களாகிய நாம் நமது வாழ்க்கை முறையை மேம்படுத்த வேண்டும். முதலில் காய், பழம், கொழுப்புக் குறைந்த இறைச்சி, தானியங்கள் போன்ற சத்துள்ள உணவுகளை உண்ண வேண்டும். தினமும் முப்பது நிமிடங்களுக்கு உடற்பயிற்சி செய்யப் பழக வேண்டும். அப்படி செய்வதால் நமது மனத்தையும், உடலையும். ஆரோக்கியமாக வைத்திருக்கலாம்.*

# உழவர் திருநாள்

*-பூ. வினோத்*

*வீடெங்கும் பால் பொங்கி*
*தமிழர் மனம் எங்கும் மகிழ்ச்சி ஓங்கி*
*நாமெல்லாம் ஒன்றாகி உழவன்*
*வியர்வையால்*
*விளைந்த பச்சரிசியை பொங்கலாக்கி*
*கதிரவன் வலம் வருகையிலே படையலிட்டு*
*நன்றிக்கடன் செலுத்திடுவோமே!*
*வியர்வைதனை விதையாக்கி நெல் தரும்*
*உழவரையும் – நலம் பெற உழுத*
*மாட்டினையும்*
*நன்றியுடனே வாழ்த்திடுவோமே*
*இப்பொங்கல்*
*திருநாளில்!*

# நல்ல பழக்கவழக்கங்கள்

*-சாத்விகா பாலாஜி*

*நல்ல பழக்கவழக்கங்கள் இருப்பது முக்கியம். நாம் எமது நண்பர்களுடன் சண்டையிடக் கூடாது. பிறர்க்கு நாம் நல்லதே செய்ய வேண்டும். உண்மையே பேசுவது மிகவும் முக்கியம். எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டும். நல்ல எண்ணங்களை வளர்ப்பதன் மூலம், நாம் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொள்ள முடியும்.*

# உலகத்திலேயே மூத்த மொழி தமிழ்! மூத்த குடி தமிழன்!!! அயல்கிரக வாசிகளின் ஆதாரம்

*-புவி – A7*

*பிலேடியன் (Pleiadean's) என்னும் அயல்கிரக வாசிகள் உலகத்தோடு பல காலமாக தொடர்பில் உள்ளனர் என்று அமெரிக்கர்கள் சிலர் நம்புகின்றனர். இவர்கள் நேரடியாக இந்தப் பிலேடியன் என்னும் வேற்றுலக வாசிகளோடு தொடர்பில் உள்ளவர்கள் என்று அறிவித்துள்ளனர்.*

*உலகில் உள்ள பல விஞ்ஞான முன்னேற்றங்களுக்கு இந்த அயல் கிரக வாசிகள் தான் காரணம் என்று இந்தக் குழு நம்புகின்றது. மொழி, வரலாறு ஆகியவற்றை உலகிற்கு அறியப்படுத்தியது இந்த பிலேடியன்கள் தான் என்று உறுதியாகக் கூறுகின்றனர் இந்த அமெரிக்கர்கள்.*

*மேலும் உலகில் ஏற்படும் பல்வேறு மாற்றங்களுக்கும் இந்த அயல் கிரக வாசிகள் தான் காரணம் என்று சொல்கின்றனர். உலகில் உள்ள சிக்கல்களுக்கு தீர்வும் இந்தப் பிலேடியன்கள் சொல்கிறார்கள் என்று இந்த அமெரிக்கக் குழு சொல்கிறது. இந்த குழுவில் உள்ளவர்கள் நூல்கள் படிப்பதில்லை. ஆனால் பிலேடியன்கள் உதவியுடன் பல தகவல்கள் அறியத் தந்துள்ளனர். பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு வழங்கி உள்ளனர். இவர்கள் அயல்கிரக வாசிகளோடு தொடர்பு கொண்டு ஏராளமான தகவல்களை உலகிற்குச் சொல்லி வருகின்றனர்.*

*அந்த வகையில் 1995 ஆம் ஆண்டு இந்த ப்லேடியன்களோடு தொடர்பு உள்ள பேராசிரியர் அலெக்சு காலியர் தனது குழுவிற்கு பாடம் நடத்துகையில் திடீரென்று உலகின் மொழிகளைப் பற்றி பாடம் நடத்துகிறார். அப்போது அவர் உலகின் முதலில் பேசப்பட்ட மொழி தமிழ் மொழி தான் எனக் கூறியுள்ளார். பின்பு தான் பிலேடியன்கள் உதவியுடன் பல மொழிகள் பல்வேறு நாடுகளுக்குப் பரப்பட்டது என்று பிலேடியன்கள் சொல்வதாக இவர் சொல்கிறார்.*

*தமிழே இந்தியாவின் மூத்த மொழி என்பதோடு மட்டுமல்லாமல், உலக மொழிகளுக்கே தாய்மொழி என்ற அளவுக்குத் தகுதிபடைத்திருக்கிறது என்பது பல அறிஞர் பெருமக்களின் நடுநிலையான முடிவாகும்.*

*"உலக மொழிகளில் மூத்த முதல்மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும்" என்று ஆகக் கடைசியாக மொழியியல் அறிஞர் நோவாம் சோம்சுகி (Noam Chomsky) அறிவித்துள்ளார்.*

*நோவாம் சோம்சுகியின் கருத்தை அவருக்கு முன்னாலேயே மொழிஞாயிறு ஞா.தேவநேயப் பாவாணர் உறுதிபட நிறுவியுள்ளார். அவருடைய அயராத மொழியியல் ஆய்வின் பயனாக அவர் கண்டு சொன்ன அரிய உண்மைகள் பற்பல. அவற்றில் ஒன்றுதான் தமிழே உலகின் மூத்தமொழி என்பது.*

*இதனை நிறுவும் வகையில் அவர் கொடுத்திருக்கும் ஆய்வின் அடிப்படையிலான சில ஆதாரங்களின் பட்டியல் இதோ:-*

*1.மாந்தன் பிறந்தகமாகிய குமரிக்கண்டத்தில் தமிழ் தோன்றி இருத்தல்.*

*2.இப்போது இருக்கும் மொழிகளுள் தமிழ் மிகப் பழைமையானதாக இருத்தல்.*

*3.தமிழ் எளிய ஒலிகளைக் கொண்டிருத்தல்.*

*4.தமிழில் சிறப்புப் பொருள்தரும் சொற்கள் பிறமொழிகளில் பொதுப்பொருள் தருதல்[எ.கா:செப்பு(தெலுங்கு), தா(இலத்தின்)]*

*5.தமிழ் இயற்கையான சொல்வளர்ச்சி கொண்டதாக இருத்தல். (செயற்கையான சொல்வளர்ச்சி இல்லை)*

*6.ஆரிய சேமியமொழிச் சொற்கள் பலவற்றின் வேரைத் தமிழ் தன்னகத்தே கொண்டிருத்தல்.*

*7.பல மொழிகளின் மூவிடப் பதிற்பெயர்கள் தமிழ்ப் பெயர்களைப் பெரிதும் சிறுதும் ஒத்திருத்தல்.*

*8.தாய் தந்தையரைக் குறிக்கும் தமிழ் முறைப்பெயர்கள், ஏறத்தாழ எல்லா மொழிகளிலும் திரிந்தும் திரியாதும் வழங்கி வருதல்.*

*9.தமிழ்ச்சொற்கள் வழங்காப் பெருமொழி உலகத்தில் இல்லாமை.*

*10.ஒரு தனிமொழிக்குரிய தோற்ற வளர்ச்சி முறைகளைத் தமிழே தெரிவித்தல்.*


*11.சில பல இலக்கண நெறிமுறைகள் தமிழுக்கும் பிற மொழிகளுக்கும் பொதுவாக இருத்தல்.*

*12.பல மொழிகள் தமிழிலுள்ள ஒருபொருட் பலசொற்களுள் ஒவ்வொன்றைத் தெரிந்துகொண்டிருத்தல். [எ.கா: இல்(தெலுங்கு)), மனை(கன்னடம்), அகம்(கிரேக்கம்), குடி(பின்னியம்)]*

*13.பிறமொழிகளுக்குச் சிறப்பாகக் கூறப்படும் இயல்களில் மூல நிலைகள் தமிழில் இருத்தல். [எ.கா: ஆரிய மொழிகளின் அசை அழுத்தமும் சிந்திய மொழிகளின் உயிரிசைவு மாற்றமும் அமெரிக்க மொழிகளின் பல்தொகை நிலையும் போன்றன]*

*இப்படியான, பல்வேறு உறுதியான காரனங்களின் அடிப்படையில் இந்தியா மட்டுமல்ல. உலகத்திற்கே மூத்தமொழி, முதல்மொழி தமிழாகத்தான் இருக்க முடியும் என்பது அறிஞர்களின் தெளிவும் முடிபும் ஆகும்.*





# செம்மொழியான தமிழ் மொழி இன்றும் அழியாமல் இருப்பதற்கான காரணங்கள்.

-ஆரூரன் மதியழகன்

*இன்று, உலகமெங்கும் இருக்கும் இந்த தமிழ் சமுதாயம் ஒரு விடயத்தால் இணைந்திருக்கிறது. அதுதான் எமது பாஷை, தொடர்பு அல்லது வாய்மொழி. இயற்கையாகவே வரும் தமிழ் மொழி தான் எல்லா தமிழர்களையும் இணைக்கிறது. 19ஆம் நூற்றாண்டில் மிக பிரபல்யமாக பேசப்பட்ட தமிழ் மொழி, இன்று கிட்டத்தட்ட எட்டு கோடி மக்களால் பேசப்படுகிறது. ஆனால் அதே நேரம், உலகில் தோன்றிய முதல் மொழிகளில் ஒன்றான தமிழ், ஏழு செம்மொழிகளில் ஒன்றாகவும் இருக்கிறது. இத்தனை பழமையான தமிழ் மொழி எப்படி இன்றும் தொடர்ந்து வாழ்கிறது எனபதை நாம் கொஞ்சம் யோசிக்க வேண்டும் தானே?*

***செம்மொழி என்றால் என்ன?***

*செம்மொழி என்பது ஒரு தெளிவற்ற பதம். உண்மையாக, அதற்கு ஒரு உத்தியோகபூர்வமான வரைவிலக்கணம் இல்லை. 20ஆம் நூற்றாண்டில், இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளில் செம்மையான இலக்கியம் (classical literature) இருந்ததால், இம்மொழிகள் 'செம்மொழி' (classical language) என்று கருதப்பட்டன. அண்மை காலத்தில், மற்றைய சில மொழிகளுக்கும் பழைய இலக்கியம் இருக்கிறது என்று தெரியவந்தது. அதற்கு பின், குழப்பம் இருந்ததால் பல மொழி அறிஞர்கள் ஒரு கூட்டமாக 'செம்மொழி' என்பதற்கு நான்கு அம்சங்கள் இருக்கவேண்டும் என்று கூறினார்கள். அவை; பழைய இலக்கியம் இருப்பது, தானாக உருவாக்கப்பட்ட மொழி, மற்றைய மொழிகள் அதிலிருந்து வந்திருப்பது, மற்றும் புராதன மொழியாக இருப்பது (2000 ஆண்டுகளுக்கு முன்பே), என்று வரையறுத்தினார்கள். இந்த அம்சங்கள் பொருந்தி இருந்த 7 மொழிகள் தான் செம்மொழி என்ற தகுதியை பெற்றிருக்கின்றன. அவை இலத்தீன், கிரேக்கம், ஈப்ரு, அரபு, சீனம், சமஸ்கிருதம் மற்றும் தமிழ். இவற்றில் இலத்தீன், ஈப்ரு மற்றும் சமஸ்கிருதம் வழக்கொழிந்து விட்டன. சீன மொழியும் கிரேக்க மொழியும் புராதன காலத்திலிருந்து பெரிய மாற்றம் அடைந்தன. அரபு மற்றும் தமிழ் மட்டும் தான் பழமை மாறாமல் இன்றைக்கும் பேசப்படுகின்றன.*

*தமிழ் இன்றும் வாழ்ந்திருப்பதற்கு மூன்று முக்கிய காரணங்கள் இருக்கின்றன.*

1. ***தமிழ் இலக்கியத்தின் தொடர் வளர்ச்சி****.*

*தமிழ் இலக்கியம் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து, தமிழ் மொழியை வாழவைத்திருக்கிறது. கி.மு. 5ஆம் நூற்றாண்டில் தொல்காப்பிய நூல் எழுதப்பட்டது. அப்போதிலிருந்து, அகநானூறு, புறநானூறு, கி.மு. முதலாம் நூற்றாண்டின் திருக்குறள், கி.பி. 2ஆம் நூற்றாண்டின் சிலப்பதிகாரம் முதலான ஐம்பெருங்காப்பியங்கள், 2ஆம் - 5ஆம் நூற்றாண்டின் சங்கம் மருவிய காலத்தின் நீதி நூல்கள், 5ஆம் நூற்றாண்டின் ஔவையாரின் பாடல்கள், 7ஆம் நூற்றாண்டின் பக்தி இலக்கியம், 12ஆம் நூற்றாண்டின் கம்பராமாயணம், மற்றும் அண்மையில் பாரதியார், பாரதிதாசன், கல்கி, போன்ற எழுத்தாளர்களின் நூல்கள், அனைத்தும் தமிழ் இலக்கியத்தின் உதாரணமாக தமிழை வளர்த்தன.*

*காலம் காலமாக தொடர்ந்து எழுதுவதுடன், இவ்விலக்கியங்களை பல விதங்களில் பயன்படுத்தி பாதுகாப்பது, தொடர் வளர்ச்சியை ஏற்படுத்துகிறது. முக்கியமாக, பழங்கால ஏடுகளை அழியாமல் பாதுகாக்கிறோம். அதே நேரம் ஆறுமுகநாவலர், ஊ.வே.சாமிநாதையர் போன்றவர்கள் இலக்கியத்தை புத்தகபதிப்பிற்கு மாற்றினார்கள். நவீன காலத்தில், தமிழ்மொழி இலக்கிய தொழில்நுட்ப மூலமும் வாழ்கின்றது. 'மதுரை தமிழ் இலக்கிய மின் தொகுப்பு கூட்டம்' மற்றும் 'நூலகம்.கொம்' போன்ற இணையதளங்கள் 600க்கு மேலான இலக்கியத்தை வைத்திருக்கின்றன.*

*அத்துடன், இலக்கியம் வளர்வதற்கு நாம் இலக்கிய வடிவத்தை மாற்றி எழுதுகிறோம். புராதன காலத்தில் மரபு கவிதைகளும் செய்யுள்களும் எழுதப்பட்டன. இன்று சிறுகதை, புதுக்கவிதை, கேலி சித்திரம் போன்ற வடிவங்களில் எழுதி, இவை அடுத்த சந்ததியினருக்குப் போய் சேருகின்றன.*

*அத்துடன், பல இலக்கியங்கள் வேற்று மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டதால் இலக்கியம் வளர்ந்து வருகிறது. பாரதியார், "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களை தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்," என்று கூறியது போல், நம் இலக்கியங்களும் பிறமொழிகளில்*

*மொழிபெயர்க்கப்படுகின்றன. இன்று திருக்குறள் 27 மொழிகளில் இருக்கின்றது. அதே போல், மகாபாரதம் முதலிய இலக்கியங்கள் மாற்றி எழுதப்பட்டன. இம்மொழிபெயர்ப்பும் தமிழ் இலக்கியத்தை வளர்த்தது.*

*இந்நான்கு விடயங்கள் தமிழ் இலக்கியத்தின் தொடர் வளர்ச்சியை உருவாக்கி, தமிழை எவ்வளவோ ஆண்டுகளாக வாழவைத்தன.*

***2. தமிழ் ஒரு மொழி மட்டுமல்லாமல், ஒரு வாழ்வியலாக இருப்பது.***

*வாழ்வியல் என்பது ஒரு சரியான வாழ்க்கைமுறை. நாம் மனிதர்களாக எப்படி வாழவேண்டும் என்பது தமிழ் மொழியிலும் இலக்கியத்திலும் கூறப்பட்டிருக்கிறது. தமிழ் இலக்கியத்தை பார்த்தால் வாழ்வியல் பற்றி ஆயிரக்கணக்கான விடயங்கள எழுதப்பட்டிருக்கின்றன. திருக்குறள் ஒரு பெரிய உதாரணம். "அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர், புன்கண்நீர் பூசல் தரும்" மற்றும், "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்க குழையும் விருந்து," என்ற குறள்கள் அன்பு விருந்தோம்பல் என்ற பண்புகளுடன் வாழவேண்டும் என்று கூறுகின்றன. இவை போல் 1330 குறள்கள் இருக்கிறது. அத்துடன், ஔவையாரின் நல்வழி என்ற பாடலில் "ஊரோடு ஒத்து வாழ்" என்று கூறி, சமூகத்தில் மற்றைய மக்களுடன் இணைந்து வாழவேண்டும் என்று காட்டினார். தமிழ் மொழியை எடுத்தால், பல வகைகளில் சரியான வாழ்க்கைமுறையைக் காட்டியிருக்கிறது. உதாரணமாக, வணக்கம் என்ற சொல்லை நாம் சொல்லும்போது, கையை கூப்பி மரியாதையுடன் வணங்குவதை படிப்பிக்கிறோம். அத்துடன், அக்கா, தம்பி, மாமா, பெரியப்பா போன்ற சொற்கள் பயன்படுத்த காட்டும்போது, ஒருவரின் உறவுமுறையை பெருக்கும்.*

*இன்றைக்கு, தமிழர்கள் புலம்பெயர்ந்து உலகமெங்கும் பரந்து வாழ்கிறார்கள். ஆனாலும், பிள்ளைகள் நல்ல பழக்கவழக்கங்களுடன் வாழவேண்டும் என்று நம்பி, மற்றைய நாடுகளில் பிரபல்யமான மொழியை விட பெற்றோர்கள் தமிழை படிப்பிக்கிறார்கள். இதனால் தான், வாழ்வியல் மொழியான தமிழ் இன்றும் வாழ்ந்து வரும் மொழியாக இருக்கிறது*

***3. தமிழ் பேசும் தேசத்தின் புவியியல் அமைப்பு.***

*ஒரு மொழி அழிவதற்கு ஒரு முக்கிய காரணம் படை எடுப்பு. ஒரு நாடு இன்னொரு நாட்டை*

*கைப்பற்றினால், அங்கே பேசப்பட்ட மொழி அழிந்துபோய்விடும். தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு தமிழை பல்லாயிரம் ஆண்டுகளாக பாதுகாத்து வைத்தது. வரலாற்றில், தமிழ் பெரும்பாலும் இந்தியாவின் தென் பகுதியில் பேசப்பட்டது. அது மூன்று பக்கங்களில் கடலால் சூழப்பட்டிருந்தது. இதனால், ஒரு நாடு தமிழ்நாட்டை கைப்பற்றுவதற்கான வாய்ப்பு குறைவாக இருந்தது. தமிழ்நாடு தூரத்தில், மூலையில் இருந்ததால், இன்னொரு நாடு வட இந்தியா ஊடாக வருவதற்கு பல ஆண்டுகள் எடுத்திருக்கும்.*

*ஆனாலும் வரலாற்றை பார்த்தால், பல பேரரசுகள் இந்தியா முழுவதும் கைப்பற்றினாலும் தமிழ்நாடு தொடர்ந்தும் தப்பி பிழைத்தது. இது எப்படி? ஏனெனில், ஒரு பேரரசு ஏறக்குறைய ஒரு 150 வருடங்களுக்கு தான் ஆட்சி செய்யும். அதாவது ஒரு பேரரசு சில நூற்றாண்டுகளுக்கு ஆட்சி செய்த பின், அது கொஞ்சம் கொஞ்சமாக சிதைவடைய தொடங்கும். உதாரணமாக, சந்திரகுப்தர் ஆரம்பித்த மௌரியப் பேரரசை எடுத்தால், அசோக மன்னன் மேலிலிருந்து வட இந்தியாவிற்கு வந்து இந்தியாவை கைப்பற்றி, கடைசியாக கலிங்க நாட்டையும் கைப்பற்றினார். ஆனால், அதற்கு பின் அவரின் பிள்ளைகள் ஆட்சி செய்யும்போது அவரின் பலமும் ஆர்வமும் இருக்கவில்லை. இதனால், தூரத்தில் இருந்த தமிழ்நாட்டிறகு வர முதலே, அப்பேரரசு சிதைவடைய தொடங்கி, தமிழ்நாடு தப்பி பிழைத்தது. அதே போல், 16ஆம் நூற்றண்டில் கடலூடாக படை எடுப்பு நடைபெற்றது. போத்துகேயரும், ஒல்லாந்தரும் தமிழ்நாட்டின் கடற்கரைகளில் மட்டும் ஆட்சி செய்ததால் தமிழ் அந்த காலத்தில் தொடர்ந்து வாழ்ந்தது. ஆங்கிலேயர் காலத்தில், அவர்கள் முழு இந்தியாவும் கைப்பற்றினாலும் சுதந்திர போர்கள் நடந்ததால், அவர்கள் மொழியின் அழிவிற்கு முக்கியம் கொடுக்கவில்லை.*

*எனவே தமிழ் நாட்டின் புவியியல் அமைப்பு தமிழ்மொழியைப் பல்லாயிரம் ஆண்டுகளாக அழிவிலிருந்து காப்பாற்றியது.*

***எதிர்கால தமிழ்.***

*தமிழ் இப்போது தொடர்ந்து வளர்கிறது. இன்றைய சர்வதேச வலைப்பின்னலால் உறுதியாக வாழ்கிறது. ஆனால், தமிழ் எதிர்காலத்தில் அழியாமல் பாதுகாப்பதற்கு நாம் இன்று பல வேலைகள் செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு தமிழை படிப்பிக்கலாம், பிள்ளைகளை தமிழ் பாடசாலைகளுக்கு கொண்டுபோகலாம், தமிழ் போட்டிகளில் பங்குபற்றுவதும் இலக்கியம் எழுதுவதும் ஊக்குவிக்கலாம், மற்றும் தமிழ் விழாக்களுக்கு கூட்டிக்கொண்டுபோகலாம். ஆனால. மிக முக்கியமாக, நாம் உலகில் எங்கே வசித்தாலும், வீட்டில் தமிழ் பேசினால் தான் எங்கள் மொழி தொடர்ந்தும் அடுத்த சந்ததியினருக்கு போய் சேரும்.*

*தமிழின் எதிர்காலம் எங்கள் கைகளில் இருக்கிறது. வாழ்க தமிழ்!*

## ஏன் எல்லா நாட்களும் சமையல் செய்ய வேண்டும்?


*-பிரதீபா பாலாஜி*

*சமையல் எல்லோரும் செய்யலாம்,ஆனால் எல்லோரும் தினமும் சமைப்பதில்லை. இதனால் நமக்கு தேவையான உணவுகள் எல்லா நாட்களும் கிடைப்பதில்லை. நாம் ஏன் எல்லா நாட்களும் சமைக்கவேண்டும்?*

*வீட்டிலே,தினசரி சமைப்பதன் மூலம் உங்களின் உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உதவும். வீட்டு சமையல் புத்துணர்சியும் மிகுதியான சுவையும் உடையதாக இருப்பதால் நமக்கு நிறைய நன்மைகளை அது தரும்.*

*எல்லோரும் சமைக்க கற்றுக்கொண்டால் அவர்களுடைய விருப்பமான உணவு வகைகளை உண்டு சுவைக்கலாம். இதனால் நீங்கள் பல நாட்டு சமையல் கலையையும் கற்றுத்தேர்ச்சி பெறலாம்.*

*சமையல் கலையில் ஆர்வம் உள்ளவர்களாய் இருந்துவிட்டால், பிறகு நாம் தினமும் சுவையான உணவை சமைக்கவும், ருசிக்கவும் அது மட்டுமன்றி நாம் பாரம்பரிய உணவுக்கலாச்சாரத்தை பிறருக்கு வெளிப்படுத்தவும் உதவும்*



# பயம் காட்டும் பதினாறு

*-சியாமளா யோகேஸ்வரன்*

*அன்னையின் கருவறையிலிருந்து கள்ளமற்ற வெள்ளை உள்ளங்கொண்ட மழலையாய் காலடி எடுத்து வைத்த குழந்தைகள் வளர வளர, அவர்களுடன் நாமும் சேர்ந்து ஒவ்வொரு காலகட்டத்திலும் வேறு வேறு பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றோம். பால் குடித்த குழந்தை தூங்காததுதான் முதலில் பெரிய பிரச்சனையாக இருந்தது. ஆனால் நாட்கள் கழிந்து குழந்தைகள் வளர, பயமறியாப் பருவமான பதினாறே எமக்குப் பயங்காட்டும் பருவமாகிப் போனது. வளர வளரச் சூழலும் சுற்றி இருக்கும் நட்புகளுமே ஒரு குழந்தையின் எண்ணத்தையும் அதன் சிந்தனையின் போக்கையும் மாற்றி விடும் பெரிய காரணிகளாகி விடுவதுடன் கையாளக் கடினமான பருவமும் அதுவாகவே மாறி விடுகின்றது. குழந்தை வளர்ப்பு என்பதை ஒரு கலை என்பதா அல்லது ஒரு கற்கை நெறி என்பதா என்று சொல்லத் தெரியவில்லை. பிள்ளை வளர்ப்புக் கற்கை நெறியில் பாண்டித்தியம் பெற்ற பின்னர் நாங்கள் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை என்பதால் எமக்கும் அது அனுபவமே.*

*உலகில் நெளிவு சுளிவுகளைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு தன் மனதுக்கு மட்டும் உண்மையாய் வாழும் உள்ளமொன்றே மாறிவரும் இவ்வுலகில் வாழ்வதற்கான வெற்றியின் சூத்திரம். ''பொய் பேசாதே'' என்று புகட்டப்பட்டு வளர்க்கப்படும் பிள்ளை பொய் பேசினால் தான் வாழ முடியும் என்றொரு சூழ்நிலைக்குத் தள்ளப்படும் போது மனதளவில் பாதிக்கப்பட்டு குற்ற உணர்ச்சிக்கு உள்ளாகின்றது. அல்லது கூடப் பழகுபவர் பொய் சொன்னது தெரிய வந்த சூழலில் அதை மன்னித்து மறக்க முடியாமல் அதை பெருங்குற்றமாகக் எடுத்துக் கொள்வதால், உறவுகளிடையே பெரும் விரிசல் ஏற்பட்ட நிலையோ அல்லது உறவுகளில் நம்பிக்கை இழந்து மனதில் காயம் பட்டு உடைந்து போய் விடும் நிலையோ ஏற்பட்டு விடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எல்லோருமே நல்லவராய் இல்லாத ஒரு உலகில் எந்த அளவுக்கு ஒரு பிள்ளையை உத்தமனாக வளர்க்க வேண்டும் என்று சந்தேகம் வராத பெற்றோர்களே இந்தக் காலத்தில் இருக்க முடியாது. ஏனென்றால் அந்தக் காலத்தில் விடாமல் ஓடி வெற்றிக்கோட்டைத் தாண்டுவதற்கு உண்மையான உழைப்பும் நெஞ்சில் நேர்மையும் இருந்தால் மட்டும் போதுமானதாய் இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் எல்லோரையுமே நல்லவன் என்று நம்பி நடந்து சரிவைச் சந்தித்த சம்பவங்களும் மனதளவில் உடைந்து நொருங்கிப் போன சம்பவங்களும் தான் அதிகமாயிருக்கின்றன.*

*நேர்முகத்தேர்வு என்று போகும் போது முன் அனுபவம் இருந்தால் முன்னுரிமை எனப்படும் போது பொய் சொன்னால் தான் வாழ்க்கையை ஆரம்பிக்க முடிகின்றது. அப்படிப்பார்த்தால் பொய் சொல்லக்கூடாது என்று கண்டித்துப் பிள்ளைகளை வளர்ப்பது கூடப் பெரும் தவறோ என்றுதான் தோன்றுகிறது. சொந்த ஊரில் பலதையும் பத்தையும் அடிபட்டு வளர்ந்த எங்களுக்கு வாழ்வின் வளைவு நெளிவுகளும் மனித மனங்களின் போக்கையும் உணர்ந்து நடப்பது ஒன்றும் கடினமானதாயிருக்காத போது கூட அவ்வப்போது அடிபட்டுத் தான் மேலதிகப் பாடம் கற்றுக் கொள்ள வேண்டியதாயிருக்கின்றது. பிறந்த நாள் கொண்டாட்டங்களிலோ அல்லது ஒன்று கூடல்களிலோ மட்டுமே வீட்டு உறுப்பினர்களைத் தவிர்த்து வேற்று மனிதர்களுடன் பழகச் சந்தர்ப்பம் கிடைக்கின்ற எமது குழந்தைகளுக்கு, மனிதமுகங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் மறுக்கப்பட்ட நிலையில் பெற்றோராகிய நாம் தான் வாழ்க்கையின் கடினப் பாதை பற்றிய அறிமுகத்தைக் கொடுக்க வேண்டியவர்களாயும் இருக்கின்றோம்.*

*எத்தனைதான் பக்குவமாய் பலவற்றை எடுத்துச் சொல்லிப் பார்த்துப் பார்த்து வளர்த்திருந்தாலும் பதின்மவயதினிலே பருவமும் சேர்ந்து கோளாறு செய்வதில் குழம்பிப் போயிருக்கின்ற பிள்ளைகளையும் அதனால் மனமுடைந்து போயிருக்கின்ற பெற்றோரையும் கூட கண்டிருக்கின்றோம். பிள்ளைகள் பெற்றோரது சொற்கேட்டு அது சரியென்றால் ஏற்றுக் கொண்டு நடப்பதும், உடன்பாடில்லையென்றால் பெற்றோருடன் கலந்துரையாடி சமரசம் செய்து கொள்வதும் ஆரோக்கியமான உறவின் பின்னணியிலேயே நிகழும். பத்து பன்னிரண்டு வயது வரை பெற்றோரின் கண்டிப்புக்கு பயந்து நடக்கும் பிள்ளைகள் அந்த வயதைத் தாண்டியபின் தமது இஷ்டத்துக்கு நடக்க விழைவதும், பெற்றோரும் தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளை என்று தம்*

கண்டிப்பைக் குறைத்துக் கொள்வதால் திடீரெனக் கிடைத்த சுதந்திரத்தில் பிள்ளைகள் திசை மாறிப் போகத் தொடங்குவதையும் நம் கண்கூடாய்க் காண்கின்றோம்.

பதின்ம வயதை எட்டும் வரை நண்பர்களாகத் திரிந்தவர்கள் உடனேயே பெரியவர்கள் போன்று அனைத்தையும் செய்வதற்கு உரித்துக் கிடைத்து விட்டவர்கள் போன்று நடந்து கொள்ளத் தொடங்குவதும், அப்படியான ஒருவனை "கதாநாயகன்" போன்று நடத்துவதும் ஒத்து வராதவர்களை "உதவாத ஊமைகள்" என்று கழற்றி விடுவதும் பக்குவமின்மையோ அல்லது வயதுக்கோளாறோ அன்றி வேறில்லை. அவர்கள் பயணிக்கும் பாதை அபாயகரமானது என்று தெரிந்திருந்தும் ஒரு அளவுக்கு மேல் தடுத்து நிறுத்த முடியாதவர்களாய் பார்வையாளர்களாய் மனது வலிக்க மௌனிகளாயும் கையாலாகாதவர்களாயும் இருக்க வேண்டிய ஒரு கட்டாயச் சூழ்நிலைக்குப் பெற்றோர்கள் வரக்கூடாது என்றால் அதற்கான வழிமுறைகளை முன்னரேயே வகுத்துக் கொள்ள வேண்டியது கட்டாயமாகின்றது. தவறு செய்யும் போது கண்டிக்கத் தவறுவது எம்மில் பிழை என்றால் கண்டித்த கணம் போகக் கனிவு காட்டி அணைத்துக் கொள்வதும், கண்டித்தமைக்கான விளக்கத்தைச் சொல்லிப் புரிய வைக்க வேண்டியதும் கூட அவசியமாகின்றது. பெற்றோர் என்ற பாத்திரத்துள் நண்பர் என்கின்ற ஒரு நெருக்கமான உறவையும் சரிசமனாகக் கலந்து அதைச் சரியான நேரத்தில் பிரயோகிக்க வேண்டி இருப்பதால் பெற்றோர்கள் என்ற பதவியே சற்றுக் கனமாகிக் கத்தி மேல் நடப்பது போன்றிருந்தாலும் பரஸ்பரப் புரிதல் வந்து விட்டால் குறைந்த பட்சம் ஒருவரையொருவர் புரிந்து கொள்ளவாவது முயற்சி செய்ய முடியும்.

வேலைக்குப் புதிதாக வரும் நிறைய இளைய சமுதாயத்தினரிடையே புதிதாகக் கற்றுக் கொள்ளப்போகின்றோம் என்ற மனப்பாங்கு இல்லாமல் எமக்கு எல்லாமே தெரியும் என்றொரு மனப்பாங்கு இருப்பதால் அவர்களால் எதையுமே புதிதாகக் கற்றுக் கொள்ள முடியாமல் போகின்றது. சிக்கல்கள் இல்லாத வாழ்க்கையுமில்லை பிரச்சனைகள் வராத தொழில் இடங்களுமில்லை. பெற்றோர் விட்டுத்தந்து அனுசரித்துப் போவது போன்று அனைவரும் அவர்களை அணைத்துத் தாங்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதால் யாருடனும் ஒத்துழைத்து நடக்க முடியாமல் போக எங்குமே அவர்களால் நிலைத்து நின்று வெற்றி பெற முடியாமல் போகின்றது. அவுஸ்திரேலியா போன்ற பல்லினச்சூழலில் வாழும்போது, பல நாடுகளில் இருந்து பல்கலாசார பின்னணி கொண்டவர்களுடன் வேலை பார்க்க வேண்டிய அல்லது கற்க வேண்டிய சூழ் நிலை இருக்கும் போது வளைந்து கொடுக்க வேண்டிய கட்டாயம் இருப்பதை பிள்ளைகளுக்கு உணர்த்தி அவர்களைத் தயார்படுத்த வேண்டியிருக்கிறது.

வேலை, கடமை என்று ஓடி உழைத்து விட்டு ஓய்ந்திருக்கும் போது இந்த உலகத்தில் நின்று போராடி வெல்லக் கூடியவர்களாய் எமது பிள்ளைகளை வளர்த்து விட்டிருக்கின்றோம் என்பது தான் எமக்கு முதுமையில் கிடைக்கக் கூடிய பெருவெற்றியாக இருக்க முடியும். கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுக்கின்றோம் தேவையானதையெல்லாம் செய்து கொடுக்கின்றோம் என்பதில் மட்டும் திருப்தி அடைந்து விடாமல் அடுத்தவரை மதிப்பது எப்படி? நல்லனவற்றை எடுத்துக் கொண்டு தீயனவற்றை ஒதுக்குவது எப்படி? வாழ்க்கையின் ஓட்டத்துக்கேற்ப ஓடுவது எப்படி? போன்ற வாழ்க்கைக்குத் தேவையான சின்னச் சின்ன விடயங்களை பள்ளிப் பருவத்தில் அவர்களுக்கு வரக் கூடிய உப்புச்சப்பில்லா விடயத்துடன் தொடர்பு படுத்திப் புரிய வைப்பதன் மூலம் வாழ்வின் பெரும் சவாலுக்கும் முகம் கொடுக்கக் கூடியவர்களாய் அவர்களைத் தயார்படுத்தி விட முடியும். பிள்ளைகளுடன் பேசுவதற்கும் அவர்களின் பிரச்சனைகளைச் செவி மடுக்கவும் நாம் நேரம் ஒதுக்குவதன் மூலம் பெற்றோருடன் எதையும் பகிர்ந்து கொள்ளலாம் எந்தப் பிரச்சனையையும் கலந்தாலோசிக்கலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு ஊட்டி விட வேண்டும்.

தம்முடைய அறையினுள் அடைந்து கொண்டு தமக்கென ஒரு உலகத்தை அமைத்துக் கொண்டு தொழினுட்பத்தின் அத்தனை வசதிகளையும் அனுபவித்துக் கொண்டு வளர்கின்ற பிள்ளைகள், குடும்பம் என்றால் சச்சரவுகள் வரத்தான் செய்யும், வேலை பார்க்கும் இடங்களில் ஒரு குழுவாக வேலை செய்யும் இடங்களில் முரண்பாடுகள் வரத்தான் செய்யும் என்பதெல்லாம் தெரியாமலே வளர்ந்து விடுகின்றார்கள். வாழ்க்கை வெளியில் எப்படி இருக்கிறது என்பது அறியாதவர்களாய் கல்வி, கலை, விளையாட்டு என்று இருந்து விட்டு பெற்றோர் என்ற கவசஓடு நீங்கி தாமாக வெளி உலகைப் பார்க்கும் போது அவர்களுக்கு அத்தனையும் கடினமானதாகவே தோன்றுகின்றது. தற்கொலை வீதமானது ஒரு நாளுக்கு எட்டு என்ற எண்ணிக்கையில் இடம் பெறுவதற்கான காரணம் வாழ்க்கையின் பிரச்சனைகளை சமாளித்து எதிர் நீச்சல் போடுவதற்கான மனதைரியம் இல்லாமைதான் காரணமோ என்று தோன்றுகின்றது. பெற்றோர்களாகிய நாம் பொத்தி பொத்தி

*வைத்து மென்மையானவர்களாய் வளர்க்காமல் எம்முடன் வாழும் போதே பிரச்சனைகளைத் தாமாகக் கையாளக் கூடியவர்களாக வளர்ப்பது எம் கையில் தான் தங்கியிருக்கின்றது.*

*வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற அனைவருமே பரிசுத்தமானவர்களாய் உறவின் அருமை புரிந்து அதை மதிப்பவர்களாய் உண்மையான நட்புக்குத் துரோகம் செய்யாதவர்களாய் இருந்துவிட்டால் வாழ்க்கை தெளிவான நதியில் பயணிக்கும் ஓடமாய் அமைதியாய்ச் சென்று கொண்டிருக்கும். கற்ற பாடங்களுடன் மனதைக் கனமாக்கிக் கொண்டு வாழ்வில் மேலும் போராட மனதைத் திடமாக்கிக் கொள்ளும் பக்குவம் எமது அடுத்த சந்ததியினரிடையே இல்லாமல் போனதில் தமது வாழ்க்கையை முடித்துக் கொண்ட பல அவல நிகழ்வுகளைப் பார்க்கும் போது, எமது குழந்தைகளுக்கு உலகத்தைப் பற்றி இன்னமும் புரிய வைக்க வேண்டிய தார்மீகப்பொறுப்பு பெற்றோராகிய எமது கரங்களில் இருப்பதாகத் தான் தோன்றுகின்றது.*

*வாழ்க்கையில் அடிப்பட்டுப் பழகிக் கொள்ளட்டும் நாம் எல்லாம் பழகிக் கொள்ளவில்லையா என்ற வரட்டுச் சித்தார்ந்தத்தைக் கைவிட்டு விட்டு பிள்ளைகள் புரிந்து கொள்ளக் கூடிய வயதை எட்டிய பின்னர் உலக நடைமுறைகளையும் வாழ்வில் வரக் கூடிய பிரச்சனைகளையும் பற்றி நட்பு ரீதியில் கலந்துரையாடுவது அவர்களுக்கு நிறையப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள உதவும். தொலைக் காட்சியில் பார்த்த ஒரு செய்தியைப் பற்றி விவாதிகும் போது தீய நட்பும் கெட்ட பழக்கங்களும் ஒருவனது வாழ்வை எப்படிச் சிதைக்கும் என்பதை அவர்களாகவே புரிந்து கொள்ள வழி கிடைக்கும். ‘‘இதைச்செய்யாதே, அதைச்செய்யாதே ‘‘என்று கட்டளையிட்டால் அதை எதிர்க்கத் தான் அவர்களது வயதும் சுரப்பிகளும் அவர்களுக்குக் கட்டளையிடும். அது அவர்களது பிழையல்ல. பெற்றோரிடம் மறைக்க வேண்டும் என்று நினைத்து விட்டால் அதற்கான அத்தனை வழிகளையும் அவர்கள் அறிவார்கள். கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் என்றில்லாமல் குழந்தைகள் வளர வளர நல்லது கெட்டதை எடுத்துச் சொல்ல அவர்களுக்கென நேரம் ஒதுக்க வேண்டும். அவர்களின் வெற்றியைக் கொண்டாடும் அதே சமயம், பிழைகள் ஊடாகவும், சவால்கள் ஊடாகவும் வழி நடக்க பெற்றோர் கண்டிப்பாகத் துணை நிற்க வேண்டும்.*

*எமது வாழ்வில் கண்டிப்பையும் கனிவையும் கலந்து எம்வாழ்வைச் செம்மையாக்கிய எமது பெற்றோரின் பங்களிப்பை நாம் இப்போது புரிந்து கொண்டு போற்றுகின்றோமோ அதே போல் இப்போது பாகற்காயாய்க் கசக்கும் எமது அறிவுரைகளையும் எம் பிள்ளைகள் பெற்றோராகும் காலத்தில் புரிந்து கொள்வார்கள். வாழ்க்கை ஒரு வட்டம் என்பது போல் இந்தச் சக்கரமும் சுழன்று கொண்டே தானிருக்கவேண்டும். இதுதான் வாழ்வின் சூட்சுமம். வயது போன காலத்தில் எமது கடமைகளை நாம் செவ்வனே செய்தோம், எம் மூலம் இந்த உலகைக் கண்டவர்களை நற்பிரசைகளாய் வளர்த்தோம் என்ற திருப்தி முதுமையில் தோன்றுமாயின் அதை விடப் பெற்றோர் என்ற பதவிக்கு கிடைக்கும் விருது வேறெதுவும் இருக்க முடியாது. அமைதி என்பது குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். குடும்பம் என்ற நதி சீராகச் செல்லுமாயின் அதுவே சமூகத்துக்கு நாம் செய்யக் கூடிய முதற் சேவை. அந்த வெற்றியின் களிப்பில் அமைதி கொண்ட மனம், அடுத்ததாகச் சமூகத்துக்கு நல்லது செய்ய எண்ணும். எனவே முதற்கடமையாய் குடும்பஸ்தராய் எமது பணியைக் குடும்பத்திலிருந்தே செவ்வனே ஆரம்பிப்போம்.*

## பொங்கல்

*-ஆதனா அகிலன்*

*மலர்களே அழகிய மலர்களே*
*உங்கள் இதழ்களை விரித்து மலருங்களே.*
*காலைக் கதிரவன் வருகின்றான்*
*கை கூப்பி வணங்குங்களே.*

*குயில்களே தேன் குயில்களே,*
*உங்கள் இனிய குரலால் பாடுங்களே.*
*பகலவன் செவிகள் மகிழவே*
*பாடிப் பாடி கூவுங்களே.*

*மயில்களே சுந்தர மயில்களே,*
*உங்கள் தோகை விரித்து ஆடுங்களே,*
*ஆதவன் கண்டு மகிழவே,*
*ஆடி ஆடி அகவுங்களே.*

*தோழர்களே, தோழிகளே,*
*சூரிய கடவுள் வந்துவிட்டான்,*
*தோரணம் கட்டி , கோலம் இட்டு*
*பொங்கல் பொங்கி, அமுது உண்டு*
*பொங்கல் திருநாளைக் கொண்டாடுங்களே.*

# வாழ்க்கை ஒரு பெரும் கதை

*-சுவேத்தா தர்மசீலன்-*

*வாழ்க்கை ஒரு பெரும் கதை*
*அதில் வாழும் ஒவ்வொரு நாளும் அந்த கதையின் ஒரு வசனம்*
*அதில் வாழும் ஒவ்வொரு மாதமும் அந்த கதையின் ஒரு பகுதி*
*அதில் வாழும் ஒவ்வொரு வருடமும் அந்த கதையின் ஓர் அத்தியாயம்*

*தாயின் வயிற்றில் பிறந்தவுடன்,*
*இரண்டு கன்னத்திலும் கண்ணீர் ஓடும்போது,*
*எங்கள் கதையின் முதல் வசனம் எழுதப்படும்.*

*பிறந்து முப்பது நாள் முடிந் து,*
*எங்கள் அடையாளத்துக்கு பெயரும் வைத்தவுடன்,*
*எங்கள் கதையின் இன்னொரு வசனம் எழுதப்படும்.*

*முதன் முதலாய் காலை வைத்து,*
*இரண்டு பாதத்தில் மெது மெதுவாய் நடக்கும்போது,*
*எங்கள் கதையின் ஓர் அத்தியாயம் எழுதப்படும்*

*ஐந்து வயதில் தந்தையின் கையைப் பிடித்து,*
*படிப்பு ஆரம்பிக்க பள்ளிக்கு சென்று, பாடம் கற்கும்போது,*
*எங்கள் கதையின் அறுபதாவது பகுதி எழுதப்படும்*

*ஏழு வயது ஆன பின்,*
*நாலு வயதில் இருக்கும் எங்கள் தங்கையோடு சண்டைபிடிக்கும்போது*
*எங்கள் கதையின் ஏழாவது அத்தியாயம் எழுதப்படும்*

*பதின்ஐந்து வருடம் கழித்து, இருபத்திரெண்டு வயதில்,*
*படிப்பு முடிந்து, பல்கலைகழகத்தின் பட்டம் பெற*
*எங்கள் கதையின் எட்டாயிரத்திமுப்பதாம் வசனம் எழுதப்படும்*

*இன்னும் ஐந்து வருடம் கழித்து,*
*மேளம் முழங்க, நாதசுவரம் ஒலிக்க, வாழ்க்கைத் துணையின் பக்கத்தில் இருக்கும்போது,*
*எங்கள் கதையின் முன்னூற்றி முப்பத்திநாலாம் பகுதி எழுதப்படும்*

*முப்பது வயதில்,*
*கைக் குழந்தையை மடியில் தூக்கி வைத்திரு க்கும்போது,*
*எங்கள் கதையின் முப்பதாம் அத்தியாயம் எழுதப்படும்*

*ஐம்பது வயதில்,*
*பிள்ளைகளுக்காய் ஓடி ஓடி உழைக்கும் போது ,*
*அது எங்கள் கதையின் ஐம்பதாம் அத்தியாயம்.*

*இருபது வரு டம் கழித்து, எழுபது வயதானபின்,*
*ஓய்வு பெற்று, ஒவ்வொரு நாளும் கோவிலிற்கு செல்வது,*
*எங்கள் கதையின் எண்ணூற்றி நாற்பதாம் பகுதி.*

*எங்கள் கதையின் முடிவு வரும் நேரம்,*
*எங்கள் வாழ்க்கையின் பயணத்தை பிரதிபலிக்கும்போது,*
*அங்கே தெரிவது எங்கள் கதையின் முற்றுப்புள்ளி*
*இது தான் வாழ்க்கையின் கதை!*

*இன்பமும் துன்பமும் மாறி மாறிவரும் கதையில்*
*அத்தியாயங்கள் வந்து கொண்டேயிருக்கும்*
*முற்றுப்புள்ளியைக் காணும் வரை!*






எனது குடும்பம்

எனது குடும்பம் சிறியது. எனது குடும்பத்தில் ஆறு அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். எனது குடும்பத்தில் அம்மா, அப்பா, தம்பி, அம்மப்பா, அம்மம்மா உள்ளனர்.

எனது அப்பாவின் பெயர் கலைச்செல்வன். அம்மாவின் பெயர் துர்க்கா தம்பியின் பெயர் கார்த்திகன் அம்மப்பாவின் பெயர் செந்தில்நாயகம் அம்மம்மாவி பெயர் தயாநிதி. எனது குடும்பம் அன்பானது. எனது குடும்பத்தை எனக்கு மிகவும் பிடிக்கும்.

- க. லோகிதன் -




## தைப்பொங்கல்


உழைக்கும் மக்கள் இயற்கைத் தெய்வமாகக் கருதப்படும் சூரியனுக்கும் மற்ற உயிர்களுககும் நன்றி தெரிவிக்கும் நாளே பொங்கல் திருநாள் ஆகும்.

ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயனடையும் பருவமே தை மாதம் ஆகும்.

அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசி, சர்க்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையில் பொங்கலாக்கி சூரியனுக்கு படைத்து, நாமும் உண்டு மகிழும் தமிழர் பண்டிகையே பொங்கல் விழாவாகும்.



ஹரிஷ் வினோதரன்
தரம் 2



1 மீன் நீரில் வாழும் ஒரு விலங்கு.
2 மீன் தண்ணீரில் நீந்தும்.
3 மீனின் உடம்பில் செதில்கள் இருக்கும்.
4 மீன்கள் பல வகைகள் உள்ளன.
5 சிலபேர் வீடுகளில் மீன்களைத் தொட்டிகளிலே வளர்ப்பார்கள்.
6 நான் மீன் பொரித்து சாப்பிடுவேன்.
7 எனக்கு பிடித்த உணவில் மீனும் ஒன்றாகு

நன்றி

அர்ச்சனா
ஆதவன்
வயது 7

# நான் ஏன் தமிழை விரும்புகிறேன்

*வி. திவாகரன்*

*தமிழ் எனது தாய்மொழி. நான் தமிழை விரும்பிப் படிக்கிறேன். தமிகழ் மிகவும் பழமைவாய்ந்தது. தமிழில் பல சிறந்த நூல்கள் இருக்கின்றது. இதில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் எனக்கு மிகவும் விருப்பம். அதில் சில குறள்ப்பாடல்களை நான் பாடமாக்கியுள்ளேன். பாடசாலையில் நான் ஆங்கிலத்தில் படித்தாலும், நண்பர்களேடு ஆங்கிலத்தில் கதைத்தாலும் வீட்டிற்கு வந்தவுடன் அம்மா அப்பாவுடன் தமிழில் தான் கதைப்பேன். நான் கதைக்கும் தமிழைப்பார்த்து எல்லேரும் என்னைப் புகழ்கிறார்கள். நான் தமிழிப் போட்டியில் பங்குபற்றி பல பரிசில்களை வென்றுள்ளேன். இது எனது தமிழ் ஆர்வத்தை மேலும் வளர்க்கிறது. இனிமையான தமிழை எல்லேரும் விரும்பிக் கற்போம்.*

# எனது நாடு இலங்கை.

*வர்ஸ்ஷனா ஜனந்தன்*

*இலங்கை எனது தாய் நாடு. இது மாம்பழம் போன்ற வடிவமானது. இது ஒரு சிறிய தீவாகும். இது ஆசியக் கண்டத்தில் உள்ளது. இலங்கையில் தமிழ் , சிங்கள, முஸ்லீம் மக்கள் வாழ்கின்றார்கள். இது மிகவும் அழகான நாடு , இங்கு பெரிய மலைகளும் கடற்கரையும் உள்ளது. இலங்கையில் தமிழ் சிங்கள ஆங்கில மொழிகள் பேசப்படுகிண்றன. இங்கு சீரான காலநிலை காணப்படுகின்றது. எனக்கு இலங்கைக்கு விடுமுறையில் போக விருப்பம்.*

# அட்டைப்பட விளக்கம்

*மனிதனின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருப்பதும், மனிதனின் வாழ்வின் அடிப்படையாக இருப்பதும் இயற்கையே ஆகும். அந்த இயற்கையின் அடிப்படையே கேசித் தமிழ் மன்றத்தினால் வெளியிடப்படும், இளவேனில் இதழ் 17ன் அட்டைப்படம்.*

*கடல், ஆகாயம், மரங்கள், மலர்கள் என பல இயற்கையை தனது எழிலாகச் சூடி வலம் வருகிறாள் நம் இயற்கை அன்னை. மனிதர்களுக்குத் தேவையான அனைத்து வளங்களையும் வாரி வழங்கும் வள்ளல் அவள். ஆனால், மனிதர்களாகிய நாம், எமது வாழ்வின் அவசரத்தன்மையில், எமது அடிப்படையை மறந்துவிட்டோம். இயற்கை அன்னையை பேற்றிப் பாதுகாப்பது, அவளின் குழந்தைகளாகிய எமது கடமையல்லவா. அதை நினைவுறுத்தும் முகமாகவே இயற்கை அன்னையை எமது அட்டைப்படமாக பிரசுரித்துள்ளோம். மேலும் அவுஸ்திரேலிய நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் காட்டுதீயினையும் அதனால் எற்பட்ட அவலங்களையும் நினைவூட்டுவதாகவும் வரையப்பட்டுள்ளது.*

*ஒவ்வொரு வருடமும் வெளிவரும் இதழாக இள்வேனில் இருந்தாலும், இவ்வருடம் மிகவும் சிறப்பானது. காரணம் கேசித்தமிழ் மன்றம் தனது பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இதனை சித்தரிக்கும் முகமாகவே, காட்டுத்தீயின் நெருப்பினூடே CTM 10 என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். தொடர்ந்தும் இம்மன்றத்தின் செயற்பாடுகளில் உங்களது பங்களிப்பையும், ஆதரவியும் நல்குவீராக,*

# குறுக்கெழுத்துப் புதிர் – விடை

*-சாருகா சிவசுதன் -*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 வா | த் | 14 தி | ய | ம் | | | 8 ப | ந் | 4 து |
| ழை | | சை | | | 2 ப | 16 க | ல் | | ம் |
| ப் | | | 3 க | | | வு | | 15 ழை | பி |
| 11 ப | த் | 7 தி | ரி | 10 கை | 6 க | ள் | | | க் |
| ழ | | ரை | | 5 தோ | ட் | ட | ம் | | கை |
| ம் | | ப் | | | ட | | | | |
| | | ப | | 17 வ | ட | க் | 13 கு | | 12 க |
| 18 ப | ட் | ட | ம் | | ம் | | ர | | ரு |
| | | ம் | | 19 | | | ங் | | ம் |
| 9 பு | லி | | 20 வை | கா | சி | | கு | | பு |

**குறுக்காக**

1. *Instrument* என்பதன் தமிழ் சொல்
2. *நிலவு – இரவு , சூரியன் - ?*
5. *இதில் பழங்களும் காய்கறிகளும் வளர்க்கலாம்*
8. *விளையாட்டுப் பொருள்*
9. *வரிகள் உள்ள மிருகம்*
11. *செய்தி தாள்கள்*
15. *இது செய்தால் தண்டிக்கப்படுவீர்கள் ( குழம்பியுள்ளது)*
17. *திசைகாட்டியில் அம்புகுறி காட்டும் திசை.*
18. *காற்றாடி*
19. *சித்திரைக்குப் பின் வரும் மாதம்*

**மேலிருந்து கீழாக.**

1. *ஒரு பழம்*
3. *விறகு எரித்த பின் வரும்/யானை*
4. *யானைக்கும் பிள்ளையாருக்கும் இது பொதுவானது.*
6. *Building என்பதன் தமிழ்ச் சொல்*
7. *இதை வீட்டிலும் திரையரங்கிலும் பார்க்கலாம்*
8. *இது போனால் சொல்லும் போச்சு*
10. *மாடு- கொம்பு , மயில் - ? ( குழம்பியுள்ளது)*
12. *அலங்காரத்திற்கு தைப்பொங்கலில் பாவிக்கப்படுகிறது.*
13. *கூர்ப்பில் எங்களின் முன்னோர்.*
14. *தெற்கு இதற்கு ஒரு உதாரணம்*
15. *ஆலயத்தில் இருப்பார்கள்( குழம்பியுள்ளது)*
16. *நடக்க அவசியமானது ( குழம்பியுள்ளது)*

***சரியான விடையளித்தவர்கள்***

1. ***டர்ஷி முருகானந்தா.***
2. ***அபிரன்.***
3. ***தவமணி மாணிக்கவாசகர்***
4. ***காயத்திரி சங்கரப்பிள்ளை***

இளவேனில் சஞ்சிகைக்கான ஆக்கங்களை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**Casey Tamil Manram**
**PO Box 2516,**
**Fountain Gate,**
**Vic 3805**

மின்னஞ்சல்**: editor@caseytamilmanram.org.au**

# PERPETUA MONEY TRANSFER

**WorldWide**

We Guarantee the best rate for

**SRI LANKA, INDIA, CANADA, UK & EUROPE**

- SAME DAY BANK TRANSFER & HOME DELIVERY
- RESPONSIBLE CUSTOMER SERVICE
- CONVENIENT WORLDWIDE LOCATIONS
- EASY, QUICK INTERNET MONEY TRANSFER

COMMERCIAL BANK · Bank of Ceylon BOC · PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE · SEYLAN BANK PLC · HNB · සම්පත් බැංකුව சம்பத் வங்கி SampathBank · NSB National Savings Bank · cash Xpress easier - faster - safer

**Send Money to any Bank in Sri Lanka**

**Direct Deposit**

Perpetua Money Transfer
BSB No: 033186
Acc No: 401283
Westpac Bank Australia

Hub Arcade, 28/15 -23 Langhorne St. Dandenong VIC 3175
Tel/Fax: 03 8712 1406 Mob: 0423 094 478 - Email: pmoneytransfer@ymail.com



# LMC LANDMARK COMPUTERS

✔ Quality
✔ Service
✔ Price
✔ Advice

CELEBRATING COMPUTER EXCELLENCE 25 YEARS

**Melbourne's most trusted IT store since 1994** | **1300 133 165**

Established in 1994, we are Melbourne's premier computer store, that is dedicated to serving business and home customers from across Australia. We have unparalleled range of the latest laptops, desktops, software, computer parts and everything else in IT. We also offer affordable computer and laptop repairs too!









**Home**
**Students**
**Office**
**Business**
**Corporate**
**Government**
**Schools**
**Networking**

**For the lowest prices, largest range from all leading brands.., Visit to LMC!**

**Mitcham** (Head Office)
19 Redland Drive
**03 9899 4424**

**Melbourne CBD**
180 Queen Street
**03 9600 2244**

**Open Hours**
Monday - Friday 9am to 5pm
Closed Victorian Public Holidays

தமிழர் நம் பெருமை சொல்லும்
“தமிழர் திருநாள்”
மென்மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்

Wheelers Hill
CLINIC

## Dr Sukanya Muraledaran

**Phone: 9561 3200**

**847 Ferntree Gully Road**
**Wheelers Hill VIC 3150**